உ

சிவமயம்.

VIII.D.55

# திருவிரிஞ்சைப்புராணம்.

சைவ

873

## எல்லப்பநாவலர்

செய்தருளிய மூலமும்.

வித்வான்-காஞ்சீபுரம்

## சபாபதிமுதலியார்

பழையவுரையைச் சிறுபான்மைதழுவிக்கொண்டு

இயற்றிய பொழிப்புரையும்

புங்கத்தூர்

கந்தசாமிமுதலியாரால்

பால்குரிகி

குமாரையரவர்களது

கலாநிதி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

உருத்திரோற்காரிஞு கார்த்திகைமீ. 1863.

COPY RIGHT (RESERVED.)

இஃது

சார்வரி௵ மார்கழி மீ 15 தேதி சனிவாரம் வாங்கியது. 29—12—1900.

கிரய விலை

0-8-0

# புராண அட்டவணை.



| சருக்கங்களின்பெயர். | பக்கம். | பாட்டுத் தொகை. |
| --- | --- | --- |
| பாயிரம். | ௩ | ௧௦ |
| நைமிசாரணியசருக்கம். | ௭ | ௪௫ |
| கௌரீபுரசருக்கம். | ௨௪ | ௧௪௨ |
| விண்டுபுரிசருக்கம். | ௭௬ | ௧௩ |
| கரபுரிசருக்கம். | ௮௦ | ௧௯ |
| விரிஞ்சைப்புரிசருக்கம். | ௮௫ | ௧௮ |
| வழித்துணைச்சருக்கம். | ௯௧ | ௪௭ |
| பரலோகச்சருக்கம். | ௧௦௭ | ௩௮ |
| பாலனுக்குத்திருமுடிவளைத்தசருக்கம். | ௧௧௯ | ௪௧ |



## பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- | --- |
| ௧௨ | ௧௩ | ௩ | தருமதாய் | தருவதாய் |
| ௨௧ | ௩௯ | ௩ | வருமுதத்த | வருமுகத்த |
| ௩௯ | ௪௪ | ௧ | மொருர்தி | மொருத்தி |
| ,, | ௪௫ | ௨ | மிதிக்க | மிதக்க |
| ௫௯ | — | ௩௧ | மிதியப்பட்டு | மிதிக்கப்பட்டு |
| ௬௦ | — | ௭ | கவுரி | கவுசிலை |
| ௬௫ | — | ௩௧ | வாதி | வாளி |
| ௭௦ | — | ௨௪ | கவுசிகி | காளி |
| ,, | — | ௩௧ | வால்முனை | வால்முனை |
| ௮௪ | — | ௧௧ | பிறப்பிற் | ருதுவிற் |
| ௮௮ | ௧௧ | ௪ | பிறிக்கும் | பிறக்கும் |
| ௯௩ | — | ௮ | தனபாலகன் | தனபாலன் |
| ௯௬ | — | ௧௬ | படும்படி | படும்படிகூறுகின்றார் |
| ௧௦௩ | — | ௧௩ | றென்று | தென்று |
| ௧௦௪ | ௩௯ | ௧ | பயரு | பயருய் |
| ௧௦௮ | ௫ | ௨ | மாகதேசி | மாகமதேசி |
| ௧௧௫ | — | ௨௬ | இகுவரைச் | இருவரைச் |
| ,, | — | ௨௭ | தாயின | தாயின் |
| ௧௨௦ | — | ௨௧ | வர்ம | கர்ம |
| ,, | — | ௨௨ | கனை | வகை |
| ௧௨௧ | ௯ | ௪ | தோன்றினனே | தொன்றினனே. |

௧௪-பக்கம்-௧௯-பாடல்-௨-அடி-ஓகைகண்பினர் என்பதற்குப்பொருள் சந்தோஷமும் சுற்றத்தாரிடத்தில் நட்பும் உடைய இல்லறத்தார் என்று இருக்கவேணும்.

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

வித்வான்-காஞ்சீபுரம்

சபாபதிமுதலியார்

மாணுக்கரில் ஒருவராகிய

புரசை - அஷ்டாவதானம்

## சபாபதிமுதலியாரியற்றியது.

(நிலைமண்டிலவாசிரியப்பா.)

நிறைநீர்முழக்க நீங்காப்புவிக்கண்
பொறைநீர்மெய்த்தவம் பொலிதருமுறையுளாந்
தொண்டருள்ளிருக்குந் தோன்றுத்தனிமுதல்
விண்டலத்தமரர் மேதகுமாருயிர்க்
குயிராம்பரம்பொரு ளுயரியதருமப்
பயிர்விளைந்துலகெலாம் பரிக்கவந்துதவிய
கருணைப்பெருக்கங் கவினுமேனி
மரகதத்திருவளர் வல்லிபடர்ந்துள
செம்மல்கருமலை சென்னப்பிழையின்
மம்மர்கொளாநெறி வழியடியர்க்கருள்
வேதமூர்த்தி விளம்புமோர்வணிகற்
காதியில்வழித் துணையாய்வந்தந்தணற்
கொருவரு மெளிதி னுறலருமுத்தி
தருநெறிகாட்டித் தற்கியல்பூசனை
யூறுறுவணமோ ருயர்மறைப்புதல்வற்
காறும்பிறையு மவிர்செஞ்சடைமுடி
வளைத்தருள்பெருமான் மலர்த்தாள்பழிச்சித்
திளைக்கவாநந்தஞ் செறியுநர்தமைமெய்டுத்
தாள்வானமர்ந்துள நீள்பெருவளம்பதி
திருவிரிஞ்சைப்புரிச் சீர்கெழுமான்மியம்
இருவருக்கும்பின்வே றொருவருமிலரொரு

மாறுகொண்டெற்ற வன்மைவெந்திட
வீறிலமுதுரு வாய்வளரொத்தை
யருணைப்புராணமு மனுகுநர்கொடும்புல
விருளைத்துரக்கு மெழிறருவிருத்த
கிரிமான்மியமுங் கிளர் *செவ்வந்திச்
சரிதமுந்தீர்த்த கிரியின்சரிதமும்
இன்னமுஞ்சிலதலத் துக்கியல்புராணமுந்
தன்னிகர்தருசெந் தமிழிற்புனைந்த
அரனெறிவழாஅல் லப்பநாவலர்கோன்
விரிபொருட்சொன்னலம் வியன்றொடைவிகற்பஞ்
செறியவுருவக முதலியசீரணி
யுறவின்றோசைய தாயமுதூற்றெழீஇ
யவரவருள்ளத் தமைவுறப்பணித்ததைத்
திவளுறுசொற்களின் றிண்மையும்வைப்பும்
ஆழ்ச்சியுமின்பமு மளக்கருட்பன்மணி
காழ்த்தசெம்பவளங் கதிர்காணித்திலம்
அனைத்தையுமூழ்கி யறிந்தளப்பானென
மனத்திணுணர்வெனும் வான்றுணைகொண்டாங்
கதனதனுட்ப மியார்க்கும்புலப்படப்
பதனுறவாய்ந்து பதப்பொருள்கருத்து
விளங்குறநன்கு விரித்துரைசெய்தீண்
டுளங்கிளர்சான்றோ ருடைத்தாய்நிலைத்த
தண்டகநாடெனச் சாற்றும்வான்கரும்பிற்
கொண்டசாறட்ட கொழுஞ்சுவைக்கட்டியின்
பன்னிருநெடும்பெயர் பகர்வுறுங்காஞ்சி
மன்னியகுரிசில் வண்டமிழ்ப்பைங்கூழ்
வளர்த்துவிளைத்தவ் வண்மையையறிந்தோர்க்
களிக்கும்வேளாண்மை யறநெறிவளையா
வள்ளலெம்மனோர் வளம்பெறவென்றும்
உள்ளதோர்பெருந் துணை யோனும்வேதாகம
சைவசித்தாந்தத் தத்துவஞான

---

*செவ்வந்திமான்மியமென்பது—திருச்சிராப்பள்ளித்தலபுராணமாம்.


# சிறப்புப்பாயிரம்.

மெய்வளர்சேயொளி மிருங்குணமாமணி
தண்ணளிமகோததி சபாபதியறிஞ
னுண்ணுணர்வுடையோர் நோக்கினர்வியப்பத்
தந்தனனாகத் தண்மலர்த்தண்டலைப்
டைந்துணர்துதைந்த பனிமுகைத்துருமம்
புயன்மிசையளவும் புங்கத்தாருறை
நயனுறும்அருணை சலவேணற்றவம்
ஈதெனத்தோன்று மெய்நிற்கந்தசாமி
மாதொருபாகனூர் மலரடிக்கன்பு
பயிலுமுளத்தினன் பன்னூன்முயலா
இயலுறுமச்சி லியற்றுவித்தனனே.

சிறப்புப்பாயிரம்

முற்றிற்று.

---



சிவமயம்.

# திருவிரிஞ்சைப்புராணம்.

## காப்பு.

### விநாயகர் துதி.

வேதவித்தர்விரிஞ்சைவளம்பதிக்
காதையென்னுங்கடற்கரைகாட்டுமால்
போதகத்தியற்பொன்னின்கணபதி
சீதளப்பொற்றிருவடித்தாமரை.

இதன்பொருள். வேதகாரணராகிய பரமசிவம் வீற்றிருக்கும் வளப்பம்பொருந்திய திருவிரிஞ்சைப்புரத்தின் சரித்திரமாகிய ஒரு சமுத்திரக்கரையைக் காட்டாநிற்கும் யானைமுகமுள்ள பொன்னிற்கணபதியினுடைய குளிர்ச்சியும் பொலிவுமுள்ள பொன்னிறத்தாமரைமலர்போன்ற திருவடிகள்—என்றவாறு.

### சுப்பிரமணியசுவாமி துதி.

மரகதக்கொடி பங்கினில்வள்ளலார்
பரகதிக்கு வழித்துணைபண்ணிய
திரகதைக்கருள் செய்திடுத்தோகையாங்
குரகதத்தி லுலவுங்குமரனே.

இ-ள். மரகதக்கொடியென்னும் பார்வதிதேவியாருடைய பங்கிலிருக்கும் வள்ளற்றன்மையுடைய மார்க்கசகாயரானவர் பரகதிக்கு வழித்துணைசெய்தருளிய ஸ்திரமாகியசரித்திரத்துக்குக் கிருபைசெய்தருளுவர் மயிலாகிய பரியிலாரோகணித்துக்கொண்டு உலாவுகின்ற சுப்பிரமணியக்கடவுள்—எ-று.

---

# பாயிரம்.

## கடவுள்வணக்கம்.

### பரசிவவணக்கம்.

வேறு. தொன்மையுடன்புதுமையின்றிக் குணம்வேறின்றித்
தோற்றமுடனுருசமின்றித் தொடர்ச்சியின்றி
நன்மையுடன்றீமையின்றி முதலீறின்றி
நடுவுமின்றிப்பரவிந்து நாதநீங்கி
யுன்மனையுங்கடந்துசுக வுருவாயெல்லா
வுயிர்க்குயிராயொளியாகி வெளியாயோங்குஞ்
சின்மயனைக்கரபுரியி லமருங்கோவைச்
சிந்திப்போங்கரங்களினால் வந்திப்போமே.

இ-ள். பழமையுடன் புதுமையில்லாமலும் யாதொருகுணமுமில்லாமலும் உருவமும்-உருவநாசமுமில்லாமலும் பந்தமில்லாமலும் நன்மையுடன் றீமையில்லாமலும் ஆதி அந்தமில்லாமலும் நடுவில்லாமலும் பரவிந்துநாதங்களையுங்கடந்து உன்மனையையுங் கடந்து ஆனந்தவடிவமாய் எல்லாவுயிர்க்குமுயிராகியும் ஒளியாகியும் வெளியாகியும் ஓங்கிய ஞானசொரூபனாகிக் கரபுரியென்றுமொருபெயருள்ள திருவிரிஞ்சைப்புரத்தில்வாழ்கின்ற பரசிவத்தைத் தியானஞ்செய்து கைகளால்தொழுவோம்—எ-று.

உன்மனையென்பது - உபாதானசத்தி. இது குருமுன்னிலையிலறியத்தக்கது. (க)

### மார்க்கசகாயர் துதி.

முளைத்தவனைமுனையிடத்தின் முழுத்தவனைமகிழ்ந்தவ
னை முருகன்வேலாற்
றுளைத்தவனையெனவெனது பழவினையையகலத்தவனை
ச் சுடர்க்குன்றாகக்

## பாயிரம்.

கிளைத்தவரைவளைத்தவரை யொருசிறுவன்வினைபோடு
கிளரச்சென்னி
வளைத்தவரைவணிகனுக்கு வழித்துணையாய்நடந்தவரை
வழுத்துவோமே.

இ-ள். இயல்பாகஉண்டாகிய மலைகளினுச்சியிலிருந்து குறைவில்லாமல் தவஞ்செய்கின்ற முனிவர்களைக்கண்டுமகிழ்ந்தவரைச், சுப்பிரமணியக்கடவுளானவர் வேலாயுதத்தினால் கிரவுஞ்சகிரியைத் துளைத்ததுபோல என்பழவினையைக்கெடுத்தவரை, ஒளியுள்ளமலையாகத்தோன்றிய மகமேருவை வில்லாகவளைத்தவரை, ஒருபிராமணப்புதல்வன்சுற்றத்தாருடனுய்யும்படி திருமுடிவணங்கினவரை,ஒருவர்த்தகனுக்குவழித்துணையாகநடந்தவரைத்துதிசெய்வோம்—எ-று.

## மரகதவல்லியம்மைதுதி.

வேறு. சுரபுரத்திறையரியயன்றொழும்பரஞ்சுடரைச்
சிரபுரத்திறையருந்துபாலுதவியதேனை
பரபுரத்துறையமர்ந்திடுமயிலைபாரமுதைக்
கரபுரத்துறையிறைவியைக்கருதுவேன்கருத்தால்.

இ-ள். தேவலோகத்திறைவனாகிய இந்திரனும்-திருமாலும்-பிரமனுந்தொழும் மேலானசோதிசொரூபத்தை, சிரபுரமென்னுஞ் சீகாழியில் திருவவதாரஞ்செய்த திருஞானசம்பந்தசுவாமிகளுண்ட ஞானப்பாலருளிய தேன்போல அடியார்களுள்ளத்தி லினிப்பவளை,பரமசிவனுடைய திருமேனியிலொருபாகமாக அமர்ந்தருள்கின்ற மயில்போன்றவளை, கிடைத்தற்கரியஅமுதம்போலிருப்பவளை, கரபுரமென்னுந் திருவிரிஞ்சைப்பதியில்வீற்றிருக்கும் பார்வதிதேவியாரை யென்னுடையமனதில் தியானிப்பேன்—எ-று.

(பரஞ்சுடராவது - பராசக்தி.)

## விநாயகர் துதி.

வேறு. மலையேற்றுதிரைபுரந்தோனயன்பரவும்வழித்துணைவர்
மகிழுஞ்சேயைக்
கலையேற்றுமடமயிலுமலர்க்குயிலுந்தொழுமுமையாள்
களிக்கும்வாழ்வை

## திருவிரிஞ்சைப்புராணம்.

விலையேற்றம்படைத்தமணி வெயில்விரிக்குமெயில்பு
டைசூழ் விரிஞ்சைமேவு
மலையேற்றுமதக்களிற்று முகத்தவனைபடிவணங்கி
யன்புகூர்வாம்.

இ-ள். கோவர்த்தனகிரியைக் குடையாக எடுத்துப் பசுக்களைரக்ஷித்த திருமால் - பிரமன் என்னுமிவர்கள் துதிசெய்யாநின்ற மார்க்கசகாயரென்னும் பரமசிவன் மகிழ்ச்சிகொள்ளுந் திருமைந்தரும், தன்னைத்தொழும் அடியார்களுக்குக் கல்வியுணர்ச்சி அதிகரிக்கும்படி அனுக்கிரகஞ்செய்யும் இளமயில்போலச்சாயலையுடைய சரஸ்வதியும், செந்தாமரைமலரில்வாழுங் குயில்மொழியொத்த மொழியினையுடைய திருமகளும்வணங்குகின்ற பார்வதிதேவியார் களிப்படையத்தக்க வாழ்வாயிருப்பவரும், அதிகவிலைபெற்ற மணிகள் பதிக்கப்பட்டுப் பிரகாசத்தைவீசுகின்ற மதில்சூழ்ந்த திருவிரிஞ்சையில்வீற்றிருக்கும் அலைவீசும்படியான மதநீரைப்பொழிகின்ற யானைமுகமுள்ளவருமாகிய விநாயகமூர்த்தியினுடைய திருவடியையவணங்கிப் பத்திசெய்வாம்—எ-று. (௪)

### சுப்பிரமணியசுவாமி துதி.

அந்திப்போதழகுறவே நடித்தருளும்வழித்துணைவ
ரருளுங்கோவை
வந்திப்போர்நினைத்தபடி மயிலேறியயிலெடுத்து
வருஞ்செவ்வேளைச்
சந்திப்போமலர்சொரிவோம் புகழ்ந்திடுவோமவன்க
மலத் தாளுந்தோளுஞ்
சிந்திப்போமாதலினு னமதுபழவினைகளெல்லாஞ்
சிந்திப்போமே.

இ-ள். பிரதோஷகாலத்தில் கயிலையங்கிரியினிடத்து மிகுந்தசவுந்தரியத்துடன் நடனஞ்செய்தருளுகின்ற மார்க்கசகாயர் நெற்றிக்கண்ணினிடமாக அருளிச்செய்த இமையவரும் வணங்குகின்றஅடியார்கள் தியானஞ்செய்தபடி திருக்கரத்தில் - வேலாயுதமேந்தி மயிலிலாரோகணித்துக்கொண்டுவந்தருளுஞ் செவ்வேளென்னுந் திருநாமமுடையவருமாகிய சுப்பிரமணியசுவாமியைத் தரிசிப்

போம், தரிசித்து மலர்களால் அருச்சிப்போம், அருச்சித்து அவருடைய செந்தாமரைமலர்போன்ற திருவடிகளையுந்திருத்தோள்களையுஞ் சிந்திப்போம், சிந்தித்துப் (புகழ்ந்திடுவோம்.) ஆதலினால் நம்முடைய பழையவினைகளெல்லாஞ் சிந்திப்போம்—எ-று.

சூரியன் அஸ்தமிக்கிறதற்குமுன் மூன்றேமுக்கால் நாழிகையும், அஸ்தமனமானபின் மூன்றேமுக்கால்நாழிகையளவும் பிரதோஷகாலமாதலால்அந்திப்போதென்றார். மன்மதனுக்கும் வேளென்று பெயரிருப்பதினால் சுப்பிரமணியக்கடவுளுக்குச் செவ்வேளென்றுவழங்குகின்றது. மன்மதனுக்கு மாரவேளெனவழங்குகின்றது.

## மூவர்முதலிகள் துதி.

வேறு. ஒன்றுமுமைகொங்கையிற்பாலுண்டாரடிவணங்கி
யன்றுததிநீந்துமரசின்பதம்போற்றி
மன்றுசெறிவெண்ணெயின்பால்வந்துவழக்குரைத்த
துன்றுபுகழ்த்தம்பிரான்றோழனடிபோற்றி.

இ-ள். பரமசிவத்தினுடைய இடப்பாகத்திற்பொருந்திய பார்வதிதேவியார்அருளிச்செய்த திருமுலைப்பாலுண்டருளிய திருஞானசம்பந்தசுவாமிகளுடைய திருவடிகளை வணங்கியும், முற்காலத்தில் கற்றூண்தெப்பமாகச் சமுத்திரத்தைக்கடந்து கரையேறிய திருநாவுக்கரசுசுவாமிகளுடையதிருவடிகளைப் போற்றிசெய்தும், திருவெண்ணெய்நல்லூரில் நிறைந்திருந்த பிராமணசபையில்வந்து வழக்குச்சொல்லிய புகழ்நிறைந்ததம்பிரான் தோழனென்னுஞ் சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய திருவடிகளையும் வணங்குகிறோம்—எ-று. (சு)

## நந்திதேவர் - மாணிக்கவாசகசுவாமிகள் சண்டேசநாயனார் துதி.

நாதனாருணவணியநந்தியைநவின்று
வாதவூருறைமாணிக்கவாசகவள்ளல்
பாதநூபுரப்பரிமளப்பங்கயம்பணிந்து
தாதைதாளினைத்தடிந்தவன்றாளிணைத்தரிப்பாம்.

இ-ள். பரமசிவனுடைய திருவருள்பெற்றிருக்கும் நந்திதேவரைத்துதிசெய்து,திருவாதவூரில் திருவவதாரஞ்செய்த மாணிக்கவா

சகசவாமிகளுடைய பரிமளமுள்ள தாமரைமலர்போன்றதாய் நூபுரமணிந்துள்ள திருவடிகளைவணங்கிப் பிதாவினுடைய தாளைத்தடிந்த சண்டேசநாயனாருடைய திருவடிகளையும் எம்முடைய உள்ளத்தில் வைத்துக்கொள்வாம்—எ-று. (எ)

## திருத்தொண்டர்துதி.

நந்திவாகனத்துருத்திரகணங்களைநண்ணி
மந்திரேசரைமந்திரமகேசரைமருவி
யைந்துமாமுகத்திறைபவர்பதவியையடைந்து
பந்தநீங்கியவறுபதின்மூவரைப்பணிவாம்.

இ-ள். நந்திவாகனமுள்ள உருத்திரகணங்களையடைந்து மந்திரேசரையும் மந்திரமகேசரையும் அடைந்து ஐந்துதிருமுகங்களுள்ள சதாசிவத்தினுடைய பதவியையடைந்து ஆணவமலபந்தம் நீங்கியிருக்கும் அறுபத்துமூன்றுநாயன்மார்களையும் பணிகின்றோம்.

மந்திரேசர் - பஞ்சாக்ஷரமுதலிய மகாமந்திரங்களெல்லாம் ஒருருவமாயிருப்பவர் இவருக்கு அதிஷ்டானமாயிருப்பவர் மந்திரமகேசர். இவர்களும் உருத்திரர்களும் சுத்தாசுத்தபுவனவாசிகள். சதாசிவமிருப்பது சுத்தபுவனம். விஷ்ணுமுதலிய தேவர்களு மானிடர்முதலிய உயிர்களுமிருப்பது அசுத்தபுவனம். (அ)

## அவையடக்கம்.

உற்றசெய்யுளாலருணைமாநகர்ச்சிறப்புரைத்தேன்
குற்றமானதுகுணத்தவர்பொறுத்துளங்கொண்டா
ரிற்றைநாளுமச்செருக்கினாலிதனையுமிசைத்தேன்
கற்றமாந்தருக்கனைத்தையும்பொறுப்பதுகடனால்.

இ-ள். பொருந்திய விருத்தச்செய்யுளால் திருவருணையென்னுந்தலத்தின் மான்மியத்தைச்சொன்னேன் அதிலுள்ளகுற்றத்தைச் சத்துவகுணமுள்ள பெரியோர்கள் க்ஷமித்து மனதில் அங்கீகரித்துக்கொண்டார்கள். அந்தச்செருக்கினாலிக்காலத்திலும் இந்தப்புராணத்தையுஞ் சொன்னேன் கற்றுணர்ந்த சான்றோர்களுக்கு அதுவிதுவென்னுதலெல்லாவற்றையும் பொறுப்பதுகடனாம்.எ-று.

வேறு. சத்திபுரியானதுவும் விண்டுபுரியானதுவுந் தலத்திறுடி
மெத்தகரபுரியெனவும்விரிஞ்சைபுரியெனவுமுன்னே விதித்தவாறும்
பத்திசெயும்வணிகனுக்குவழித்துணையாய்நடந்துமொரு பனவன்வேண்ட
முத்திவழிகாட்டியதும் பாலகனுக்கிறங்கியது மொழிகுவேனே.

இ-ள். சத்திபுரியானவாறும் - விண்டுபுரியானவாறும் - இந்தத் தலத்தின்பெயர்கள். கரபுரியென்றும் - திருவிரிஞ்சைபுரியென்றும் - ஆதியில்விதித்தவாறும் பத்திசெய்த ஒருவர்த்தகனுக்குவழித்துணையாய் நடந்தவாறும், ஒருபிராமணன் துதிசெய்ய அவனுக்கு மோக்ஷவழிகாட்டியவாறும், ஒருபிராமணப்புதல்வனுக்குப் பரமசிவன் திருமுடியிறங்கியவாறும்சொல்லுகின்றேன்—எ-று. (ய)

பாயிரமுற்றியது.

---

## நைமிசாரணியசருக்கம்.

இருமுகனார்கரந்துணியச் சதுமுகனார்சிரந்துணிய வெறிந்தவைந்து
திருமுகனாறுமுகனொ ருமகனார்க்குபதேசஞ் செய்தாரந்தக்
குருமுகமாயறிந்தகதை வடமொழியால்வதிட்டருடன் குமரன்சொன்ன
வொருமுகமாய்த் தமிழ்ப்படுத்திப் புலவரொலா நகைபுரிய வுரைக்கலுற்றேன்.

இ-ள். இருமுகமுள்ள அக்கினிதேவனுடைய கை துணியவும், நான்குமுகமுள்ள பிரமதேவனுடைய சிரசு துணியவும் வெட்டிய ஐந்துதிருமுகமுள்ள பரமசிவமானது ஆறுதிருமுகமுள்ளவராகிய தம்முடையபுத்திரருக் குபதேசஞ்செய்தார். அந்தக்குருமுகமாயறிந்த திருவிரிஞ்சைப்புரச் சரிதத்தைச்சுப்பிரமணியக்கடவுள் வசிஷ்டமகாமுனிவருக்கு வடமொழியாலருளிச்செய்தார். அதை நான் ஒருமுகமாய்த் தமிழ்ப்படுத்தி (இதிலுள்ள குற்றங்களைநோக்கிப்) புலவரெல்லாம் நகைசெய்யச்சொல்லுகின்றேன்—எ-று.

பரமசிவம் சுப்பிரமணியசுவாமிக்கருள்செய்தனர். அவர் வதிஷ்டருக்கருள்செய்தனர். அவ்வாறு நான் குருமுகமாயறியாமல் சொன்னேனென்பது தோன்ற ஒருமுகமாயென்றார். (க)

நந்துபாலவராகமேசெறிந்திடுநலத்தாற்
சந்தனத்தினிற்றிலதமேவிடுகின்றதவத்தாற்
சிந்துவாரமுங்காசியுஞ்சிறந்திடுஞ்சிறப்பா
லந்தமாதவர்நிகர்ப்பதுநைமிசாரணியம்.

இ-ள். சங்கம் - பால் - இவற்றைப்போல அவர்களுடைய திருமேனிவிளங்கும் நன்மையினாலும் நெற்றியிலணிந்த சந்தனக்கீற்றின்மேல் திலதப்பொட்டு அணிகின்ற தவவேடத்தாலும், சமுத்திரதீரத்திலும்-காசிக்ஷேத்திரத்திலும்-வாசஞ்செய்யுஞ் சிறப்பினாலும், அங்கிருக்கு முனிவர்களையொப்பாயிருக்கின்றது நைமிசாரணியம்—எ-று.

(நைமிசாரணியத்தைக் குறிக்கும்போது) விர்த்தியாகும். இளமைப்பருவமுள்ள பன்றிகள் சஞ்சரிக்குந்தன்மையினாலும், சமுத்திரத்தினுங் காசியினுஞ்சிறப்புற்ற பெருமையினாலும், சந்தனவிருக்ஷத்தைப் பார்க்கிலும் திலதவிருக்ஷம் மேலிட்டிருப்பதினாலும் எனப்பொருளுரைத்துக்கொள்க. சமுத்திரமுங்காசியுஞ் சந்தனமுந்திலதமும் செம்மொழிச்சிலேடை. மற்றொன்று பிரிமொழிச்சிலேடை. முனிவர்கள் பிரமதேவனிடத்திற்சென்று நாங்கள் தவஞ்செய்யும்பொருட்டு ஒருஇடம் நிருமித்துச் சொல்லவேண்டுமென வினவியபோது அவரொருதருப்பையை வட்டமாகமுடிந்து பூமியில்விட்டு இதுபோய்த் தங்கினவிடமே தவஞ்செய்யத்தக்கவிடமென்று நிருமித்தபடி தங்கினகாரணத்தால் நைமிசவனமென்று சொல்லப்பட்டது. நேமிசம்பந்தம் நைமிசமென்றாயிற்று. அதனுடன் அரணியமென்னும் பதஞ்சேர்ந்து நைமிசாரணியமெனலாயிற்று. நேமியென்பது - வட்டம். சிந்துவாரமென்னும் மூன்றுவதுசரணமும் பிரிமொழிச் சிலேடையாகக் கூறுஞ் சான்றோர்களுமிருப்பர். (உ)

ஆறுகால்கயமருவிகளிலஞ்சிகளனைத்து
மாறுகால்மும்புனலறுவொழுக்கமேயடையு

மாறுகால்செறிதருவனங்கனிகளுமலரு
மாறுகாலமுஞ்செறிந்திடுநைமிசாரணியம்.

இ-ள். நைமிசாரணியத்தில் நதிகள் - கால்கள் - கசங்கள் - அருவிகள்-குளங்கள் - என்னுமிவைகளெல்லாம் ஆறுகாலத்திலும் நீர்ப்பெருக்கொழியாத ஒழுக்கத்தையடைந்திருக்கும். வண்டுகள் நெருங்கிய விருக்ஷங்களுள்ள அவ்வனங்களில் பழங்களும் - மலர்களும் - ஆறுகாலமும் நிறைந்திருக்கும்—எ-று.

ஆறுகாலமாவன—கார்காலம் - கூதிர்காலம் - முன்பனிக்காலம்- பின்பனிக்காலம் - இளவேனிற்காலம் - முதிர்வேனிற்காலம் - என்பனவாம். இவைகட்குமாதங்கள் ஆவணிமாதமுதல் இரண்டிரண்டுமாதமாகக்கொள்க. (௫)

மாசிலாவொளிநைமிசாரணியத்தின்மருங்கே
காசலாவியவொருதடமுளததன்கரைமேல்
வாசமார்பொடியிறைத்திடுங்கேதகைமலர்கள்
பூசநீறுபொன்மடலினூற்றருகுதல்போலும்.

இ-ள். குற்றமில்லாத ஒளியினையுடைய நைமிசாரணியத்தினருகில் மணிகள்விளங்குகின்ற ஒருதடாகமுண்டு அதன் கரையினிடத்தில் தாழைமலர்கள் வாசனைபொருந்திய மகரந்தங்களை யிறைப்பது. பூசிக்கொள்ளப் பொன்மடலினால் நீறுதருவதுபோலு மிருக்கின்றது—எ-று.

மடல் என்பது - இதழ். விபூதியென்றதற் கேற்பமடலென்றார். விபூதிமடலென வழங்குவதினாலும் அறிக. (௬)

அனையவெல்லையிலிருந்தவரிருந்தவரனேகர்
முனிவில்கண்ணுவன்சவுந்தனனாரணமுனிவன்
வினையிலத்திரிபராசரன்களுசிவான்மீகன்
சனகமாமுனிகௌதமன்கௌதமன்றநயன்.

இ-ள். அத்தன்மையுள்ள நைமிசாரணியத்தில் அனேகமுனிவர்களிருந்தார்கள். (அவர்கள்பெயரென்னவெனில்) சாந்தகுணமுள்ள கண்ணுவமுனிவர் - சவுந்தனமுனிவர் - ஆரணமுனிவர் - பாபரகிதராகிய அத்திரிமுனிவர் - பராசரமுனிவர் - களுசிமுனிவர்-வான்மீகமுனிவர் - சனகமுனிவர் - கௌதமமுனிவர் - அவருடையபுத்திரராகிய சதானந்தமுனிவர்—எ-று. (௭)

வாதராயணமுனிவரனுரோமசன்மதங்கன்
சூதமாமுனிசைமினிபாரத்துவாசன்
காதிபாலகன்பிருகுமாமுனிவரன்கபிலன்
ஆதிநாரதனகத்தியன்புலத்தியனிவருள்.

இ-ள். வியாதமுனிவர் - உரோமசமுனிவர் - மதங்கமுனிவர்- சூதமுனிவர் - சைமினிமுனிவர் - பாரத்துவாசமுனிவர்-காதிமகாராசனுடைய புத்திரராகிய விசுவாமித்திரமுனிவர் - பிருகுமுனிவர் - கபிலமுனிவர்-இவர்கள்முதல் நாரதமுனிவர்-அகஸ்தியமுனிவர்-புலத்தியமுனிவர் - என்னுமிவருக்குள்—எ-று.

முனிவரன்என்பது - முனிசிரேஷ்டன். வரனெனும்பதத்தைப் பெயர்கள்தோறுஞ் சேர்த்துக்கொள்க. (௬)

பதிகள்யாவினும்விளங்கியவிரிஞ்சையம்பதிபோ
னதிகள்யாவினும்விளங்கியபாலிமாநதிபோற்
றுதிகுலாவியதாரகைக்கணத்துளேதோன்று
மதியமாமெனவிளங்கினார்மறுவிலாவதிட்டர்.

இ-ள். சிவஸ்தலங்களெல்லாவற்றிலுஞ் சிறந்ததாகிய விரிஞ்சையம்பதிபோலவும், நதிகளெல்லாவற்றினும் மேலானதாய் விளங்குகின்ற பாலிநதிபோலவும், யாவருந் துதிக்குந் துதிவிளங்குகின்ற நக்ஷத்திரக்கூட்டங்களுக்குள் விளங்குகின்ற சந்திரனைப்போலவுங் குற்றமில்லாத வசிஷ்டமுனிவர் விளங்கினர்—எ-று. (௭)

கந்தனெழுத்தாறையுமனத்தினுற்கருதி
யிந்துகாந்தவெண்மணிவடங்கரத்தினுலியற்ற
லந்தவானகத்தியங்கமாதவர்தமையழைக்க
வந்தமாதவமுனிவர்களறுவரைமானும்.

இ-ள். சுப்பிரமணியக்கடவுளுடைய அக்ஷரமாகிய ஆறெழுத்தையும் மனதினுற்கருதிக்கொண்டு சந்திரகாந்தக்கல்மணிகள்கோத்த செபவடத்தை அவருடையகையினுல் நடத்துதல் ஆகாயத்தில் தங்களுடன் சஞ்சரிக்கும்படி அந்தவசிஷ்டனை அழைக்க வந்த ஆறுமுனிவர்களையொப்பாகும்—எ-று.

சப்தமுனிவர்களிலொருவராகிய வசிஷ்டமுனிவர் இங்குத்தனித்திருப்பதினுல் இவரையழைக்க மற்றைய ஆறுமுனிவரும் வந்ததுபோலிருக்கின்றது செபவடமாகியபடிகமணியென்றார். முனிவ

ரருவனையொத்ததென்றதனுல் செபமாலைமணிகளும் ஆறெனக் கூறப்பட்டது. முனிவர்கள் பரிசுத்தராய் விபூதியணிந்திருக்கும் பிரகாசத்தினுல் அவர்களைப் படிகத்துக்கொப்பாகச்சொல்லினர். எழுமுனிவர்களுடையபெயர்—அத்திரி - ஆங்கிரசன் - கௌதமன் - சமதக்கினி - பாரத்துவாசன் - வசிஷ்டன் - விசுவாமித்திரன். (அ)

பவளவல்லியாற்பாதமூக்கமைத்திடும்படிகத்
தவளவான்மணிக்கமண்டலமொருபுடைதயங்க
வவனிமேவுமம்முனிவனுந்தநயனையழைக்கப்
புவனியீன்றவன்வரவிடுமெகினமேபோலும்.

இ-ள். பவளக்கொடியினுல் பாதமூழுக்கும் அமைத்துப் படிகமணியினுல் செய்யப்பட்டுத் தவளநிறமுள்ள கமண்டலமானது ஒருபுறத்தில்விளங்குவது பூலோகத்திலிருக்கும் வசிஷ்டமுனிவரைத் தன்னிடத்துக்கு அழைத்துக்கொண்டுவரும்பொருட்டுப் பிரமதேவன்அனுப்பிய அன்னம்போலிருக்கின்றது—எ-று.

படிகத்தினுலாகிய கமண்டலம் பாதமூழுக்கும் பவளநிறமுள்ளதாயிருப்பதால் அன்னப்பக்ஷிபோலக் கூறினர். (௯)

அரியகாலமும்பலபலகடந்திடுமவர்க்குப்
புரிமுந்நூல்வடம்பலபலவாகமேற்பொலித
றிரியுமைம்பொறியாகியவிலங்கினைச்செறித்து
வரியுநீள்வலையொழுக்கியசெயலினைமானும்.

இ-ள். அருமையாகியகாலங்களும் அநேகமாகக்கடந்திருக்கும் அவருக்குப்பூணநூலும் பலபலவாக மார்பினிடத்தில் விளங்குதல் விடயங்களிற் செல்லுகின்ற பஞ்சேந்திரியங்களாகிய மிருகங்களைப்பிடித்துக் கட்டும்படியான நீண்ட வலைவீசியிருக்குந்தன்மையை யொப்பாகும்—எ-று. (௰)

உற்றுநேரொனவருந்திரிபதகைபோலொளிர
நெற்றிமேலவரிடுந்திரிபுண்டரநீறு
குற்றமூன்றையுங்குணமொருமூன்றையுங்குலைத்து
வெற்றியாகவேயுயர்த்தமுப்பதாகைபோல்விளங்கும்.

இ-ள். பொருந்தி நேராகவருகின்ற கங்கையைப்போலவிளங்கும்படி நெற்றியினிடத்தில் திரிபுண்டரமாகத்தரித்திருக்கிற விபூதி

யான்று மூக்குற்றங்களையும்-மூக்குணங்களையுங்கெடுத்து வெற்றி யுண்டாக உயர்த்திருக்கிற மூன்றுகொடிபோல்விளங்கும்—எ-று.

திரிபுண்டரமாவது - மூன்றுவரையாகத்தரித்தல். மூக்குற்றமாவது - காமம் - வெகுளி - மயக்கம். மூக்குணமாவது - ராசதம் - தாமதம் - சாத்துவீகம்-என்பவை. சுத்தசாத்துவீகத்தை அடைந்திருப்பவராதலால் குணமூன்றுங்கடந்தவரென்றார். குற்றம் - குணம் - இவைகளேயன்றி, ஆணவம்-கன்மம்-மாயையென்னு மிவைகளையும் நீக்குமென்னுங்குறிதோன்ற மூன்றுவரையாகத்தரிப்பது முப்பதாகையென்பதனை திருவாசகத்தில் நீற்றுக்கொடியென்றருளிச்செய்திருப்பதினாலும் ஐயமறத்தெளிக. கங்கை-வெண்மைநிறம். (௰௧)

இன்னவாறிருந்தருளியமுனிவரையிறைஞ்சி
மன்னுமாதவருரைசெய்வார்வஷிட்டமாதவரோ
யின்னமோர்கதைகேட்பதுவிரும்பினோமென்று
ரன்னதேதெனவவருடன்புகலுவாரறவோர்.

இ-ள். இவ்வாறு தவத்திலிருந்தருளும் வசிஷ்டமுனிவரைவணங்கி அங்கிருக்கு முனிவரெல்லாரும் வசிஷ்டமகாமுனிவரே யின்னமுமொருசரித்திரங் கேட்கவேண்டுமென்று விருப்பங்கொண்டோமென்றார்கள். (அவ்வாறுவினவிய முனிவர்களைநோக்கி) அது எந்தச்சரித்திரமென்று வசிஷ்டர்சொல்ல அவருடன் அம்முனிவர்கள்சொல்லுகின்றார்கள் —எ-று. (௰௨)

சிவதலங்களின்பெருமையுமவைகளின்சிறப்பும்
பவமகன்றதும்பலபலநெறிகளாற்பகர்ந்தீர்
தவபலன்களைவெளிதினிற்றருமதாய்த்தனக்கோ
ருவமையின்றித்தலங்களாயுலகின்வேறுண்டோ.

இ-ள். சிவஸ்தலங்களினுடைய மான்மியமும், அவைகளின்சிறப்பும், அவைகளைத்தரிசித்தவர்கள் செனனமரணம் நீங்கினதும், பலமுறையாகச்சொன்னீர். அந்தத்தலங்களுக்குள் தபோபலங்களைவெளிதிற்றருவதாயும், தனக் கொப்பொன்று மில்லாததாயுமிவ்வுலகத்தில் வேறுதலமுண்டோ—எ-று. (௰௩)

என்றுகூறுமென்றருந்தவர்பணிவினுலுரைக்க
நன்றுகூறினீரெனச்சொல்லிவசிட்டனார்நயந்து

குன்றுகூறிடுஞ்சுடரிலைநெடியவேற்குமா
னன்றுகூறியகதையிதென்றவர்க்கெலாமறைவார்.

இ-ள். என்றுசொல்லி தேவரீர் எங்களுக்குத் தெரிவிக்கவேண்டு மென்று அந்தமுனிவர்கள் வணக்கத்துடன்கேட்க, வசிஷ்டர் அதைக்கேட்டு மிகவுமகிழ்ந்து நல்லவிசேஷஞ்சொல்லினீர்கள் முனிவர்களேகேளுங்கள். கிரவுஞ்சகிரியைப்பிளந்த பிரகாசமுடன் தகட்டுவடிவினையுடையதாய் நீண்ட வேலாயுதமேந்திய சுப்பிரமணியக்கடவுள் எனக்குமுன்னாளிற் றிருவாய்மலர்ந்தருளிய சரித்திரமிதுவென்று அம்முனிவர்களுக்கெல்லாஞ் சொல்லுகின்றார்—எ-று.

ஆதியாகியபரசிவன்பராபரையருளால்
நாதமானதுவிரிதலுமதனிலேநண்ணி
வேதமாகமபதங்கண்மந்திரங்களைவிதித்தா
ரோதமின்றியசதாசிவத்திறையவரோற்றார்.

இ-ள். ஆதியாகிய பரசிவம் பராசத்தி என்னுமிவர்கள் அருளினால் பரநாதம் உண்டானவளவில் அதில்நின்று நிட்களசொரூபமாகிய சதாசிவம்தோன்றி வேதங்களையும் - ஆகமவாக்கியங்களையும் - மந்திரங்களையும் - உண்டாக்கினர். அவைகளை குற்றமில்லாத அந்தச் சதாசிவனிடமாகப் புவனகர்த்தாக்கள் பெற்றுக்கொண்டார்கள்—எ-று. எவ்வாறெனில். (௰௫)

சிவசதாசிவமுதலினோரணுசதாசிவனுக்
கவைதெளிந்திடவிளம்பினாரணுசதாசிவரு
நவமதாகவேயனந்தாதியருடனவின்றார்
புவனநாயகன்பெறும்படியனந்தரும்புகன்றார்.

இ-ள். சிவசதாசிவமுதலானவர்கள் அணுசதாசிவர்களுக்கு அந்தவேதாகமமுதலானவைகளைத் தெளியும்படி கூறினார்கள். அந்த அணுசதாசிவர்கள் நவமாகிய அநந்தாதிகளுக்குவிளம்பினார்கள். அந்த அநந்தாதிகள் புவனகர்த்தாவாகிய ஸ்ரீநீலகண்டர் பெற்றுக்கொள்ளும்படி கூறினர்கள்—எ-று. (௰௬)

உருத்திராதிகட்கிறைவராய்க்கயிலையிலுறைவார்
விருத்தியாகமாலயன்மகபதியுடன்விரித்தா
ரருத்திமாலயன்மகபதிமுனிவருக்குரைத்தார்
பரித்தபூமியினடந்ததுபரம்பரையாக.

இ-ள். உருத்திராதியர்களுக்கு இறைவராய்க் கயிலையில்வீற்றி ருக்கும் ஸ்ரீநீலகண்டமூர்த்தியானவர் அந்தவேதாகமமுதலானவை கள் விர்த்தியாகும்படி மகாவிஷ்ணு - பிரமதேவன் - தேவேந்தி ரன் - என்னுமிவர்களுக்கு உபதேசித்தனர். அவைகளை விஷ்ணு முதலாகிய மூவரும் முனிவர்களுக்கு அனுக்கிரகஞ்செய்தார்கள், அதற்குமேல் இவ்வுலகத்தில் அந்தவேதமுதலானவை பாம்பரை யாக விரிந்தன—எ-று. (௰எ)

வேதமாகமமிரண்டுமேயநாதியில்விளைந்த
தாதிநூன்மறையநாதிநூலாகமமாகு
மோதினுன்மறையளித்திடுமிமையவருலக
நாதனாகமம்படித்தவர்க்குறுங்கதிநாலும்.

இ-ள். வேதம் - ஆகமம் - என்னுமிவ்விரண்டுமே அநாதியிலு ண்டானது. அவ்வாறுண்டாயினவேதம் ஆதிநூல்-ஆகமம்-அநாதி நூலாம். அந்த வேதத்தையோதினால் சுவர்க்கலோகத்தைக்கொடுக் கும். சிவாகமம் ஓதினபேர்களுக்குச் சாலோகம் - சாமீபம் - சா ரூபம் - சாயுச்சியமென்னும்-நாலுபதங்களுங்கிடைக்கும்—எ-று.

ஆகமங்களையறிஞர்சம்மதியெனவனறவா
ரோகைநண்பினர்சம்மதிபுராணமென்றுரைப்பார்
பாகிலின்புறுங்காவியநாடகப்பரப்பைத்
தோகைமங்கையர்சம்மதியாமெனச்சொல்வார்.

இ-ள். ஆகமங்களை ஞானவான்களுடைய சம்மதியெனச்சொ ல்வார்கள். சதானந்தத்தையும் எல்லாவுயிர்களிடத்தும் அருளையு ம்வைத்திருக்கிற முனிவர்களுக்குப் புராணங்கள் சம்மதியெனப் பெரியோர்கள் சொல்வார்கள். மாதர்களுக்குச் சம்மதியாயிருப் பவை காவியங்கள் - நாடகங்கள் - என்பார்கள்—எ-று. (௰௯)

உவமையின்றியபுராணமூவாறினுளொன்றுஞ்
சிவபுராணமோதலத்தினையதிகமாச்செப்பு
நவமதாகவேயுரைக்கதனுடைவெலாநவில்வோம்
பவமுறாதுநீர்செவிகளாற்பருகுமின்பனவீர்.

இ-ள். நிகரில்லாத பதினெண்புராணங்களில் ஒன்றாகிய சிவபு ராணமானது சிவஸ்தலங்களை யதிகமாகச்சொல்லுகின்றது. அற்பு

தமுண்டாக அந்தக்கிரமத்தை யுங்களுக்குச்சொல்லுகிறேம் முனிவர்களே, சனனம் அடையாதவண்ணம் நீங்கள் செவிகளால் அந்த அமிர்தத்தை யுண்ணக்கடவீர்கள்—எ-று. (உ௰)

எற்றமாந்தலமாயிரகோடியிவ்விடத்தி
னூற்றுநாலிரண்டவையிலும்பெருமையாநுவல்வர்
சாற்றுமித்தலத்ததிகமீரொன்பதுதலங்க
ளாற்றல்சேருமத்தலங்களிலொருதலமதிகம்.

இ-ள். இவ்வுலகத்தில் மேன்மையுள்ளதலங்கள் ஆயிரகோடியுண்டு. அவைகளிலும் நூற்றெட்டுஸ்தலங்கள் விசேஷமானவைகளென்றுசொல்வார்கள். சொல்லுகின்ற இந்தத்தலங்களுக்குள் பதினெட்டுஸ்தலம் விசேஷமானது. அந்தத்தலங்களில் ஒருதலம் அதிகமானது—எ-று. (உக)

கருதுமப்பதிதோன்றிடுங்கரைகளிற்றிரைகள்
பொருதலைத்திடும்பாலிமாநதிவலப்புறத்தில்
பரிதியொப்பெனவிளங்குவர்பவளவாய்ப்பணைத்தோள்
மரகதக்கொடிதழுவியவழித்துணைமருந்தர்.

இ-ள். கருதுகின்ற அந்தத்தலத்தில் காணப்படுகின்ற கரைகளில் அலைகள்பொருதலைக்கும் பாலிமாநதியினுடைய வலப்புறத்தில் பவளம்போன்ற திருவாயும், பசியமூங்கிலையொத்த திருத்தோள்களுமுடைய மரகதவல்லியென்னும் பார்வதிதேவியார்தழுவிய வழித்துணைமருந்தரென்கிற மார்க்கசகாயர் சூரியனுக்கொப்பாகவிளங்குவர்—எ-று. (உஉ)

(அஞ்ஞானவிருளைநீக்குதலால்-பரிதியொப்பென்றார்.)

கானநாரதன்முழக்கிடவடியவர்களிக்க
மீனநேர்விழிமரகதக்கொடியுமைவிரும்ப
வானநாடரும்வழுத்திடவழித்துணைமருந்தர்
ஞானநாடகம்புரிந்திடும்விரிஞ்சைமாநகரம்.

இ-ள். நாரதர் - வீணையிசைவாசிக்கவும், அடியார்கள்-களிப்படையவும், சேல்மீனையொத்த கண்களையுடைய மரகதவல்லித்தாய் விரும்பவும், தேவர்கள் - தோத்திரஞ்செய்யவும், வழித்துணைம

ருந்தர் - ஆனந்தநடனஞ் செய்யும்படியிருப்பது திருவிரிஞ்சை மாநகரம்—எ-று. (உ௩)

காலைமாலையிற்கவுரியுமுகுந்தனுங்காணுஞ்
சாலநீண்மறைக்குரிசிலுந்தவம்புரிநகரம்
பாலிமாநதித்திரைகளில்வருமன்னப்பறவை
நாலுவீதியுமுலவியவிரிஞ்சைமாநகரம்.

இ-ள். பாலிமாநதியலைகளில்வருகின்ற அன்னப்பக்ஷிகள் நான்குவீதிகளிலு முலாவிக்கொண்டிருக்கும்படியான வளப்பமுள்ள விரிஞ்சைமாநகரமானது காலைப்பொழுதிலு மாலைப்பொழுதிலும் பார்வதிதேவியாருந் திருமாலுந் தரிசிக்கப்படும்நகரம். மிகுதியாகப் பிரமதேவனும் தவஞ்செய்தநகரம்—எ-று. (உ௪)

கதிரவன்பரிக்கால்களாற்றுவைபடுகமுகம்
பொதியவிழ்ந்திளம்பாளைதேன்பொழிந்திடுநகர
மதில்வலம்புரிசெயலெனவயறொறும்பாலி
நதிவலம்புரிவலம்புரிவிரிஞ்சைமாநகரம்.

இ-ள். திருமதிலை வலஞ்செய்யுந் தன்மைபோல கழனிகள்தோறும் பாலாற்றிலுண்டாகும் வலம்புரிச்சங்குகள் வலம்புரிகின்ற விரிஞ்சைமாநகரமானது சூரியனுடைய தேர்க்குதிரைக்காலால் மிதிக்கப்படுகிற கமுகமரங்கள் கட்டவிழ்ந்து இளம்பாளைகள் தேன்பொழியும்படியாகிய வளப்பமுள்ளநகரம்—எ-று. (உ௫)

வேறு. அரமியத்தன்பரோடுபுணருவார்விழித்துவீசு
மரகதமணிபாற்பாலியெகினங்கண்மறுகியோடுந்
தெரிவையர்தமதுபாதச்சிறுநடைகவருமென்று
வெருவியவடித்துச்சேராதெறிந்தவைவிலக்கல்போலும்.

இ-ள். நிலாமுற்றத்தில் தத்தங்கணவர்களுடன் பொருந்தியிருக்குமாதர்கள் நித்திரைநீங்கி யெறிந்துவிடுகிற மரகதரத்தினங்களினால் பாலிநதியிலிருக்கும் அன்னப்பக்ஷிகள் மனங்கலங்கியோடுகின்றவை. அந்தமாதர்கள் தங்களுடைய சிறியபாதநடையைக் கற்றுக்கொள்ளுமென்றுகருதி அவைகள் அஞ்சும்படிஅடித்துச் சேரவொட்டாமல் மணிகளையெறிந்து ஓட்டிவிடுதல்போ லிருக்கின்றன—எ-று. (உ௬)

(நிலாமுற்றம் - மேல்மேலுலாவுமிடம்.)

மேலரமியத்துமின்னார்வீணையினிசைக்காவெய்யோன்
கோலவேழ்பரியுந்தாழவிரதமுங்குனிந்துதாழ்தல்
வாலகிலியர்காளிந்தத்தலத்திலேமலையாள்பங்கர்
பாலனுக்கிறங்கினரிப்பரிசெனப்பகர்தல்போலும்.

இ-ள். மேனுலாவும்படியான நிலாமுற்றத்திலிருந்து மாதர்கள் வாசிக்கும் வீணையினிசைக்குவிரும்பிச் சூரியனுடைய அழகுள்ள ஏழ்என்னும் பெயருள்ள குதிரைதாழத் தேருங்குனிந்து தாழ்தல் வாலகில்லியர்களே பார்வதியை யிடப்பாகத்திலுடைய மார்க்க சகாயனென்னும் பரமசிவன் ஒருபிராமணப்பிள்ளைக்காக இந்தத் தலத்தினிடத்தில் இவ்வாறு முடிஇறங்கினரென்று தெரிவிப்பதை யொத்திருக்கின்றது—எ-று.

ஏழ்பரி என்பதனை - ஏழுகுதிரைகளென்று கூறுதலுமுண்டு. வாலகில்லியர்களென்பவர்கள் - சிலரிஷிகள். (உஎ)

புஞ்சமாங்கரிகள்காலைப்பொழுததன்புறம்புசேற
னஞ்சமார்விழியாரோதிக்கிடைந்திருணடத்தல்போலும்
வஞ்சமார்கலிகளந்தப்பதியில்வாழ்மறையோர்சொல்லும்
அஞ்செழுத்திசையாலஞ்சியப்புறத்தகறல்போலும்.

இ-ள். கூட்டமாகியயானைகள் காலைப்பொழுதில் அந்நகரத்தின் புறத்தில் போகுதல் விஷத்தையொத்த கண்களுள்ள மாதர்களுடைய அளகபாரத்துக்குத்தோற்று இருள்நடப்பதுபோலுமிருக்கின்றது. இதுவுமன்றி அந்தக்ஷேத்திரத்தில்வாழும் பிராமணர்கள் உச்சரிக்கின்ற பஞ்சாக்ஷரத்தினிசையால் வஞ்சம்பொருந்திய பாவங்களஞ்சி அப்புறம் ஓடுவதுபோலுமிருக்கின்றது—எ-று. (உஅ)

கொடிக்குலஞ்செறிகோபுரத்தலையின்மேற்குயிற்றிப்
படுத்தமாமணிக்கிரணம்வானளவுமேற்பரம்ப
லடுத்தபூசைகளியற்றுதற்கரியயனிழிய
வெடுத்தபைங்கழையேணியாமெனும்படியிலங்கும்.

இ-ள். கொடிக்கூட்டங்கள்பொருந்திய கோபுரங்களினுச்சியில் பதிக்கப்பட்டிருக்கிற மாணிக்கங்களின்கதிர்கள் ஆகாயத்தினளவும்பரவுதல் ஆகமவிதிப்படிபொருந்திய பூசைகள் மார்க்கசகாயருக்குச்செய்வதற்காக மகாவிஷ்ணுவும் பிரமதேவனும் அவர்க

னுலகத்திலிருந்து இழிந்துவர நாட்டியிருக்கிற மூங்கிலேணி போலப் பிரகாசியாநிற்கும்—எ-று.

ஆகாயம் நீலநிறமாகத்தோன்றுகிறவனாயி லளவுபடுத்தி உரையாசிரியர் கூறியிருக்கின்றனர். (உக)

வேறு. மீனக்குலஞ்சேர்நெறிகடந்து
வெயிலோனெறிக்குமேலாகிக்
கூனற்பிறைவெண்மதியிடையே
தவழும்பெரியகோபுரத்தின்
றூனத்திடையேபரம்பணையாத்
தழைத்தசிகரத்தலைப்பரப்பில்
வானத்துலவுஞ்சுரநதிக்கு
மதகுபோலவழிவிடுமே.

இ-ள். சூரியன்செல்லும் மார்க்கத்துக்குமேலாகி நக்ஷத்திரங்கள் செல்லுதற்கு வழிகள்கொடுத்து வளைவுள்ள பிறையாகிய சந்திரன் மத்தியி லொருபுறமாகத் தவழும்படியிருக்காநின்ற கோபுரவாயி னிடத்தில் கிரமமாகச்செய் தழைத்திருக்குஞ் சிகரப்பரப்புகளில் ஆகாயத்திலுலவுந் தேவநதியாகிய கங்கையின்மதகுபோல் வழி விட்டிருக்கும்—எ-று. (உ௨)

வேறு. சீதமாயொளியுருவாஞ்சந்திரகாந்
தச்சிலையாஞ்சிகரந்தோறுஞ்
சோதிபாயுங்குமுதபதியமுதகிரணநிரை
தொடும்போதெல்லாம்
வீதிமீதினிற்கரைந்துகரைந்தொழுகி
வழிந்தபுனல்வெள்ளத்தாலே
பாதிமாதங்கடொறுங்கரைபொருது
திரையெறியும்பாலியாறு.

இ-ள். குளிர்ச்சியா யொளியுருவாகிய சந்திரகாந்தக் கற்களாலாகிய கோபுர சிகரங்கள்தோறும் ஒளிபாய்கின்ற சந்திரனுடைய அமுதகிரணங்கள்படும்போதெல்லாம் வீதியினிடத்தில் கரைந்துகரைந்து ஒழுகிவழிந்த நீர்வெள்ளத்தினாலே மழைகாலமல்லாத ஆறுமாதந்தோறும் பாலியாறானது வெள்ளம்பெருகிக் கரையைப் பொருது அலைகளைவீசாநிற்கும்—எ-று.

சூரியனைத் தாமரைநாயகனென்றும், சந்திரனைக் குமுதநாயகனென்றுஞ்சொல்லுமுறைமையினால் குமுதபதியென்றார். (௧௧)
(குமுதம் - அல்லி.)

வேறு. கமனியநெடுங்கொடிகலந்தவெண்சுதைத்
தமனியமகுடமேற்றரித்தகோபுர
முமையவடவஞ்செயாதொழிக்கவேண்டுமென்
றிமகிரிதடுக்கவந்திருத்தல்போலுமே.

இ-ள். ஆகாயத்தைப்பொருந்துகின்ற நெடியகொடிகள் பொருந்தியதாய் வெண்சுதை தீற்றப்பட்டுப் பொற்கலசம்வைத்திருக்குங் கோபுரம் பார்வதிதேவியாரின்னமுந் தவஞ்செய்யாமல் ஒழிக்கவேண்டுமென்று இமயகிரிதடுப்பதற்கு வந்திருத்தல்போலிருக்கின்றது—எ-று. (௧௨)
(கம் - ஆகாயம். மன்னிய - பொருந்திய.)

திருந்துநித்திலக்குவைபவளச்செங்குவை
பொருந்துசெம்மணிக்குவையனந்தம்பொற்குவை
விரிந்திடுமாவணமுருகவேள்படை
யருந்தியபெரும்புனலாழிபோலுமே.

இ-ள். திருத்தமாகியமுத்துக்குவை செம்பவளக்குவை மாணிக்கக்குவை அனந்தமாகியபொற்குவை என்னுமிவைகள் பிரகாசிக்காநின்ற கடைவீதியானது சுப்பிரமணியக்கடவுளேவிய வேலாயுதமானது சுவற்றியபெரும்புனலிருந்த சமுத்திரம்போலிருக்கின்றது—எ-று.

சமுத்திரம்நீரின்றி மணிகள்மட்டுந் தெரிந்தமையால் அதனையொத்ததென்றார். (௧௩)

வேறு. தூய்மணிக்கொடிஞ்சித்திண்டேர்த்
திகிரியின்சும்மைவெம்மைக்
காய்சினக்கடதாரைக்
கடகரிமுழக்கங்கால்போற்
பாய்பரிக்கலினவோசை
பவளவாய்ப்பசும்பொற்கொங்கைத்
தேய்பிறைநுதலார்பாதச்
சிலம்பிசைசிலம்புமெங்கும்.

இ-ள். பரிசுத்தமுள்ளமணிகள் பதித்திராநின்ற கொடிஞ்சியை யுடைய திண்ணியதேர்களிற்பூட்டிய உருளையினோசையும், வெம் மையாகிய கோபமுள்ள கவுள்மதம்பொழிகின்ற யானைகளினோ சையும், காற்றைப்போல்பாய்கின்ற குதிரைகளினுடைய கடிவாள ஓசையும், பவளம்போன்றவாயும், பசும்பொன்னிறமுள்ளதனங்க ளும், இளம்பிறைபோன்ற நெற்றியுமுடைய அந்நகர்மாதர்கள் பாதங்களிலணிந்திருக்குஞ் சிலம்போசையும், எவ்விடத்தும் ஒலி த்துக்கொண்டிருக்கும்—எ-று.

பசும்பொன்என்பது - மாற்றுயர்ந்தபொன். செம்பொன்னெ னவருமிடத்திலு மிதுவேபொருளாகக்கொள்க. (௩௪)

வேறு. செங்கயல்குதிப்பனசெந்நெற்கன்னலிற்
சங்கயல்கிடப்பனதரளக்குப்பைகண்
மங்கையர்முகத்தொளிர்வடிக்கண்போலவே
பங்கயமலரிடைபடருநீலமே.

இ-ள். செந்நெற்களினிடத்தும் - கரும்புகளினிடத்தும் - கயல் மீன்கள்குதிப்பன. சங்குகளின்அயலில் முத்துக்குவையிருப்பன. அந்நகரத்து மாதர்களுடைய முகத்திற்பிரகாசிக்கிற மாம்பிஞ்சினை யொத்த கண்கள்போலத் தாமரைமலர்களினிடத்தில் நீலோற்பல மலர்கள் மலர்ந்திருக்கும்—எ-று. (௩௫)

அத்தலத்தினைநினைத்தவருரைத்தவரடைந்தோர்
மெய்த்தவத்தினைமுயன்றவர்பணிவிடைவிளைத்தோர்
முத்திபெற்றனரெனச்சொல்லிமுனிவர்கண்முன்னே
சத்தியப்பொருளெனக்கரமெடுத்தனன்றவத்தோன்.

இ-ள். திருவிரிஞ்சையென்னும் அந்தத்தலத்தினை நினைத்தவர்க ளும், அதன்பெயரைச் சொன்னவர்களும், அவ்விடத்தில் சேர்ந்த வர்களும், உண்மைத்தவஞ்செய்தவர்களும், திருப்பணிசெய்தவர் களும், முத்தியடைந்தார்களென்றுசொல்லி அங்கிருக்கும் நைமி சாரணியமுனிவர்களுக் கெதிரில் நாம்சொன்னது சத்தியப்பொ ருளென்று வசிஷ்டமுனிவர் தம்முடைய வலக்கரத்தைத் தூக்கி னர்—எ-று. (௩௬)

அப்பதியினுயிரிழந்தபணியரவையணியுமுயி
ரகன்றவேங்கை
மெய்ப்புலியினதள்புனையுமுடனுறந்தவிடையுமற்றோர்
விடையிற்றோன்று
மொப்பிலுடல்கழிந்தகரிகரியுரிபோர்த்துலவுமுயி
ரொழிந்தமான்கள்
கைப்பதுமமலரிலொருமடமானையெடுத்திருக்குங்
கயிலைமீதில்.

இ-ள். அந்தத்தலத்தி லுயிரிழந்த சர்ப்பங்களெல்லாம் சர்ப்பாபரணங்கள் பூண்டுகொண்டும், அங்கு உயிரிழந்த புலிகள் புலித்தோலணிந்துகொண்டும், அங்கு உயிரிழந்த ரிஷபங்கள் வேறொருரிஷபவாகனத்தி லாரோகணித்துக்கொண்டும், ஒப்பில்லாத உடலிழந்த யானைகள் யானைத்தோல் போர்த்துக்கொண்டும், அங்கு உயிர்நீங்கிய மான்கள் கையிலொரு இளமானையேந்திக்கொண்டும், பரமசிவம்போலக் கயிலையில்வீற்றிருக்கும்—எ-று. (௩௭)
(அங்குயிரிழந்த ஜீவன்கள் சாரூப்பியம்பெறுமென்பதுகருத்து.)

வேறு. வாரணாசியுங்கமலையுந்தமனியமன்றும்
பூரணாகமம்புகழ்ந்திடுந்தலமெனப்புகல்தீர்
காரணாகமங்காமிகங்கிளக்குமிக்காரணா
ராரணாதியிற்சிறந்திடுந்தலமெனவறைந்தீர்.

இ-ள். காசியுந் திருவாரூருஞ் சிதம்பரமும் பூரணமாகிய ஆகமம்புகழ்ந்திடுந் தலமெனச்சொன்னீர். காரணாகமமுங்காமிகாகமமுஞ்சொல்லுகிற காரணாரென்னப்படுந் திருவிரிஞ்சை வேதமுதலானவைகளிற் சிறந்திடுந் தலமெனச்சொன்னீர்—எ-று.

வாருணையென்னும்நதி யொருபுறத்திலும், அசியென்னும்நதி யொருபுறத்திலும் வரும்படியிருத்தலால் காசிக்கு வாரணாசியென வொருபெயர்வழங்குகின்றது. (௩௮)

மறுதலித்ததிம்மொழியெனவதிட்டனைவணங்கிக்
குறுமுனித்தவன்முதலினோரிப்படிகூற
வறுமுகத்தவனொருமுகமாயெமக்கறைந்த
வுறுதிபற்றியபொருளினுவெளிசெயவுரைப்போம்.

இ-ள். முன்சொன்னதை யிம்மொழி மறுதலித்ததென்று வசிஷ்ட முனிவனாவணங்கி அகஸ்தியமுனிவர் முதலாகிய ரிஷிகளிவ்வா றுசொல்ல, ஆறுமுகக்கடவுள் ஒருமுகமாயிருந்து எனக்கு அரு ளிச்செய்த உறுதிபற்றிய பொருளிது அதனை வெளியாகச்சொல் லுகிறேம்—எ று. (௩௯)

விரவுஞெட்டியின்முதலிலேபாசிவன்விதித்தான்
பரையுமாதியுமிச்சையுஞ்ஞானமும்பயில்ற
கிரியையாகியசத்தியுஞ்சத்தியிற்கிளைத்தா
ரருவமாகிப்சதாசிவமுதலினோவர்.

இ-ள். பொருந்திய சிருஷ்டிகாலத்தில் முதலிலே பாசிவம்-பராசத்தி - ஆதிசத்தி - இச்சாசத்தி - ஞானசத்தி - கிரியாசத்தி - என்னும் பஞ்சசத்திகளைச்சிருஷ்டித்தார். அந்தப்பஞ்சசத்திகளில் நின்றும் அருவமாகிய சதாசிவமுதலிய பஞ்சகர்த்தாக்களுண்டா யினார்கள்—எ-று.

பஞ்சகர்த்தாக்கள்—சதாசிவம் - மகேசுவரன் - ருத்திரன் - விஷ்ணு - பிரமன் - என்பவர்கள். (௪ய)

அருவநீங்கியசதாசிவனுருவத்தினடைவே
யிருபதைந்துமாகேசுரவடிவங்களியைந்த
கருதுமோகினியிடத்திலேதோன்றியகலையிற்
பொருவிறத்துவந்தோன்றினவவைகளிற்புவனம்.

இ-ள். அருவம்நீங்கிய சதாசிவஉருவத்தில் முறைமையாக இரு பத்தைந்து மாகேசுரவடிவங்களுண்டாயின. கருதுகின்ற மாயை யிலேதோன்றிய பஞ்சகலையில் ஒப்பில்லாத தத்துவங்கள்தோன்றி ன. அவைகளில்—எ-று.

பஞ்சகலையாவன—பிரதிஷ்டை - நிவிர்த்தி - வித்தை - சாந்தி - சாந்தியாதீதை - என்பனவாம். (௪க)

பின்புதோன்றினவாதலாலிவையெலாம்பிறக்கு
முன்புதோன்றியகவுரியேயிதிற்றவமுடித்தா
ளன்பினலரியனும்வந்தருச்சனைபுரிந்தா
றொன்பராலிதுமுதற்றலமுதற்றலமென்றான்.

இ-ள். புவனங்கள் பின்புதோன்றின—இவையெலாம் பிறக்கு முன்புதோன்றிய சத்தியே இந்தத்தலத்தில் உறுதியான தவமுடித்

தாள். (அன்றியும்) அன்பினால் பிர்ம்மவிஷ்ணுக்கள்வந்து பூசைசெய்தார்களென்று சொல்வார்களாதலா லிது முதல்தலமுதல்தலமென்று சொன்னார்—எ-று. (௪௨)

சத்திமாலயனருச்சனைபுரிந்திடுந்தலத்தோ
டொத்ததாகவேயுரைத்திடவமையுமேன்றுரைத்தா
லத்தனாரிடத்துமையவளரியயன்றிருப்பே
ரொத்தலங்கள்பெற்றிருந்தனவிதுவொழிந்தில்லை.

இ-ள். சத்தியும் - விஷ்ணுவும் - பிரமதேவனும்பூசித்த இந்தத் தலத்தோடொத்ததாக வேறேதலமுண்டென்று சொன்னால் பரமசிவனிடப்பாகத்தில்வீற்றிருக்கும் உமையவள் - மகாவிஷ்ணு- பிரமதேவனென்னு மிவர்களுடைய திருப்பெயர்கள் எந்தத்தலங்கள் பெற்றிருக்கின்றன. இதுவொழிந்து வேறேயில்லை—எ-று.

சத்திமுதலிய மூவர்பெயரால் வழங்குவது கௌரீபுரம்-விண்டுபுரி-விரிஞ்சைபுரி-என்பவை. (௪௩)

பாரகத்தினிலிணையிலாதிலங்குமப்பதியிற்
றாரகத்திருவெழுத்துருவாகியதலைவ
னேரகத்துறைமுருகனையீன்றவனிருப்பன்
வீரகத்திகண்முதலவாம்வினைகளைவீட்டி.

இ-ள். பரமசிவன் கொலைமுதலான பஞ்சமாபாதகங்களை அடியார்களுக்குநீக்கிப் பூலோகத்தி லொப்பில்லாமல் விளங்குகின்ற அந்தத்தலத்தில் பிரணவசொரூபமாகிய முதல்வரும், திருவேரகமென்னுந் தலத்தில்வீற்றிருக்குஞ் சுப்பிரமணியக்கடவுளை யீன்றருளியவருமாகிய பரமசிவன் வீற்றிருப்பர்—எ-று.

ஹ-என்னும் அக்ஷரம் - ஈண்டு-க-எனத்திரிந்து வீரகத்தியென நின்றது. ஹரஹரஎன்பது - அரகரஎன வழங்குவதினாலுமறிக அத்தியென்னாது வீரகத்தியென்றதனால் கொலையெனக் கூறப்பட்டது. (௪௪)

பதிநலத்தினாற்றவஞ்செய்தோர்நலத்தினாற்பாலி
நதிநலத்தினாலிணையிலாத்தலமெனநவின்று.
மதிமுகத்துமைதவம்புரிகதையினைவதிட்டன்
விதிமுகத்தினாற்சத்தியமொழியினால்விளம்பும்.

இ-ள். தலவிசேஷத்திறைலும் அந்தத்தலத்தில் தவஞ்செய்தவர்களுடைய விசேஷத்திறைலும் பாலிநதியின் விசேஷத்திறைலும் ஒப்பில்லாததலமென்றுசொல்லிச் சந்திரனையொத்த திருமுகமண்டலத்தையுடைய பார்வதிதேவியார் அங்குத்தவஞ்செய்த சரித்திரத்தைக்கேளுங்களென்று வசிஷ்டமுனிவரானவர் புராணஞ்சொல்லவேண்டியமுறையுடனும் சத்தியவாக்கிறைலுஞ் சொல்லுகின்றார்.

இந்த நைமிசாரணிய சருக்கத்திறுள் தலவிசேஷம் - தீர்த்தவிசேஷமும் - அமைத்துக் கூறப்பட்டிருக்கின்றன. இனிவரும் சருக்கங்களில் மூர்த்திவிசேஷமு மற்றவையுங் கூறப்படும். இதனைப் புராணவரலாறென்று கூறினும் அமையும். இனிமேல் நிறுத்தமுறையாற் சத்தி தவஞ்செய்ததுமுதல் கூறுகின்றார். (சரு)

நைமிசாரணியசருக்கமுற்றியது.

ஆ திருவிருத்தம் - ருரு.

# கௌரீபுரசருக்கம்

இந்நிலத்துடன்பிறந்திடுமவுணர்களிருவர்
பின்னுதித்திடுமவன்பெயர்நிசும்பனப்பெயரின்
முன்னெழுத்திலாதவன்றமையன்னெனுமுறையோ
னன்னமுற்றவன்வரத்திறைலழிவிலராறைர்.

இ-ள். இந்தப் பூமிதோன்றினபோது தோன்றிய அவுணர்களிருவர் இவ்விருவரில் பின்னுதித்தவன்பெயர் நிசும்பன்,இந்தப்பெயரில்-நி-என்னுமெழுத்தில்லாத சும்பனென்னும் பெயருள்ளவன் தமையன் அம்முறையானபெயருள்ள இருவரும் அன்னவாகனமுள்ள பிரமதேவனுடையவரத்திறைல் அழிவில்லாதவர்களாயிருந்தார்கள்—எ-று. (க)

எட்டுநாகமாமூவகைத்திரளையுமெடுப்பர்
வட்டவான்கடலேழையுங்கடப்பர்வாய்மடுப்பர்
சிட்டரானவர்தமக்கெலாமிறுதியேசெய்வர்
துட்டரானவர்தமக்கெலாமுதலெனுஞ்சூரர்.

இ-ள். துஷ்டர்களுக்கெல்லா முதன்மையானவர்களென்றுசொல்லப்படும் அந்த அசுரர்கள் மூன்றுவகையாகிய எட்டுநாகமென்பவைகளையுமெடுப்பார்கள். வட்டமாகச்சூழ்ந்த ஏழுகடலையுந்தாண்டுவார்கள். அவைகளினீரையெல்லாம் வாயினாலுண்டுவிடுவார்கள். பரிசுத்தராயிருப்பவர்களுக்கெல்லாம் அழிவினையேசெய்வார்கள்—எ-று.

மூன்றுவகை யெட்டுநாகமென்றது—அஷ்டகுலபர்வதம்-அஷ்டநாகம் - அஷ்டதிக்யானை-எனக்கொள்க. நாகமென்னுஞ்சொல் மலை-பாம்பு-யானை-இவைகளுக்குப்பொருளாதலை. "நாகம்விண்குரங்குபுன்னை நற்றூசுமலைபாம்பியானை" யென்னும் பதினொன்றுவதுநிகண்டினுமுணர்க. (௨)

கதிரவன்பரித்தேரின்மேலந்தகன்கடாமேன்
மதியமென்பவன்விமானமேற்பவனிபோய்வருவர்
பொதியவிழ்ந்தசெம்மலரினுலகினிற்புகுந்து
நிதியுமற்றுளவெறுக்கையுங்கவர்ந்துதாநிறைப்பார்.

இ-ள். சூரியனுடைய குதிரைபூட்டிய தேரின்மேலும், யமனுடைய எருமைக்கடாவின்மேலும், சந்திரனுடைய விமானத்தின் மேலுமேறிக்கொண்டு பவனிபோய்வருவார்கள். அரும்பாட்மலர்ந்த செந்தாமரைமலரின்மேலிருக்கும் பிரமதேவனுடைய உலகத்திற்போய் அங்குள்ள ரத்தினங்களையும் சுவர்ணங்களையும் அபகரித்துக்கொண்டு தங்கள் பொக்கிஸங்களில் நிறைத்துக்கொள்வார்கள்—எ-று. (௩)

தோற்றவந்தகன்சூலமுங்காலனைத்தொலைத்த
ஏற்றுவாகனன்சூலமுமிருவருமெடுப்பர்
காற்றெனும்பெயர்க்கடவுளுநிருதியுங்கனலுங்
கூற்றமென்றுகைகுலைத்திடவவர்தலங்கொள்வர்.

இ-ள். தோற்றுப்போன யமனுடைய சூலாயுதத்தையும், அந்த யமனை முன்னொருகாலம் உதைத்துருட்டிய ரிஷபவாகனமுள்ள பரமசிவன்கொடுத்த சூலத்தையும், அவர்களிருவருங் கையிலேந்திக்கொண்டிருப்பார்கள். இவர்கள் நமக்குக் கூற்றுவர்களென்று வாயுதேவனும் - நிருதியும் - அக்கினிதேவனும் - அஞ்சும்படிசெய்து அவர்களுடையபதவிகளை அபகரித்துக்கொள்வார்கள்—எ-று.

நாகலோகமாமிரண்டினுமுறைபவர்நடுங்கி
மேகமார்குழன்முதுகினில்விரிந்திடவிழியிற்
சோகமார்புனன்முலைக்குடநிறைத்திடத்துவண்டு
பாகசாலையிற்குடத்துநீர்நிறைப்பர்தம்பயத்தால்.

இ-ள். நாகலோகங்களென்கிற இரண்டுலோகத்திலும்வாழ்கின்ற தேவமாதர்கள் பயத்தினால்நடுங்கி மேகம்போலக் கருமையுள்ள அளகபார முதுகில்விரிந்து தொங்கவும், சோகத்தினால் கண்களிலிருந்து பெருகுகிற நீரானது ஸ்தனமாகிய குடங்களைநிறைக்கவும், சரீரமிளைத்து அந்த அவுணர்களுடைய பாகசாலையிலிருக்குங் குடங்களில் தங்கள்தலையில் சுமந்துகொண்டுவந்த நீரைநிறைப்பார்கள்—எ-று.

இரண்டுநாகலோகமென்றது - ஒன்று நாகலோகமென்றும், ஒன்று தேவலோகமென்றுமுரைத்துக்கொள்க. இவைகளையு மேற்கூறிய நிகண்டுச்செய்யுளிற்காண்க. (ரு)

வெம்மையாமவர்வேட்டையிற்கொலைத்திடும்விலங்கைச்
சும்மையாகவேசடைகளைநெருக்கியேசுமக்குஞ்
செம்மைமாதவர்தினம்புகல்வர்தஞ்சிரத்திற்
கிம்மையேபலன்கொடுத்தனசடைகளென்றெண்ணி.

இ-ள். கொடியவர்களாகிய அவ்விருவரும் வேட்டையாடுதலிற் கொன்றமிருகங்களைச் சுமைசுமையாககட்டிச் சடைகளை அழுத்தமாகநெருக்கிச் சுற்றி அதுவே சும்மாடாகவைத்துச் சுமந்துகொண்டுபோகும் நல்லொழுக்கமுள்ள முனிவர்கள் இம்மையிலேதானே நம்முடையமுடிக்குச் சடையானது பிரயோசனங்கொடுத்ததென்றுகருதித் தங்களுக்குள் பேசிக்கொள்வார்கள்—எ-று. (சா)

கங்கையாறவர்புனல்குடையதங்களிற்கமழ்ந்
துங்கமாகியகற்பகமலர்மழைசொரியுஞ்
சங்கவாரிசநிதியவர்பணிவிடைதழைக்கும்
பங்கயாசனவிறைவன்முன்முகூர்த்தநாள்பகரும்.

இ-ள். கங்காநதிநீரானது அவர்கள்கழுவுங்கால்களில் கமழ்ந்துகொண்டிருக்கும், பரிசுத்தமாகிய கற்பகவிருக்ஷமானது அவர்கள் முடியில் மலர்மழையைச்சொரியும், சங்கநிதியும் பதுமநிதியும்

அவர்களுடைய ஏவலின்படி நடக்கும், பிரமதேவன் அவர்களெதி ரிற்சென்று பஞ்சாங்கஞ்சொல்லுவன்—எ-று.

சங்கநிதி - பதுமநிதியென்பவை—சங்கம்போலவும் - தாமரை மலர்போலவும் - உருவமுள்ளவைகளாய் வேண்டும்பொருள்களைத் தருகின்றவையாம். (எ)

வேறு. பரிபவங்களையங்கிதென்பாலவ
னிருதிநீர்வளியுத்தர நிற்பவ
னெருதுகைப்பவனிந்திரனெண்மருஞ்
சுருதிமாலுடன்சொல்வதற்கெய்தினர்.

இ-ள். இவ்வாறிருக்கும் அவுணர்களால் அனுபவிக்குந் துன்ப ங்களை அக்கினி - யமன் - நிருதி - வருணன் - வாயு-குபேரன்-ரிஷ பமேறிச்செலுத்தும் ஈசானன் - தேவேந்திரன் - என்னும் அஷ் டதிக்குப்பாலரும் வேதமோதுந்திருமாலுடன் சொல்லிக்கொள் ளும்பொருட்டுச் சென்றார்கள்—எ-று. (அ)

(குபேரனிருக்குந்திசைவடக்காகையால்உத்தரம்நிற்பவனென்றார்)

ஆமையோடரவந்தரித்தாற்றினைத்
தாமமாலைமதியைத்தரிக்கையாற்
றீமையார்விடத்தோடழல்சேர்கையாற்
சோமசூடனையொத்ததுதொல்கடல்.

இ-ள். திருமால் பள்ளிகொண்டிருக்கும் பழமையாகிய பாற்க டல் ஆமையுடன் ஒலியினையும்பொருந்தி பலநதிகளையும், துளசி மாலையணிந்த விஷ்ணுவையும் - சந்திரனையும் தன்னிடத்தில் வைத் துக்கொண்டிருப்பதினாலும் கொடுமைபொருந்திய விஷமும் வடவாமுகாக்கினியும் சேர்ந்திருப்பதினாலும் சந்திரனையணிந்த பரமசிவனை யொத்திருக்கின்றது —எ-று.

பரமசிவத்துக்குச் சொல்லும்போது ஆமையோடு - பாம்பு - கங்காநதி - பூமாலை - பிறை - விஷம் - அக்கினி-மான்- இவைகளைத் தரித்திருத்தலாலுமென்க. (கூ)

வழிகடந்துகரும்புயல்வண்ணனார்
விழியுறங்கியபாற்கடன்மேவினார்
கழிவிலாதன்றுகற்பகம்வாங்கிய
குழிகள்போன்றசுழிகளின்கூட்டமே.

இ-ள். மார்க்கத்தைக்கடந்து கருமைநிறமுள்ள மேகவண்ணராகிய மகாவிஷ்ணுவானவர் அறிதுயிலமரும் பாற்கடலினிடத்தில் நடந்தார்கள். அவ்வாறு நடக்கும்போது அந்தப்பாற்கடலிலுண்டாகிய நீர்ச்சுழிகள் நீங்குதலில்லாமல் பாற்கடல்கடைந்தநாளில் அதனிடத்துண்டான கற்பகவிருக்ஷங்களையெடுத்த குழிகளைப்போலிருந்தன—எ-று.

கற்பகவிருக்ஷங்கள் ஐந்துவகைப்பட்டதாதலால் குழிகளென்று பன்மைப்பாலாற்கூறினர். அவற்றி ° பெயர்—சந்தானம் - பாரிசாதம் - அரிச்சந்தனம் - மந்தாரம் - கற்பகம் - என்பவை. (௰)

பண்டுநொந்துபயம்பெறும்பாற்கடற்
றண்டரங்கம்வெண்சங்கெறிகின்றன
வண்டர்வந்தனரென்றவர்க்காரமு
துண்டையாகவுதவுதல்போலுமே.

இ-ள். ஆதியில் மந்தரகிரியைநாட்டிக் கடைந்தபோது வருந்தி அச்சங்கொண்டிருக்கும் பாற்கடலின்குளிர்ச்சியுள்ள அலைகளாலெறியப்படும் வெண்சங்குகள் தேவர்கள்வந்தார்களென்று அவர்களுக்குத் தன்னிடத்திருக்கும் அமிர்தத்தை உண்டையாகத் தருதல்போலிருக்கின்றன—எ-று.

ஆரமிர்தென்பது-யாவர்க்குங்கிடைத்தற்கரிய அமிர்து. சங்குகள் அமிர்தஉண்டைபோ லிருக்கின்றனவென்பது கருத்து. (௰௧)

பூசல்கொண்டொலிபொங்கியபாற்கடல்
வீசுதெண்டிரையெங்கும்விரிந்தன
தேசுதங்கியசேடனைத்தேடியே
மாசுணங்கள்வருவனபோலுமே.

இ-ள். கரையை அலைகளால் மோதுதலைக்கொண்டு பொங்குகின்ற பாற்கடலானது வீசுகின்ற குளிர்ச்சியுள்ள அலைகள் எவ்விடத்தும் பரவுதல், ஒளிபொருந்திய ஆதிசேடனைத் தேடிக்கொண்டு சருப்பங்கள் வருவனபோலிருக்கின்றன—எ-று. (௰௨)

கதிருருமணியுள்விடுகாந்தியாற்
புதியபாற்கடல்செம்மைபொருந்தின

மதுவின்மார்பிற்கயிடவன்மார்பினி
லுதிரவாரியன்றுற்றதுபோலுமே.

இ-ள். கிரணங்கள்நீங்காத ரத்தினங்கள் உள்ளிருந்து விடுகிறகா ந்தியால் நவமாகிய பாற்கடலானது செம்மைநிறம்பொருந்தித் தோன்றுதல் மதுவென்னும் அசுரனுடைய மார்பினின்றும், கயி டவனென்னும் அசுரனுடைய மார்பினின்றும்பெருகிய உதிரவெ ள்ளம் முன்னாளில் பொருந்தியதையொத்தது—எ-று.

செம்மைநிறம்பொருந்தியது - உதிரம்போலிருந்ததெனக்கூ ட்டுக. அந்தக்கடலென்நாளும் ஒரேதன்மையாயிருப்பதினால் புதி யபாற்கடலென்றார். இனி ஆதிசேடனைச்சொல்லுகிறார். (யங)

எண்ணிலாத இருளைவனைந்திடும்
வெண்ணிலாவில்விளக்கமிகுந்தது
கண்ணனூர்கரியார்தருமாமுகில்
வண்ணனூர்துயில்கொண்டருண்மாசுணம்.

இ-ள். கண்ணனென்றும் பெயருடையவராய்க் கருமைநிறம் பொருந்திய மேகவண்ணமுள்ள திருமால் அறிதுயிலமருஞ் சய னமாகிய ஆதிசேடனென்னும் நாகமானது அளவில்லாத இருளை நீக்குகின்ற வெண்மைநிறமுள்ள நிலாவின் பிரகாசத்தைப்பார்க்கி லு மிகுந்த பிரகாசமுடையதாயிருக்கின்றது—எ-று. (யச)

அண்டரானவராழியிற்றூரவே
கண்டுநெஞ்சுகளித்தனர்வெள்ளியம்
புண்டரீகமலரிற்பொருந்திய
வண்டுபோலவிளங்கியமாயனை.

இ-ள். வெள்ளைத் தாமரை மலரிற்பொருந்திய வண்டுபோலப் பாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கும் மாயனைத் தேவர்கள் தூரத் திலேயேகண்டு மனங்களித்தார்கள்—எ-று.

ஆதிசேஷனை வெண்தாமரைமலராகவும், மகாவிஷ்ணுவை வண் டாகவும் அமைத்துக்கொள்க.

சிறுமைக்கெல்லையிலாதெழுந்தேவர்கள் (யரு)
குறுகிச்சென்றுமுன்கண்டுகைகூப்பிரு
ருறுநர்க்காகியொளிருமுடிபதி
மறுவைப்போலவிளங்கியமாயனை.

இ-ள். அசுரரால் அளவில்லாத சிறுமையை அடைந்துபோனதேவர்கள் பாற்கடலினிடத்துச்சேர்ந்து பிரியாமல்கூடியிருக்கும் ஆடவர்களுக்கும் மாதர்களுக்கும் இனிமையுள்ளதா யொளிருகின்ற சந்திரன்மத்தியிலிருக்கும் களங்கம்போலப் பாற்கடலின்மத்தியில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலைக்கண்டு கைகுவித்துத் தொழுதார்கள்—எ-று. (௰௬)

சக்கராயுதம்வில்வளைதண்டுவா
ளொக்கநிற்கவுரகபணுமணி
பக்கநாயகமாகப்பசுமையின்
மிக்கநாயகம்போன்றவிமலனை.

இ-ள். சக்கராயுதம் - வில் - சங்கம் - தண்டு - வாள் - என்னுமிவைகள்பொருந்தி எதிரிலிருக்க, ஆதிசேஷனுடைய பணமுடிமாணிக்கங்கள் சுற்றிலும் நாயகமணிபோலிருக்க, மரகதமணியிலிருந்த நாயகமணிபோலவிளங்குகின்ற திருமாலை—எ-று.

சுதரிசனம் - கோதண்டம் - பாஞ்சசன்னியம் - கௌமோதகி - நாந்தகம் - என்னுமிவை மேற்கூறிய சக்கராயுதமுதலிய பஞ்சாயுதங்களின்பெயர். (௰௭)

நாகமாமதினன்முகமாயிர
மோகைபொங்குமுயிர்ப்புமுகத்தினிற்
சோகமடைப்பத்திருவுடன்
யோகநித்திரைகொண்டவொருவனை.

இ-ள். ஆதிசேஷனுடைய நல்ல ஆயிரமுகங்களினிடத்திருந்து சந்தோஷமிகுதியினாலுண்டாகும் சுவாசமானது தன்முகத்திலுண்டாகுங் குறுவெயர்வைகளைத் துடைக்கும்படி திருமகளுடன்யோகநித்திரைசெய்கின்ற ஒப்பில்லாத விஷ்ணுவை—எ-று. (௰௮)

போற்றினர்தங்கள்புன்மையுமென்மையுங்
கூற்றமானநிருதர்கொடுமையுஞ்
சாற்றினர்பரந்தாமனுமஞ்சலென்
றேற்றினுனுக்கிசைத்திடவெண்ணினுன்.

இ-ள். இவ்வாறுபள்ளிகொண்டிருக்கும் மகாவிஷ்ணுவைத் தேவர்கள்போற்றிசெய்து தங்களுக்குச்சம்பவித்திருக்கிறஇழிவையும்

சிறுமையினையும் தங்களுக்கு யமன்போல்வந்திருக்கிற அசுரர்களுடைய கொடுமையினையும் சொன்னார்கள். (அதைவினவிய) மகாவிஷ்ணுவும் இனிநீங்கள் பயங்கொள்ளவேண்டுவதில்லையென்று சொல்லி இந்தச்சங்கதியை ரிஷபவாகனமுள்ள பரமசிவனுக்குச் சொல்லவேண்டுமென்று கருதினார்—எ-று. (௰௯)

சந்திராதியர்போலத்தடங்கையி
னந்துமாழியுந்தாங்கியநாரண
னிந்திராதியர்கூடவெழுந்துபோய்
நந்திவாகனன்வெற்பினைநண்ணினான்.

இ-ள். சந்திரசூரியர்களைப்போலப் பெரியகைகளில் சங்கமுஞ் சக்கரமுந்தாங்கிக்கொண்டிருக்கும் மகாவிஷ்ணுவானவர் தேவேந்திரன்முதலான தேவர்களுடனெழுந்துசென்று ரிஷபவாகனமுள்ள பரமசிவன்வீற்றிருந்தருளுங் கயிலாயகிரியிற்சேர்ந்தார்—எ-று.

வேறு. கிரணசந்திரிகைத்திங்கட்கீற்றணிமுடியுமன்புங்
கருணையும்பொழியுங்கண்ணுங்கமலவாண்முகமுமார்பு
மருணமண்டலமுஞ்செய்யவம்புலித்திரளுமன்ன
சரணமுண்டகமுமந்தச்சரணவெண்ணகத்தின்சால்பும்.

இ-ள். கிரணமாகிய சந்திரிகையினையுடைய இளம்பிறையணிந்த திருமுடியும், அன்பினையுங் கிருபையினையும் பொழிந்துகொண்டிருக்குந் திருநேத்திரங்களும், செந்தாமரைமலர்போன்ற ஒளிபொருந்திய திருமுகமண்டலமுந் திருமார்பமும், அருணமண்டலமும் செவ்விதான சந்திரகூட்டமுமொத்த திருவடித் தாமரைமலரும், அந்தத்திருவடியில் விளங்கும் நகங்களினுடைய மேன்மையும்—எ-று.

செம்மைநிறமுள்ள திருவடியும், வெண்மைநிறமுள்ள நகங்களும் பிரகாசிப்பது அருணமண்டலத்துடன் வெண்மைநிறமுள்ள பத்துச் சந்திரன்சேர்ந்து பிரகாசிப்பதுபோலிருக்கின்றதென்பது தாற்பரியம். நகம்பலவாயிருப்பதினால் சந்திரகூட்டமென்றார். இது பயனிலை. (௨௧)

நெற்றியிலிலங்குநீறுநிலவெழுநகையுங்கையிற்
பற்றியமழுவுமானும்பணிப்புயந்தரித்தநூலுஞ்

சுற்றரவாபுனைந்ததோளுந்தோலின்மேலிசைத்தபாம்புஞ்
சிற்றடிச்சிலம்பும்வெள்ளிச்சிலம்பினிற்சென்றுகண்டார்.

இ-ள். கயிலாயகிரியிற்சென்று பரமசிவத்தினுடைய திருநெற்றியில்விளங்குகின்ற விபூதியும், சந்திரிகையுண்டாகும் புன்னகையும், திருக்கரங்களிற்பற்றிய மான்மழுவும், சர்ப்பமாகிய வாகுவலயந்தரித்த திருத்தோளிலணிந்திருக்கும் பூணநூலும், திருவரையில் சுற்றியணிந்திருக்கும் புலித்தோலும், அந்தத்தோலின்மேலிறுக்கியிருக்கிற சர்ப்பக்கச்சும், சிறிய திருவடிகளிலணிந்திருக்குஞ் சிலம்பும் தரிசித்தார்கள்.—எ-று. (உஉ)

அண்டர்பெருமான்றிருமேனியழகெலாம்விழியாலள்ளிக்
கொண்டனர்மனத்திலாரக்குடித்தனர்பரமானந்த
முண்டனர்பணிந்துநின்றுரைத்திடும்வேளைபார்த்து
விண்டனரவுணர்வன்மையுரைத்தனர்தமதுமெலிவை.

இ-ள். தேவர்பெருமானுடைய திருமேனி அழகினைத் தங்கள்கண்களால் அள்ளிக்கொண்டவர்களாய் மனதினால் நிறையவுண்டு பரமானந்தத்தையும் அருந்திப் பணிந்துநின்று தங்கள்குறைகளை விண்ணப்பஞ்செய்யும்படியான காலம்பார்த்து அசுரருடைய கொடுமையினையும் தங்களுடைய எளிமையினையுஞ்சொல்லிக்கொண்டார்கள்.—எ-று. (உ௩)

சஞ்சலம்பிறந்துகூறுஞ்சதமகன்குழுவைநோக்கி
யஞ்சலஞ்சலியென்றங்கையமைத்தரன்மொழிவானுங்கள்
நெஞ்சலம்பிறவும்வேறுநினைவுறாதொழியுமென்று
மஞ்சலங்காரமேனிமாதவர்க்குரைக்கலுற்றான்.

இ-ள். சஞ்சலங்கொண்டுசொல்லுகிற தேவேந்திரனுடைய கூட்டத்தைநோக்கி நீங்கள் பயப்படாதீர்களென்று அபயாஸ்தங்கொடுத்து உங்கள்மனதிலிப்போது நேரிட்டிருக்கிற துன்பத்தையும் மற்றுள்ள துன்பத்தையும் நினையாமல் ஒழியுங்களென்று பரமசிவம் அருளிச்செய்து மேகமொத்த அலங்காரமுள்ள மேனியையுடைய விஷ்ணுவுக்குச் சொல்லுகின்றார்—எ-று. (உ௪)

வானவர்திருதர்சித்தர்மானவர்முனிவர்மற்றைத்
தானவர்காலகேயர்சாரணராலுஞ்சகா

உடனவரிருவர்தம்மையொருத்தியாலழிப்போமென்றார்
தேனிவர்துளவினானுந்தேவருந்தொழுதுபோனார்.

இ-ள். தேவர்களாலும் - நிருதர்களாலும் - சித்தர்களாலும்-மனிதர்களாலும் - சாரணர்களாலுஞ் சாகாமலிருக்கும் அந்த அவுணர்களை யொருசத்தியாலழிப்போமென்றார். இவ்வாறு பரமசிவன் திருவாய்மலர்ந்தருளினவுடன் தேன்பரந்த துளசிமாலையணிந்த விஷ்ணுவுந் தேவர்களுந்தொழுது சென்றார்கள்—எ-று. (உ௫)

அந்தவானவர்களன்போடகன்றனரவுணராவி
சிந்துமாறுளத்திலெண்ணிச்சிவனிருந்தருளும்போதிற்
சந்தனாசலத்தினின்றுந்தமிழுடனளைந்துவந்த
மந்தமாருதத்தினோடும்புகுந்ததுவசந்தவேனில்.

இ-ள். அந்தத்தேவர்கள் அன்புடன்சென்றபின் அவுணர்களுடையஉயிரைச் சிதைக்குமுறைமையைப் பரமசிவம் திருவுளத்திற்கொண்டிருக்கும்போதில் சந்தனவிருக்ஷங்கள்நிறைந்துள்ள பொதியமலையில்நின்றும் தமிழுடன்கலந்துவந்த தென்றற்காற்றுடனே வசந்தகாலம்வந்தது—எ-று. (உசு)

தழைமுறியடர்ந்தசோலையிந்திரசாபமாகச்
செழுமுகையரும்புமவ்வற்றிரள்கனபலங்களாகப்
பொழிமலர்மதுவின்றாரைபுயல்சொரிதுளிகளாக
மழைபொழிகாலம்போலவந்ததுவசந்தவேனில்.

இ-ள். தழைகளுந் துளிர்களும்நெருங்கிய சோலையானது இந்திரதனுசுவாகவும், மல்லிகையினுடைய அரும்புகள் ஆலாங்கட்டி மழையாகவும், மலர்கள்பொழிகின்ற தேன்றாரையானது மேகம் பொழிகின்ற மழைத்துளியாகவுங்கொண்டு மழைபொழிகின்ற சரற்காலம்போல வசந்தகாலம்வந்தது—எ-று.

தழைகளுந் துளிர்களும்-பசுமைமுதலிய பலநிறமுள்ளவைகளாயிருப்பதினாற் சோலையை இந்திரசாபமென்றார். (உஎ)

வேறு. பாதிரிவிரித்தனபலாசம்பூத்தன
மாதவியவிழ்ந்தனமவ்வல்விண்டன
தாதலர்சொரிந்தனசண்பகம்புனை
சூதமுநெகிழ்ந்தனசூழலெங்குமே.

இ-ள். சோலைகளெங்கும் பாதிரிமரங்கள்மலர்ந்தன, குருக்குக ள்மலர்ந்தன, குருக்கத்திமரங்கள் பூத்தன, மல்லிகை அலர்ந்தன, சண்பகவிருக்ஷங்கள் மலர்களையும் மகரந்தங்களையுஞ் சொரிந்தன, புல்லைமரங்களும் மாமரங்களுமலர்ந்தன—எ-று. (உ அ)

செங்கயல்மடுக்களிற்செய்யிற்பொய்கையின்
மங்கையர்முகமெனமழைக்கணுமெனப்
பங்கயமலர்ந்தனபகலிற்கங்குலிற்
கொங்கைகணிகரெனக்குவிதலுற்றவே.

இ-ள். மடுக்களிலும் - வயல்களிலும் - தடாகங்களிலும் - மாத ர்களுடைய குளிர்ச்சிபொருந்திய கண்களைப்போல் செவ்விதான கயல்மீன்கள் பிறழுகின்றன. அவர்களுடைய முகங்களைப்போலப் பகற்காலத்தில் தாமரைகள்மலர்ந்தன. இராக்காலத்தில் அவர்களு டைய தனங்களையொப்பாகக்குவிதலைப்பொருந்தின—எ-று.(உகூ)

முருகுபுன்னைசநாகமுல்லைசெண்பகமசோகங்
குருகுகல்லாரஞ்சூதங்கொன்றைமந்தாரம்பிச்சி
யிருபுடைவிளங்குங்காவிலிந்துகாந்தத்திற்செய்து
மரகதமயமாய்த்தோன்றிமண்டபமிலங்கமாதோ.

இ-ள். வாசனைபொருந்திய சுரபுன்னை-புன்னை-முல்லை-செண்ப கம்-அசோகம்-குருக்கத்தி-செங்கழுநீர்-மா-கொன்றை - மந்தாரம்- பிச்சி- என்னுமிவைகளிருபுடையிலும் விளங்கிக்கொண்டிருக்கு ஞ்சோலையில் சந்திரகாந்தத்தினாற் செய்யப்பட்டு மரகதரத்தினம யமாய்த்தோன்றி மண்டபம்விளங்க—எ-று. (௩௰)

மண்டபநடுவிற்றோன்றுமரகதம்புருடராகந்
தண்டுகிர்வயிரங்கோமேதகமணிபதுமராக
மொண்டரளங்கணீலமொளிர்வயிரேமற்றுங்
கொண்டதோர்கனகபீடத்திருந்தனன்குமரன்றுதை.

இ-ள். அந்த மண்டபத்தினடுவில் தோன்றுகின்ற மரகதம்-புரு டராகம்-குளிர்ச்சிபொருந்திய பவளம்-வயிரம்-கோமேதகம்-பது மராகம்-ஒள்ளியமுத்துகள்-நீலம் - ஒளியுள்ள வயிரேயம் - என்னு மிவ்வகைரத்தினங்களும், மற்றவைகளும்பொருந்திய சுவர்ணத்தா

லாகிய சிங்காசனத்தில் சுப்பிரமணியக்கடவுளுடைய பிதாவாகிய பரமசிவன்வீற்றிருந்தனர்—எ-று. (௩௪)

(பத்மராகம்-என்பது—மாணிக்கம்.)

அரம்பையரனந்தங்கோடியாலவட்டங்கைக்கொள்ள
வரம்பறுகவரிவீசமருங்கினின்றேவல்கேட்ப
விரும்பியங்குறையும்போதில்விசயையென்பவளைநோக்கிக்
கரும்பெனுமுமையாடன்னையழைத்துவாகடிதினென்றார்.

இ-ள். அனந்தங்கோடிரம்பாஸ்திரிகள் கைகளில் ஆலவட்டங்களைக்கொள்ளவும், அளவற்றசாமரைவீசவும், இருபக்கத்திலுமிருந்து ஏவல்கேட்பவும், விருப்பமுடனங்கு வீற்றிருக்கும்போது விசயை என்பவளைநோக்கி நீசென்று கரும்பின்மதுரமென்று சொல்லத்தக்க பார்வதிதேவியாரை விரைவாக அழைத்துக்கொண்டுவாவென்று கட்டளையிட்டனர்—எ-று. (௩௫)

மின்னவிரிமயவெற்பில்விசயைமான்கடிதிற்சேர்ந்துன்
மன்னவனுமையேயங்குவருகவென்றுரைத்தாளென்று
ளென்னனுமகிழ்ச்சியாகியிமயமால்வரையைநீங்கிப்
பொன்னியல்சிவிகைமேற்கொண்டணுகினளொருபூங்காவில்.

இ-ள். ஒளிவிளங்கும் இமயமலையினிடத்தில் விசயையென்பவள் விரைவிற்சென்று உமையம்மையைநோக்கித் தாயே உன்கணவன் அங்கு அழைத்துக்கொண்டு வரச்சொன்னாரென்றாள். இவ்வாறுசொன்னவுடன் மகிழ்ச்சியாகி அந்தப்படியே இமயமலையைநீங்கிப் பொன்மயமாகிய சிவிகைமேற்கொண்டு ஒருபூஞ்சோலையிற் சேர்ந்தனர்—எ-று. (௩௬)

காமரங்குறிஞ்சிமற்றுங்களியளிக்குலங்கள்பாடக்
காமருஞ்செறியமாரன்காகளமனந்தங்கூவக்
காமரம்புகுந்ததென்றற்கால்டைத்தினிமைகாட்டக்
காமரம்புயங்களெல்லாமலர்ந்தனகயங்கடோறும்.

இ-ள். காமரமென்னுமிசையினையும் - குறிஞ்சியென்னும்பண்ணினையும் - மற்றுமுள்ள இசைகளையும் - களிப்புள்ள வண்டினங்கள்பாடவும், மன்மதனானவன் உலகத்தில்வாழும் உயிர்களுக்கு ஆசையையுண்டாக்கத்தக்க பஞ்சபாணங்களை யேவவும், அவனுக்குக்

காகளங்களாகிய குயில்கள் அனந்தமாகக்கூவவும், தென்றற்காற்று லாது விருக்ஷங்களுள்ள சோலையிலடைந் தினிமைகாட்டவும், அழகுபொருந்திய தாமரைமலர்களெல்லாம் தடாகங்கடோறு மலர்ந்தன—எ-று.

காமரம் - இசை.—காமர் - ஆசை.—அஞ்சு-பஞ்சபாணம்.—கா-சோலை - மரம் - விருக்ஷம்.— காமர் - அழகு.— இவ்வாறு பதம்பிரித்துக்கொள்க. முல்லை - அசோகமலர் - நீலோற்பலமலர் - மாம்பூ - தாமரைமலர் - இவை மன்மதபாணங்கள். (௩௪)

கங்கையஞ்சடையானம்பொற் காலின்மேற்சொரிதற்கென்றோ
வங்கையாலிறுகச்சோாதகலு நாள்வருத்துமென்றோ
செங்கயற்கருங்கட்பைம்பூட்சிற்றிடைப்பணைத்தகொங்கை
மங்கைநல்லாரையெல்லாமலர்பறித்திடுமினென்றாள்.

இ-ள். கங்கையைத்தரித்துள்ள அழகிய சடைமுடியையுடைய பரமசிவனது அழகும் பொலிவுமுள்ள திருவடிகளிற் சாற்றுதற்காகவோ, அழகுள்ள கையாற் பரமசிவத்தை யிறுகத்தழுவுதற்கின்றிப் பிரியுநாள் நேரிடுமாகிலவை வருத்துமென்றோ, செவ்விதானகயல்மீன்போன்ற கருங்கண்களையும் பைம்பொன்னாற்செய்யப்பட்ட ஆபரணமாகிய மேகலையணிந்த சிறிய இடையினையும் பருத்ததனங்களையுமுடைய தோழிகளைநோக்கி மலர்கொய்யுங்களென்று பார்வதிதேவியார் கட்டளையிட்டனர்—எ-று. (௩௫)

வேறு. கருமலர்க்குழலார்செறிகாவிடை
விரைமலர்க்கிடைவண்டிசைவிம்மின
வரனிடத்தவளவ்விடைசேர்தலான்
மரமுநல்லுயிர்பெற்றனமானுமே.

இ-ள். மலர்மாலைசெருகியுள்ள கரியஅளகபாரமுடைய மாதர்கள் நெருங்கியசோலையினிடத்தில் வாசனைபொருந்திய மலர்கள்தோறும் வண்டுகளினிசைமிகுந்தன அந்தஇசையோசையினால் பரமசிவத்தினிடப்பாகம்பெற்ற பார்வதிதேவியார்அவ்விடத்திற்சேர்ந்தமையால் மரங்களும் நல்லுயிர்பெற்றதையொப்பாகும்—எ-று.

காவினிலொருத்திதன்கரியபின்னலிற்
பூவினைச்செருகியபொழுதங்கினைத்

தாவியதரவெனவதனிற்றைக்கவே
யேவியகணைமலரொன்னலானதே.

இ-ள். சோலையினிடத்தி லொருமாது தன்னுடையமயிர்ப்பின்னலில் மலரைச்செருகியபோது அந்தமலர் சர்ப்பமானது சந்திரனைப்பற்றத்தாவியதென்றுகருதி அந்தச் சர்ப்பத்தின்மேல் தைக்கும்படி மன்மதனேவிய மலர்க்கணையையொத்திருந்தது—எ-று.

மயிர்ப்பின்னல் - பாம்பாகவும், அவர்களுடையமுகம் - சந்திரனுகவுங்கொள்க. (௩எ)

வேறு. கைதொடற்கெளியபோதுபறித்துத்தங்கரத்தாற்றீண்டி
யெய்துதற்கரியபோதிற்கிரங்கிமடந்தைநல்லார்
மைதிகழ்குழல்மேல்வண்டுமலர்க்கொடிவளைத்துவீழ்தல்
கொய்திடுமலரையென்றுகொடிதனைவளைத்தல்போலும்.

இ-ள். கையினுல் எட்டுதற்கு எளியதுகளாயிருக்கு மலர்களைப் பறித்துக்கொண்டு தங்கள்கையினுல் தீண்டிப்பறித்தலுக்கு அரிதாயிருக்கு மலரைக்குறித்து இரங்குகின்ற மாதர்களுடைய மேகம் போலக் கருமைநிறங்கொண்டு விளங்குகின்ற அளகபாரத்தின்மேலிருக்கும் வண்டுகள் பூங்கொடிகளைவளைத்துக்கொண்டு வீழ்தல் இந்தமலரைப் பறித்துக்கொள்ளுங்களென்று அவர்களுக்காகப் பூங்கொடிகளை வளைத்தல்போன்றன—எ-று. (௩அ)

சிற்றடிசெண்பகத்தடியிற்சேர்த்தொரு
பொற்றொடியொருகையாலணைத்துப்பூவெலா
மற்றொருகரத்தினுல்வளைத்துவாங்கினுள்
பற்றியங்கொருகொடிபடர்தல்போலுமே.

இ-ள். பொன்னுற்செய்த வளையலணிந்த கையினையுடைய ஒருமாதானவள் தன்னுடைய சிறியபாதத்தைச் செண்பகமரத்தினடியில்வைத்துக்கொண்டும் ஒருகையாலணைத்துக்கொண்டும் மற்றொருகையினுல் கிளைகளைவளைத்துப் பூவையெல்லாம்பறித்தனள். அவளவ்வாறு அம்மரத்தினருகு சேர்ந்திருக்குதல் ஒருகொடியானது அம்மரத்தைப்பற்றிப் படர்தல்போலிருந்தது—எ-று.

செண்பகவிருக்ஷம் கற்புள்ள மாதர்களுடைய நிழல்பட்டவளவில் மலருகின்றவிருக்ஷம். (௩௯)

பற்றிவேறொருவரும்பறித்திடாதொரு
முற்றிழைபறித்தனண்முல்லைப்போதெலா
மற்றவணகைகொடுவருதனோக்கினள்
பெற்றனளவளினும்பெரிதுநாண்மலர்.

இ-ள். தொழில்நிறைந்த ஆபரணமணிந்திருக்கும் ஒருமாதானவள் வேறொருவரும் பறித்திடாவண்ணம் முல்லைமலர்களையெல்லாம்பறித்தனள். அவள் மலர்களையெல்லாம் நாமேபறித்துக்கொண்டோமென்னும் சந்தோஷத்தினால் புன்னகையுடன் வருவதை பார்த்த மற்றொருத்தி நகைத்துக்கொண்டு வருகிறவளிடத்தினு மிகுந்தமலர் வாங்கிக்கொண்டாள்—எ-று. (௪௰)

தளவெனுநகைச்சியர்வளைக்கத்தாழ்தலா
லிளமுலைதொடுதலாற்றுகளிறைத்தலா
லளகமுடளிகளுமவிழ்த்துநீவலால்
வளமலருதவுகாமகிணர்போன்றதே.

இ-ள். முல்லையரும்பென்று சொல்லத்தக்க தந்தவரிசையையுடையமாதர்கள் வளைக்கத்தாழ்தலாலும், அவர்களுடைய இளமைத்தன்மையுள்ள தனங்களைத்தொடுதலினாலும், அவர்கள் அளகத்தை அவிழ்த்தலாலும், வண்டுகளையோட்டுதலாலும், மலருதவுகின்றவளம்பொருந்தியசோலையானது அவர்கள்கணவனையொத்தது—எ-று.

தாரணிகுழலினளொருத்திசண்பகத்
தேரணிநறுமலர்பறித்தவெல்லையிற்
பூரணமுலைகளிற்பொழிந்தபூமது
வாரணமருப்பினுடமதங்கள்போலுமே.

இ-ள். பூமாலையணிந்த அளகபாரத்தையுடைய ஒருமாதானவள் சண்பகத்தினுடைய அழகுபொருந்திய நல்லமலரைப் பறித்தபோது அவளுடைய அழகுநிறைந்த தனங்களில்பொழிந்ததேனானது யானையின்தந்தங்களில்படியும் மதநீர்போலிருந்தது—எ-று.

வேறு. போதுகுத்தபொழிலிடைநீங்கினர்
தாதுகுத்தமலர்த்தடஞ்சார்ந்தனர்
மீதுகுத்திறுமைந்திடும்வேலெனக்
காதுகுத்திவளைத்திடுங்கண்ணினர்.

இ-ள். மேலேகுத்தி யுள்ளேநுழைகின்ற வேலைப்போல் காதளவுஞ்சென்று குத்திவலைக்குங் கண்களையுடையமாதர்கள் மலர்களைச்சிந்துகின்ற சோலையிடத்தினின்றும் நீங்கினவர்களாய் மகரந்தங்களைச்சிந்துகின்ற தடாகத்திற்சேர்ந்தார்கள்—எ-று. (௪௩)

திளைத்திடுமொருத்திதன்சிவந்தவான்கலை
வளைத்திடப்புனனடுவாகத்தோன்றினாண்
முளைத்திடுந்தாண்மிசைமுருகறாவிதழ்
விளைத்திடும்பங்கயக்கிளியைப்போலுமே.

இ-ள். அத்தடாகத்திற்பொருந்திய ஒருமாதினுடைய சிவந்த புடைவையானது தன்னைச்சூழ்ந்திருக்கும்படி தோன்றுகின்றவள் அந்நீர்நடுவில் முளைத்திடுங்கொடியின்மேல் வாசனைநீங்காத இதழ்களுடன் பூத்திருக்குஞ் செந்தாமரைமலரிலிருக்குந் திருமகளைப் போல் காணப்பட்டாள்—எ-று.

ஈண்டுக்கிளியென்றது-ஆகுபெயர் பொருள்கூறுமிடத்து கிளிமொழிபோன்றமொழியுடையாளெனப்பொருளாதல்காண்க(௪௪)

ஒருமயிலளகமுமுடுத்தலன்றியே
விரிதருகலையுமேன்மிதக்கநீந்தினாள்
பெருமகன்மகிழ்ந்திடப்பின்னுமுன்னுமாய்ச்
சுரநதியமுனையைத்தொடர்தல்போலுமே.

இ-ள். தங்கள்கணவனாகிய சமுத்திரராஜன் மகிழும்படி கங்கா' நதியானது யமுனாநதியுடன் பின்னுமுன்னுமாய்த் தொடர்ந்து போகுதல்போல மயில்போன்ற சாயலையுடையவளாகிய ஒருமாதானவள் அளகபாரமும் முழுவதும் உடுப்பதற்கின்றிப் பார்த்த வஸ்திரமும் மேலேமிதக்கும்படிநீந்தினாள்—எ-று.

கங்கை - வெண்மைநிறம்—யமுனை - கருமைநிறம்—ஈண்டுவஸ்திரம் - வெண்மைநிறம்—அளகம் - கருமைநிறம். (௪௫)

காளமைப்புரிகுழற்பின்னல்கன்னலைத்
தோளெனப்படைத்தவண்முதுகிற்றோன்றுதல்
வேளெனப்பெயர்பெறும்வீரன்றன்கையின்
வாளினைக்கடறினில்வைத்தல்போலுமே.

இ-ள். கரும்பினைத் தோளாகப்படைத்த ஒருமாதினுடையமுது கினடுவில் கட்டுப்பட்டிருக்கிற கரிய அளகத்தின்பின்னலானது தோன்றுதல். வேளென்றுபெயர்பெற்ற மன்மதன்கைவாளை உறையில் வைத்ததுபோலிருக்கின்றது—எ று. (சசு)

(கடறு - வாளுறை.)

காமருபுனல்குடைந்தொருத்திகார்க்குழன்
மாமுதுகுறுதுபின்வளைத்துநின்றனள்
பூமதன்சுருப்புநாண்பூட்டியோரிரு
தாமரைபூட்டியசாபம்போலுமே.

இ-ள். அழகுபொருந்திய அந்நீரினிடத்தில் ஒருமாதானவள் மூழ்கிக் கருமைநிறமுள்ள தன்னுடைய குழற்பின்னல் முதுகினிடத்தில் பொருந்தாவண்ணம் எதிரில்வளைத்துநின்றனள். அப்பின்னல் மன்மதன்வண்டுகளாகிய நாணியைப்பூட்டி இரண்டு தாமரை மலர்க் கணைகளைப்பூட்டிய வில்லைப்போலிருந்தது—எ-று.

பின்னல்வளைந்திருத்தலால் - வில்லாகவும், அவளுடையகைகள் தாமரையம்பாகவுங்கொள்க. (சஎ)

பாசிழையொருத்திதன்முகத்தைப்பண்ணளி
மூசியகருங்குழன்மறைக்கமூழ்கினள்
ஆசையோடமுதசந்திரனையோர்கரு
மாசுணம்படத்துளேமறைத்தல்போலுமே.

இ-ள். மாற்றுயர்ந்த பொன்னினால்செய்யப்பட்ட ஆபரணங்களணிந்துள்ள ஒருமாதினுடையமுகத்தை இசைபாடுகின்ற வண்டுகள் மொய்த்துக்கொண்டிருக்கும் அளகமானது மறைக்கும்படிமூழ்கினள். அது அமுதம்நிறைந்தசந்திரனைக் கரும்பாம்பானது ஆசையுடன் தன்படத்துக்குள் மறைப்பதுபோன்றது—எ-று.(சஅ)

முத்தின்வாணகையினார்மூழ்கும்போதவர்
மெத்தியகுழற்புனலொழுக்குவெம்முலை
சித்தசன்முனிவிறாற்செலுத்தும்வாருண
வத்திரம்போலழகாகத்தோன்றுமே.

இ-ள். முத்தினையொத்த ஒளிபொருந்திய தந்தவரிசையையுடைய மாதர்கள் மூழ்கும்போது அவர்களுடைய பிருதுவாகிய

அளகத்திலிருந்து ஒழுகாநின்ற நீர்த்துளியானது மன்மதஸ்தோபத்தினால் அவர்கள்தனங்களில் ஏவுகின்ற வாருணாஸ்திரம்போல அழகாகத்தோன்றுகின்றது—எ-று. (௪௯)

ஒருத்திதன்குளிர்முகமொளிரவோங்கிய
மருக்குழன்முழுதுமெலாமறைக்கமூழ்கினாள்
வெருக்கொளமதியினைவிழுங்கும்வேளைபார்த்
திருட்குலமொளித்துவந்திருத்தல்போலுமே.

இ-ள். ஒருமாதானவள் தன்முகந்தெரியவும் மிகுந்தவாசனையுடன் கருமைநிறமுள்ள அளகபாரமானது தன்முதுகுமுழுவதையும் மறைக்கவுமூழ்கினாள். (அப்போது அந்தஅளகம்) அச்சங்கொள்ளும்படி சந்திரனைவிழுங்குங் காலம்பார்த்து இருட்கூட்டம்வந்து ஒளித்திருப்பதையொத்தது—எ-று. (௫0)

(அளகம் - இருளும், முகம் - சந்திரனுமாகக்கண்டுகொள்க.)

ககனவெண்மதியுடன்கமலப்போதினைப்
பகையறும்படியுடன்படுத்துவாளென
நகைமுலையொருத்தியந்நளினப்போதினை
முகமிசையழுத்தினண்முருகுவேண்டியே.

இ-ள். ஆகாயத்திலிருக்குஞ் சந்திரனுடன் தாமரைமலரைப் பகைநீங்கத்தக்கதாக உடன்படுத்துகின்றவள்போல அந்நீரிலிருக்குந்தாமரைமலரைப்பறித்துத் தன்முகத்தில்வைத்து அழுத்தினாள் வாசனையைவிரும்பி—எ-று. (௫௧)

வேறு. இடையினிலொழுகுந்தெண்ணீ
ரினியவான்கங்கைகாட்டப்
புடைவுளர்முலையில்வீழும்
புனன்மலையருவிமானத்
தொடைசெறிகுழலிற்சோருந்
துளிபுயற்றுளிநேராகக்
கடைதருமயில்வேற்கண்ணார்
திளைத்துநீர்க்கரையிற்சேர்ந்தார்.

இ-ள். அந்நீரில் முழுகியெழும்போது இடையினின்றொழுகுந் தெளிந்தநீரானது இனிதான ஆகாயகங்கையைக்காட்டவும்,

இருபக்கத்திலும் பரந்த தனங்களினிடத்திலிருந்து வீழும் நீரானது மலையருவியையொப்பாகவும், மாலைநிறைந்த அளகத்திலிருந்துசோருகிற நீர்த்துளியானது மேகம்பொழிகிற நீர்த்துளியையொப்பாகவும், கடைச்சல்பிடித்த கூர்மையுள்ள வேல்போன்ற கண்களையுடைய சிலமாதர்கள் நீரின்மூழ்கிக் கரையிற்சேர்ந்தார்கள்—எ-று.

மாதரிடையானது பார்ப்பவர்கண்ணுக்குத்தோன்றாமல் அதிக நுண்மையாயிருப்பதைப்பற்றி அதனை ஆகாயம்போற்கூறுதலால் அவ்விடத்தில் வீழ்கின்றபுனலை ஆகாயகங்கையென்று உவமித்தார். மற்றவை வெளிப்படை. (௫௨)

ஆனனமரும்புந்தெண்ணீ
ரம்புலியமுதாமென்னத்
தேனகுகமலப்போது
சிந்தியதிவலையென்னத்
தூநகைச்செவ்வாய்த்தெண்ணீர்
தொண்டையிற்சொரிதேனென்னக்
கானகமயிலைப்போல்வா
ரனைவருங்கரையிற்சேர்ந்தார்.

இ-ள். முகத்தினிடத்திருந்து சிந்துகிற நீரானது சந்திரனிடத்திலிருக்கும் அமுதம்போலாகுமென்றுசொல்லவும், இவ்வாறுசொல்வதுமன்றித் தேனுடன்மலருகின்ற தாமரைமலர் சிந்திய தேன்றுளியென்றுசொல்லவும், பரிசுத்தமுள்ள நகையினையுடைய செவ்வாயினிடத்திருந்து சிந்துகிறநீர் கோவைக்கனியினின்றும் சொரிகின்ற தேனென்றுசொல்லவும், வனத்திற்சஞ்சரிக்கு மயிலையொத்த மாதர்களெல்லாரும் ஸ்நாநஞ்செய்தானவுடன் நீர்க்கரையிற்சேர்ந்தார்கள்—எ-று.

(இவ்வாறு சொல்லுகின்றவர்கள் ஆடவர்கள்.) மாதர்கள்முகங்களை-சந்திரனைப்போலவும் செந்தாமரைமலரைப்போலவும் கூறுதலால் அம்புலியமுதாமென்றும், கமலப்போதுசிந்திய திவலையென்றும், அவர்கள் செவ்வாயைக் கோவைப்பழம்போற் கூறுதலால் தொண்டையிற்சொரிதேனெனவுங் கூறினர். (௫௩)

மறுகலேபுனைந்தாரந்த
மடந்தையர்முலேயிற்றோளிற்
சிறுமுகமிசையிற்கூந்தற்
சுமையினிற்றிவலேக்கூட்ட
முறுகரிமருப்பில்வேயி
லுயர்கமலத்திவ்வானி
னிறைதருமுத்தராசி
நிகர்ந்தனசிறிதுநேரம்.

இ-ள். நீர்க்கரையிற்சேர்ந்து மறுபுடைவை யுடுத்திக்கொண்ட அந்தமாதர்களுடைய தனங்களிலும் - தோட்களிலும் - சிறுமுகத் தினிடத்திலும் - அளகபாரத்தினிடத்திலும் பொருந்திய நீர்த்து ளிக்கூட்டமானது பெரிய யானைத்தந்தத்திலும் - மூங்கிலிலும் மலர்களுக்குள் உயர்ந்த செந்தாமரைமலரிலும் மேகத்திலும் நி றைந்திருக்கும் முத்தராசிகளை யொத்திருந்தன—எ-று.

மாதர்தனங்களை - யானைக்கொம்புக்கொப்பாகவும், தோள்களை- மூங்கிலுக்கொப்பாகவும், முகத்தைச் - செந்தாமரைமலருக்கொப் பாகவும், அளகத்தை-மேகத்துக்கொப்பாகவுஞ் சொல்லுதலாலும், யானைத்தந்தம் - மூங்கில் - தாமரை - மேகம்- இவைகளில் முத்தம் பிறப்பதினாலும், தனமுதலியவற்றில்தோன்றும் நீர்த்துளிகளை முத்தம்போலக் கூறினர். (௫௪)

வேறு. திரையேறுதிருமாதர்திரளாகுமெனவே
கரையேறிமடவார்கள்புடையேகலந்தார்
நரையேறுகொடியாகவுடையானைநண்ணி
யுரையேறுகிளிபோலுமுமையாள்பணிந்தாள்.

இ-ள். பாற்கடலிலிருந்து அநந்தமாக மகாலட்சுமிகள் கரை யேறியதுபோல அந்தநீரில்நின்றும் கரையேறிய தோழிமார்கள் தம்முடைய அருகிற்சூழ்ந்துவரும்படி வெள்ளைநிறமுள்ள ரிஷப த்தைக் கொடியாகவுடைய பரமசிவத்தினிடத்திற்சேர்ந்து மதுர மொழிவசனிக்குங் கிள்ளையையொத்த பார்வதிதேவியார் பணிந் தார்—எ-று. (௫௫)

திருமேனிவெயில்வீசுசிவனேர்புறத்தே
யுருமேனிகரிதானவுமையாளமர்ந்தாள்

அருளோடுபலகூறியழகானகுழன்மேன்
மருமாலைசிலசூடிமணிமார்பணிந்தார்.

இ-ள். கோடிசூரிய பிரகாசம்போலவிளங்குகின்ற திருமேனியினையுடைய பரமசிவத்தின்பக்கத்தில் சாமளநிறமேனியுள்ள பார்வதிதேவியார் வீற்றிருக்கச் சுவாமியானவர் அருளுடனே சில வார்த்தைகள்பேசி அழகாகிய கூந்தலினிடத்தில் வாசனைபொருந்திய சிலபூமாலைசூடிச் சிலரத்தினாபரணங்களை மார்பினிடத்திற்றரித்தார்—எ-று. (ருசு)

வேறு. மங்கைமேனியிலழகெலாம்பார்த்தரன்மகிழ்ந்து
செங்கையாலணைத்துறைம்செய்வானமுதமேதிருவே
கங்கையானதுயமுனையாமெனவுனைக்கருதிச்
சங்கையாகுமேயிறங்குமேசடையினுந்தாழ.

இ-ள். பார்வதிதேவியாருடைய திருமேனியின் சவுந்தரியத்தையெல்லாம்பார்த்துப் பரமசிவமகிழ்ந்து திருக்கரங்களால் தழுவிக்கொண்டு வசனிக்கின்றார். அமுதம்போல்பவளே செல்வம்போல்பவளே கங்கையானது உன்னை யமுனையென்று சந்தேகித்துச் சடையில்நின்று மிறங்குவளே—எ-று. (ருஎ)

காளியேயெனையுருக்குமுன்னெழிலெனக்கரந்தை
தாளியேறியசடையவனுரைத்தனன்றழல்சேர்
வாளியேயெனச்செவியினைச்சுடுதலும்வரைநேர்
தோளியேவுறுமயிலெனப்புலர்ந்திவைசொல்லும்.

இ-ள். காளியே உன்னுடையசௌந்தரியமானது என்மனதையுருக்காநின்றதென்று கரந்தைப்பத்திரமுந் தாளிமலரும்பொருந்திய சடையினையுடைய பரமசிவம்சொன்னவளவில் அந்தவார்த்தையானது தீயிற்காய்ந்துள்ள பாணம்போல காதினைச்சுடவே மூங்கிலையொத்த தோளையுடைய பார்வதிதேவியார் பாணமேறுண்ட மயில்போல மனம்வாடி இந்தவார்த்தை சொல்லுகின்றார்—எ-று.
கருமைநிறம்பற்றிப் பார்வதிதேவியாருக்குக் காளியென ஒரு பெயர் கூறப்படுகின்றது. (ருஅ)

உண்டகார்விடமயக்கியதிலையுமைத்தலைமேற்
கொண்டநீர்விடமயக்கியதெனப்பலகூறி

யண்டர்நாயகிதொடிகளைநெரித்தணிசிதறி
வண்டறுமலர்த்தொடைகளும்பரித்தனள்வாங்கி.

இ-ள். நீர் முன்னுண்ட கரியவிஷமானது உம்மைமயக்கியதில்லை உம்முடைய தலைமேற்கொண்டிருக்கும் நீராகியவிடம் இப்போதுமயக்கியதென்று பலவாகச்சொல்லித் தேவர்களுக்கெல்லாமிறைவியாகிய பார்வதிதேவியார் கைவளையல்களை நெரித்துவிட்டும் ஆபரணங்களையெல்லாம் சிந்திவிட்டும் வண்டுகள்நீங்காத பூமாலைகளையும்வாங்கி யெறிந்துவிட்டார்—எ-று. (௩௪)

காருநீருமாமெனும்படிகலந்துவான்கங்கை
நீருநீருமாயுடனுறைந்தினிதிருநெடுநா
ளோருமென்றனையழைத்ததுசலமகளுறவுஞ்
சேருநீர்படும்வருத்தமுங்காட்டவோசெப்பீர்.

இ-ள். மேகமும் நீருமாமென்றுசொல்லும்படி கலந்து நீருருவமாகிய கங்கையும் - நீரும் நெடுநாள் வாழ்ந்துகொண்டிருங்கள் இப்போதென்னையழைத்தது அந்தக்கங்கையினுடைய உறவும் அவளால் நீர்படுகின்ற வருத்தத்தையுங் காட்டவோசொல்வீர்—எ-று.

நன்றுநன்றெனப்புகையுடனகையுடனவின்றாண்
மன்றுளாடியவரதனுமுறைசெய்வான்மயிலே
யொன்றுமாகவென்பிழையிலையுரையினிற்பிழையுண்
டென்றுகூறினையதனையும்பொறுத்தருளென்றான்.

இ-ள். நன்றுநன்றென்று புகையுட னகையுண்டாகச்சொல்லினள். அவ்வாறுசொன்னவளவில் ஞானசபையில் ஆனந்தநடனஞ்செய்தருளிய பரமசிவமும் பிரிதியுத்தரவு சொல்லுகின்றனர். உமையவளே என்றால் யாதொருகுற்றமும் நேரிட்டதில்லை ஆனால் என் வார்த்தையில் குற்றமுண்டென்று சொல்லினை அவ்வாறுண்டாயிருந்தாலும் அக்குற்றத்தையும் பொறுத்தருளென்றார்—எ-று.

சந்தோஷத்தினாலும் - கோபத்தினாலும் - இகழ்ச்சியினாலும் - நகையுண்டாகும். அவற்றில் இங்குண்டான நகை கோபத்தினாலெனக்கொள்க. (௩௬)

நயந்துநாஞ்சொலுமொழிகணம்மிடற்றுறைநஞ்சோ
டியைந்தவாசிகாண்கொடுமைபோலிருந்ததென்றிசைத்தார்

வயந்தவேனிலும்புலவியாற்கழிப்பரோமாதே
யுயர்ந்தகோத்திரமகளிரும்வெறுப்பரோவுரையாய்.

இ-ள். உன்னிடத்தில் விருப்பங்கொண்டு நாஞ்சொல்லுகின்ற வார்த்தைகள் நம்முடைய கண்டத்திற்பொருந்திய விஷத்துடன் கலந்துவருந் தன்மையினுல் உனக்குக் கொடுமைபோலிருந்ததெ ன்றுசொல்லி உமையவளே, மாதர்கள் வசந்தகாலமாகிய வேனிற் காலத்தையும் ஊடலினுல் வீணிலேகழித்துவிடுவார்களோ உயர்ந் தகோத்திரத்திற்பிறந்த மாதர்கள் கணவர்களை வெறுப்பார்களோ சொல்லுவாயாகவென்று சுவாமிகூறினர்—எ-று. (௬௨)

இருளைநேர்தருங்குழலியேபுலவியேனென்றார்
பருதிமாமதிவிழியரோவிடுமெனப்பகர்ந்தாள்
மருவுமான்விழிமடந்தையேமறஞ்செலாதென்றார்
பொருதவேங்கையினுரியரோவிடுமெனப்புகன்றாள்.

இ-ள். இருளையொத்த அளகத்தையுடைய உமையவளே, என் னிடத்திலுனக்கு ஊடல்நேரிடக்காரணம் யாதென்றார்.—இருளை நீக்குகின்ற சூரியசந்திரர்களாகிய நேத்திரங்களுள்ளவரே, அந்தவா ர்த்தையை அந்தமட்டில் நீக்கிவிடுமென்று பார்வதிதேவியார் சொ ல்லினர். மான்விழிபோல்பார்வையுள்ள உமையவளே இந்தக்கோ பம் நீடித்துச்செல்லாதென்றார். அப்படியானுல் மானைக்கொல்ல த்தக்க புலியின்தோலையுடையவரே அந்தவார்த்தையை விட்டுவிடு மென்றார்—எ-று.

சூரியசந்திரர்களுக்கெதிரில்-இருளிராததுபோலவும், புலிக்கெ திரில் - மானிராததுபோலவும், உமக்கெதிரி லூடலிராதென்பது தோன்றத் தேவியார்கூறினர்.—வலக்கண் - சூரியனும், இடக்கண் - சந்திரனும், நெற்றிக்கண் - அக்கினியுமாக அறிந்துகொள்க. இவ் வுலகத்துக்கு ஆதாரமாகிய முச்சுடர்களுமோ பரமசிவத்துக்கு நேத்திரங்களென்னில் அல்ல அந்தமுச்சுடரின் பிரகாசத்துக்கும் காரணமாயிருப்பது, இதனைப் பார்வதிதேவியார் சுவாமியினுடை ய கண்களை மூடியகாலத்தில் இந்தமுச்சுடர்களிருந்தும் உலகமெ ல்லா மிருண்டுவிட்டதென்பதினுலுமறிக. (௬௩)

இயலுமோதிமநடைச்சியேமுனிவதேனென்றார்
புயலைநேரொனுமிடற்றரோவிடுமெனப்புகன்றாள்

மயிலைநேர்தருஞ்சாயலாய்மறஞ்செலாதென்றார்
பயிலராவணிபுயத்தரோவிடுமெனப்பகர்ந்தாள்.

இ-ள். பொருந்திய அன்னநடையினையுடைய உமையவளே இவ்வாறு கோபஞ்செய்யலாமோ வென்றார். மேகத்தையொப்பதென்றுசொல்லத்தக்க காளகண்டத்தையுடையவரே அந்தவார்த்தையை விட்டுவிடுமென்று சொல்லினள். மயிலையொத்த சாயலையுடைய உமையவளே கோபமாகாதென்றார். அம்மயிலுக்குப் பகையாகிய சர்ப்பங்களையணிந்த புயங்களுள்ளவரே அந்தவார்த்தையைவிட்டுவிடுமென்றாள்—எ-று.

மேகத்தைக்கண்ட அன்னமொதுங்கிவிடுவதுபோலவும், மயிலைக்கண்ட பாம்புபோலவு முடல்நீங்கிவிடுமென்பது கருத்து. (௬௪)

வான்பிடித்துறைசுரநதிபுனலதுவடிவாங்
கான்பிடித்தசெஞ்சடை யுடன்வடிவெலாங்கனலாம்
யான்பிடிப்பதெப்படியெனவுரைத்திடக்கரத்தின்
மான்பிடித்தவன்கலைபிடித்தான்மலைமானை.

இ-ள். (இவ்வாறுசொல்லிவந்த உமையம்மை கோபந்தணிந்து சொல்லுகிறார்.) ஆகாயத்தைப்பற்றிவாழ்கின்ற கங்கை நீர்வடிவாகும், வாசனைபொருந்திய சடையுடன் உம்முடைய திருமேனியோவென்றால் தீயின்வடிவாகும், இவ்வாறிருக்குமும்மை நான்பிடிப்பதெப்படியென்றுசொல்ல, திருக்கரத்தில் மான்பிடித்திருக்கும் பரமசிவம் பார்வதிதேவியாருடைய முன்தானையைப்பற்றினர்—எ-று. (௬௫)

வேறு. பற்றிமீசர்பிடித்தலும்பன்மணி
யுற்றமேகலைமுத்தமுதிர்ந்தன
சுற்றுமேகலைதானுந்துவண்டுகண்
ணுற்றநீரொழுக்குதல்போலுமே.

இ-ள். இவ்வாறு பரமசிவம் உமையம்மையினுடைய முன்தானையைப்பற்றினவளவில் மேகலாபரணத்திற்பொருந்திய முத்துகளெல்லாமுதிர்ந்தன. (அதுஅவ்வாறுதிர்ந்தது) உமையம்மை ஊடலால் கண்ணீர்சிந்தக்கண்டு அம்மேகலையும்வாடிக்கண்ணீர்சிந்துவதுபோன்றது—எ-று. (௬௬)

வேறு. பயிறருங்கலைபறித்தனளரவுரிபற்றி
மயிலகன்றிடுஞ்செயலெனவிறையவன்மகிழ்ந்தான்
சயிலமங்கைதன்விழியிணைசிவந்துரைதந்தாள்
குயிலெனும்படிகண்டுகண்டுள்ளமுங்குழைந்தான்.

இ-ள். சுவாமி தன்னுடைய மூன்றானையைப்பிடித்தவளவில் பார்வதிதேவியார் அந்தமூன்றானையை விடுவித்துக்கொண்டனர். அதைப் பரமசிவன்கண்டு பாம்பின்தோலைப்பற்றிக்கொண்டு மயில் செல்லுந்தன்மைபோ லிருக்கின்றதென்று மகிழ்ந்தார். மீட்டும் பார்வதிதேவியார் தன்கண்கள்சிவந்து கோபமாகவசனித்தார். அதைக்கண்டு குயில்போன்றிருக்கின்றதென்று பரமசிவன் மகிழ்ந்தனர்—எ-று.

குயிலின்கண் - செம்மைநிறமுள்ளதாதலாலும், உமையம்மை வார்த்தை - அதனுடைய தொனிபோலிருத்தலாலுங் குயிலென மகிழ்ந்தாரென்பது தாற்பரியம். (௬௭)

வேறு. கைம்மறிச்சிவன்காளியென்றோதலும்
வெம்மைபற்றிவிழிகள்சிவந்தன
வம்மைபச்சையவயவம்யாவையுஞ்
செம்மையுற்றிடல்செப்புதல்போலுமே.

இ-ள். கையில்மானேந்திய பரமசிவன் உமையம்மையைநோக்கிக் காளியென்றுசொல்லியவளவில் உமையம்மைக்கு மனம்வெம்பிக் கண்கள்சிவந்தன. அவ்வாறுசிவந்தது உமையம்மையினுடைய மரகதமணிநிறமுள்ள அவயவங்களெல்லாம் இனிச் செம்மைநிறம் பொருந்துமென்று காண்பிப்பதுபோலிருந்தது—எ-று.

செம்மைநிறம்பொருந்துமென்று காண்பிப்பதுபோலக் கண்கள்சிவந்தனவென்று கூட்டுக. (௬௮)

நித்தனார்கைபிடித்தலுநித்தில
வுத்தரீயமவிழ்ந்துமையாள்செல
வைத்ததானைத்தடுத்ததுவானதி
பத்தியாற்புதம்பற்றுதல்போலுமே.

இ-ள். பரமசிவம் உமையம்மையினுடைய திருக்கரத்தைப்பிடித்தவளவில் முத்துகளாலாகிய உத்தரீயம்வீழ்ந்து உமையம்மை

நடக்கப்பெயர்த்த திருவடியைத்தடுத்தல் கங்கையானவள் பத்து யினால் தாயே நீரூனிந்து செல்லவேண்டாமென்று உமையம்மை யினுடைய திருவடிகளைப் பற்றிக்கொள்வதுபோலுமிருந்தது.—
(ஆகாயகங்கைவெண்மைநிறமுள்ளதாதலினிவ்வாறுகூறினர்.)

வேறு. விசையினானீங்கினாள்விசயைதன்னுட
னிசைவிலாவரன்மொழியாவுங்கூறினாள்
வசையிலாத்தவஞ்செயவாரணசியெத்
திசையிலேயுளதெனத்தேடிச்சேர்ந்தனள்.

இ-ள். இவ்வாறு வேகத்துடன்சென்ற பார்வதிதேவியார் ஒத்து மையில்லாத பரமசிவத்தினுடைய வார்த்தைகளையெல்லாம் தம்மு டையதோழியாகிய விசயையென்பவளுடன்சொல்லிக் குற்றமில் லாத தவஞ்செய்வதற்குக் காசி யெந்தத்திசையிலிருக்கின்றதென்று தேடிக்கொண்டு எழுந்தருளினர்—எ-று. (எய)

சாற்றுமத்தலத்தினைச்சார்ந்துநம்பனைப்
போற்றியவ்விடைத்தவம்புரியவெண்ணினாண்
மாற்றவள்பெயரினான்மருவுகின்றபே
ராற்றினிற்கொடுமையாலதனைநீங்கினாள்.

இ-ள். சொல்லுகின்ற அந்தத்தலத்திற்சேர்ந்து அவ்விடத்தில் பரமசிவனைத்துதித்துத் தவஞ்செய்யக்கருதி அங்கிருக்கும்நதியா னது தன்னுடையமாற்றவளாகிய கங்கையின்பெயரினால் பொரு ந்தியிருப்பதால் கங்கையிடத்துத் தனக்குண்டாயிருக்கிற விரோ தத்தைப்பற்றி அந்த எண்ணத்தைநீங்கினாள்—எ-று.
நம்முடைய சக்களத்தியானவள் நதிரூபமாயிருப்பதினால் இது தகுதியான இடமல்லவென்றுகருதி நீங்கினாளென்பது கருத்து.

மாணிழையுமையவள்வாரணசிபோற்
பேணியதலங்களுமுனிவிற்பேர்சொல
நாணியநதியைநேர்நதியுநாடியே
காணியவெழுந்தனள்காசிநீங்கினாள்.

இ-ள். மாட்சிமைபொருந்திய ஆபரணங்களணிந்த பார்வதிதே வியார் வாரணசியென்னுங் காசிபோல யாவரும்விரும்பியதலங்க ளும் கோபத்தினால்பேர்சொல்லவுங்கூடாமல்தம்முடையமனதில்

நாணமுண்டாவதற்கேதுவான கங்கைநதியைபொத்த நதியையுங் காண எழுந்து காசியைவிட்டுநீங்கினள்—எ-று.

நதிகளுக்குள் கங்கையானது சிறந்ததாயிருந்தாலும் அது சக்களத்தியென்னும் முறைமையையுடையதா யிருப்பதினால் வெறுப்புண்டாகி அந்தநதியின்பெயரை வாக்கினாற்சொல்லவும் நாணினளென்று உணர்ந்துகொள்க. (எ௨)

வேறு. பதிகளுக்கெலாம்பதியெனும்விரிஞ்சையம்பதியு
நதிகளுக்கெலாமதிகமாம்பாலிமாநதியுங்
கதியளித்திடும்வழித்துணைமருந்தையுங்
ளதிகமித்தலம்வாரணசியிலெனவறைந்தாள்.

இ-ள். காசியைவிட்டுச் செல்லும்போது தலங்களுக்கெல்லாம் சிரேஷ்டமென்று சொல்லத்தக்க திருவிரிஞ்சைப்பதியும், நதிகளுக்கெல்லாம் சிரேஷ்டமாகிய பாலிமாநதியும், முத்தியருளிச்செய்கின்ற மார்க்கசகாயரையுங்கண்டு இந்தத்தலம் காசிக்ஷேத்திரத்தைப்பார்க்கிலும் விசேஷமானதேயென்று பார்வதிதேவியார்சொல்லினர்—எ-று. (எ௩)

வேறு. செந்தமிழ்குலவுமத்தலத்திற்சேர்ந்திடுங்
கந்தரக்குழலினள்கதைபிற்கூறுவாஞ்
சந்தனச்சோலையிற்றனித்துமேவிய
நந்திதன்செயலினிநவிலுவாமரோ.

இ-ள். தமிழ்வேதமாகிய தேவாரப்பதிகம் விளங்கிக்கொண்டிருக்கிற அந்தத்தலத்தில் சேர்ந்தருளிய மேகத்தையொத்த கருநிறமுள்ள அளகபாரத்தையுடைய பார்வதிதேவியாரது சரித்திரத்தைப் பின்புகூறுகின்றோம். சந்தனச்சோலையில் தனித்திருக்கும் பரமசிவனுடையசெய்கையை இனிச்சொல்லுகின்றோம்—எ-று.

இந்தத்தலம் - வைப்புத்தலத்தி லொன்றாயிருப்பதினால் பதிகம் பெற்றதலமே. (எ௪)

வேறு. அன்னைவிழிசிவந்தனவென்றரன்விழியுஞ்சிவந்ததுபோ
லருக்கன்மேனி
வன்னியுருப்படைத்துநெடு வரைமிசையிற்புகுந்தொளித்தா
னாலைப்போதாற் [ன்

செந்நிறமும்படைத்தகுடதிசையுமிருள்கலந்தகுண
திசையுங்கூட்டக்
கன்னியொருபுறமாகவிறைவனொருபுறத்தமைந்த
காட்சிபோலும்.

இ-ள். பார்வதிதேவியாருடைய திருக்கண்களுடனின்று சிவந்த னவென்று பரமசிவத்தின் திருக்கண்ணுஞ் சிவந்ததன்மைபோலச் சூரியதேவனானவன் அக்கினித்தேவன்போலச் செம்மைநிறம்பெற்று அஸ்தமனகிரியிற்போ யொளித்தான். அப்போது மாலைப் போதுவரச் செம்மைநிறம்பெற்ற மேற்குத்திசையினையும் இருள்சேர்ந்த கிழக்குத்திசையினையுங் குறித்துப் பார்க்குமிடத்துப் பார்வதிதேவியார் ஒருபாகமாகவும் பரமசிவமொருபாகமாகவும் பொருந்திய தோற்றம்போலிருந்தது—எ-று.

மாலைப்பொழுதாவது - சூரியன்மறைந்தவுடன் பகலென்பதும் மிரவென்பதுமில்லாதகாலம். (எஞ)

சந்தனுசலத்தனத்துமைபிரிதலுந்தனித்த
வெந்தையார்சுடர்விழிக்கவளுருவெளியென்ன
வந்தகாரமும்பரந்ததுகதிர்விழிமதிப்பாற்
சிந்திமேலெழுந்திவலைபோலுடுக்கணஞ்செறிந்த.

இ-ள். சந்தனுசலத்தையொத்த திருத்தனபாரமுள்ள பார்வதிதேவியார்பிரிந்தவளவில் தனித்திருக்கும் எம்மையனாகிய பரமசிவனுடைய திருக்கண்களுக்குப் பார்வதிதேவியாருடைய உருவெளித் தோற்றங்காண்பதுபோல இருள்பரந்தது அவருடையதிருநேத்திரமாகிய கிரணங்களுள்ள சந்திரனிடத்திருந்து சிந்தி மேலெழுந்த அமுதத்துளிபோல நக்ஷத்திரக்கூட்டம் ஆகாயத்தில்நிறைந்தன—எ-று.

பார்வதிதேவியாருடைய திருமேனி கருமைநிறமாதலா லிவ்வாறுகூறினர். (எஅ)

அத்தனுருமத்தலம்விடுத்தசலமீதடைந்து
பத்தர்சூழவேயிருந்தனர்நிரைத்தபாற்பரவை
கைத்தலங்களால்விடத்தினைக்குழைத்தொருகலத்தில்
வைத்ததாமெனவெழுந்ததுகளங்குசேர்மதியம்.

இ-ள். பரமசிவமும் அந்த இடத்தைவிட்டுக் கயிலையங்கிரியிற் சேர்ந்து பத்தர்கள்சூழும்படி வீற்றிருந்தனர். இப்படியிருக்க அலைகளையுடைய பாற்கடலானது தன்கையால் விஷத்தைக்குழைத்து ஒருவெள்ளித்தட்டில் வைத்ததுபோலக் களங்கம்பொருந்திய சந்திரனுதயமாயிற்று—எ-று. (எஎ)

இத்திறமதியந்தோன்றுமெல்லையிலிறையைநோக்கி
யத்திமாமுகத்தினுனுமறுமுகத்தவனுஞ்சொல்வார்
முத்தரோயுமதுதென்பான்முகத்தினிற்கருமையெல்லாம்
பத்தியாதவினலன்றோபகத்ததெம்மன்னையென்றார்.

இ-ள். இவ்வண்ணஞ் சந்திரனுதயமானபோது யானைமுகமுள்ள விநாயகரும், ஆறுமுகமுள்ள சுப்பிரமணியக்கடவுளும், பரமசிவத்தைநோக்கிச் சொல்லுகின்றார்கள். நிர்மலராகிய ஐயரே உம்முடைய தென்புறத்திலிருக்கும் அகோரமுகத்தினுடைய கருமைநிறமுழுவதும் பாய்வதினாலல்லவோ எங்கள்தாயினுடைய திருமேனி நீலநிறங்கொண்டதென்றார்கள்—எ-று.

ஈசானம் - தற்புருடம் - அகோரம் - வாமம் - சத்தியோசாதம் - எனப் பரமசிவத்தினுடைய திருமுகங்கள் ஐந்து.—இவற்றுள் ஸ்படிகநிறம் - பொன்னிறம் - நீலநிறம் - செம்மைநிறம் - வெண்ணிறம் - இவ்வைந்துநிறமும் முறையாக ஐந்துதிருமுகங்களுந் தனித்தனியுடையனவென்றறிக.—ஈசானமுகம்- எல்லாவற்றையும் ஆளுதல், தற்புருடமுகம்-காத்தல், அகோரமுகம்-அழித்தல், வாமம்-விளக்கல், சத்தியோசாதம்-தோற்றுவித்தல்.— தற்புருடம் - கிழக்குமுகமாகவும், அகோரம் - தெற்குமுகமாகவும், வாமம் - வடக்குமுகமாகவும், சத்தியோசாதம் - மேற்குமுகமாகவு மமைந்திருக்கும், ஈசானம் - ஆகாயத்தைநோக்கி ஊர்த்தமுகமாயிருக்கும். இவையுமன்றி அதோமுகமென்பதுமொன்றுண்டு.—சுப்பிரமணியர் திருவவதாரத்தின்பொருட்டு இந்தமுகமும்விளங்கப் பரமசிவம் ஆறுதிருமுகங்கொண் டமைந்தது. இதைக்குறித்தின்னமு மெழுதப்புகிற் பெருகும். (எஅ)

திமதகரியின்றோல்போர்த்திருந்துநீர்நீண்டலாலே
யாமளவடிவாயன்னைகருகினளவைதானன்றிக்

காமனையெரித்தபோதிலவனுடற்கனலிற்றோன்றுந்
தூமமேயிறைவிமேனிசுற்றியதன்றோவென்றார்.

இ-ள். கொடுமையுள்ள யானையின்தோல் போர்த்துக்கொண்டி ருக்கும் நீர் தீண்டினதாலல்லவோ காளிவடிவாயெங்கள்தாயானவள் கருமையுருவமாயினள். அவையுமன்றி மன்மதனையெரித்தபோது அவனுடையசரீரம் பற்றிக்கொண்டெரிந்த தீயிலுண்டாகிய புகை யானது எங்கள்தாயினுடைய திருமேனியில் சூழ்ந்துகொண்ட தல்லவோவென்றுஞ் சொன்னார்கள்—எ-று. (௭௯)

கருகியவிடஞ்சேர்நீலக்களத்தினிர்கரத்தாற்சேர்த்து
மருகிருந்தமையினாலுமடுத்ததுகளங்கமல்லா
லொருகளங்குண்டோவீரேழுலகினையளித்தாட்கந்தத்
திருவுருவனைத்துஞ்சோதிச்சித்துருவாகுமென்றார்.

இ-ள். கறுத்தவிஷம்பொருந்திய கண்டத்தினையுடைய நீர் உம் முடையகைகளால் தழுவியும் அருகிலிருந்தமையாலும் களங்கம் பொருந்தியதேயன்றிக் கீழேழு மேலேழுஎன்னும் பதினான்கு உலகங்களையுமீன்றருளிய லோகமாதாவுக்கு வேறொருகளங்கமு ண்டோ, அந்தத் திருவுருவமுழுவதுஞ் சிற்சோதிசொரூபமாமே யென்றுஞ்சொன்னார்கள்—எ-று. (௮௰)

அப்படியாகுமென்றேயரன்மகிழ்ந்தருளானோக்கிக்
கைப்பதுமங்களாரவெடுத்துமெய்கலந்துபுல்கி
யொப்புவேறில்லாவுங்களன்னையவ்வுருவமாற்றித்
துப்புடையுருவமாகத்தோன்றுவளென்றுஞ்சொன்னான்.

இ-ள். அவ்வாறேயிருக்கலாமென்று பரமசிவன்மகிழ்ந்து அவர் களை அருளுடனோக்கிக் கைத்தாமரைமலர்களால் எடுத்து மார்போ டணைத்துக்கொண்டு வேறொரு ஒப்பில்லாத உங்கள் தாயானவள் இனியிந்த உருவமாறிப் பவளத்துக்குள்ள செம்மைநிறம்பெறுவ ளென்று திருவாய்மலர்ந்தருளினர்—எ-று. (௮௧)

வேறு. தீயகங்குல்புலர்ந்திடத்திங்களுந்
தூயதாரகைச்சோதியும்போயின
மேயவாணவம்போகவினைகளு
மாயையாவையுமாய்த்தனமானுமே.

இ-ள். அப்போது கொடியதாகிய இருளானது நீங்கிற்று. நீங்கினவளவில் சந்திரனுடையபிரகாசமும், நக்ஷத்திரங்களினுடைய பிரகாசமு மழுங்கிப்போயினவல்ல. பிறவிதோறும்விடாது பொருந்திய ஆணவமலம் நீங்கினவளவில் நல்வினை - தீவினையென்னும் இருவினைகளும், சுத்தமாயை - அசுத்தமாயையென்னு மிருவகை மாயைகளும் நீங்கினதையொத்தது—எ-று. (௮௨)

எய்ந்தகானிலிபந்துயினீங்கியே
போந்தகாகமுதலியபோயின
மேய்ந்தவண்டும்பிரிந்தவிடிதலாற்
றேய்ந்துதேய்ந்திருள்செல்லுதல்போலுமே.

இ-ள். விடியற்காலத்தில் இருளானது கொஞ்சங்கொஞ்சமாய்த் தேய்ந்துபோதல்போல அந்தவனத்தில் நித்திரைசெய்துகொண்டிருந்த யானைகள் நித்திரைநீங்கிச்சென்றன. இவையுமன்றிக் காகமுதலாகியவைகளும் நீங்கிப்போயின. மலர்களிற்பொருந்திய வண்டுகளும் பிரிந்தன—எ-று. (௮௩)

வேறு. சீரியகமலப்போதுதிறந்தனதிறந்தபோது
காரியலளியின்கூட்டமெழுந்தனகமலநீங்கிச்
சூரியகரங்களாலேதொகுமிருட்கிழங்கைப்பற்றி
வேரினிற்களைந்துவாரிவிண்ணின்மேல்விடுத்தல்போலும்.

இ-ள். இராத்திரியில் குவிந்திருந்த சிறப்புள்ள தாமரைமலர்களிதழ்கள்விரிந்தன. அவ்வண்ணம் விரிந்தபோது அம்மலருக்குள் அகப்பட்டுக்கொண்டிருந்த கரியநிறம்பொருந்திய வண்டினங்கள் தாமரைமலர்களைவிட்டு மேலெழுந்து பறந்துபோயின. அவ்வண்டுக ளவ்வண்ணம் மேலேபறந்துபோவது சூரியதேவன் தன்னுடையகைகளாலே இருளின் மூலத்தைப்பற்றி வேரைக்களைந்து வாரி ஆகாயத்தின்மே லெறிவதுபோலிருந்தது—எ-று. (௮௪)

தோட்டுமென்குமுதங்களுமுகங்களைச்சுருக்கப்
பேட்டுடன்முகமலர்ந்தனசக்கரப்பெயர்ப்புள்
வாட்டமின்றியவெழுபரித்தேரின்முன்வடம்போற்
கீட்டிசைக்கணேவிரிந்தனபரிதியின்கிரணம்.

இ-ள். இதழ்களுள்ள மிருதுவாகிய அல்லிமலர்களும் முகங்களைச்சுருக்கிக்கொண்டவளவில் சக்கரவாகப்பக்ஷிகள் தத்தம் பெட்டைகளுடன் மகிழ்ச்சியடைந்தன. வாட்டமில்லாத எழுகுதிரைபூட்டியிருக்குஞ் சூரியனுடையதேரிற் கட்டியிருக்கிற வடக்கயிறுபோல சூரியகிரணங்கள் கீழ்த்திசையில்விரிந்தன—எ-று.

சக்கரவாகப்பக்ஷிகள் ஆணும்பெண்ணும் இரவிற்பிரிதலும்,உதயமானபின் கூடுதலுமுடையவை. பிரியும்போது துக்கமும், கூடும்போது சந்தோஷமுமுண்டாகும். (அ௫)

திலகமன்னவள்கருநிறமகற்றிமேற்சிவந்திவ்
வுலகமீதினில்வருகுதலுரைப்பவரொப்ப
நிலமுமெண்டிசையிடங்களுமிமையவர்நிலமுங்
குலவுகங்குலும்புலர்ந்ததுசிவந்ததுகுணபால்.

இ-ள். திருமகள்முதலிய தேவமாதர்களுக்குத் திலதம்போன்ற பார்வதிதேவியார் கருநிறம்நீங்கிப் பவளநிறம்பெற்று இவ்வுலகத்தினிடத்தில் வருகின்றதைச் சொல்லுகின்றவர்களை யொப்பாகப் பூலோகமும் - அஷ்டதிசைகளும் - தேவருலகமும் -வியாபித்திருந்த இருளும்நீங்கிற்று. கிழக்குத்திசைசிவந்தது—எ-று.

உமையம்மையின் கருமைநிறம்நீங்கியதுபோல் இருள்நீங்கிற்றென்றும், செம்மைநிறங்கொண்டதுபோல் கிழக்குத்திக்கு சிவந்ததென்றுங்காண்க. (அ௬)

மங்கைபாலியிற்படிந்திறையவனடிவழுத்தி
யங்கைநீரின்மேற்குவித்திருகரமணியசைத்தாள்
துங்கவாரிசக்குவிமுகையவிழ்ந்துமேற்றோன்றப்
பொங்குமாடளிக்குலமதிற்சுழலுதல்போலும்.

இ-ள். பார்வதிதேவியார் பாலிநதியில் ஸ்நாநஞ்செய்து, பரமசிவத்தினுடைய திருவடிகளைத்துதிசெய்து, தம்முடையதிருக்கரங்களை நீரின்மேற் குவிவாகவைத்துக்கொண்டு இரண்டு அங்குலி விரல்களையும் கரநியாசத்தின்பொருட்டு அசைக்குதல் பரிசுத்தமுள்ளதாய்க் குவிந்திருக்குந் தாமரையரும்பானது மலர்ந்தபோது பக்கங்களிலிருக்கிற வண்டுகள் அந்தமலரிற் சூழ்ந்துகொண்டிருப்பதுபோலிருக்கின்றது —எ-று. (அ௭)

வேறு. வேலாழிதனையிமையோர்மலையெடுத்துள்
ளுடைத்தலைத்தவிதனத்தாலே
மாலானநெடியவனுக்கொருதிருவை
யளித்ததென்றுமனத்தாலெண்ணிப்
பாலாறுமொருமயிலைவருந்தாம
லிறையவர்க்குப்பளித்தாலென்னச்
சேலானவிழியுமையாண்முழுகிவட
கரையில்வந்தாடேவர்போற்ற.

இ-ள். பாற்கடலானது மலையைநாட்டித் தேவர்கள் தன்னைவரு
த்தவருந்தி அந்தவிதனத்துடனே மகாவிஷ்ணுவுக்கு ஒருதிருவை
யளித்ததென்று மனதிலெண்ணிப் பாலிநதியான து வருத்தமடை
யாமல் மயில்போன்ற ஒருதிருவைப் பரமசிவனுக்குக்கொடுத்தது
போல் சேல்மீன்போன்ற கண்களுள்ள பார்வதிதேவியார் தேவர்
களெல்லாருந் துதிசெய்யும்படி பாலிநதியில் ஸ்நாநஞ்செய்து
வடகரையில்வந்தார்—எ-று.

சேல்மீனானது முட்டையிட்டுக்கொண்டுபோய்க் கடைசியில்
அவைகளை விருப்பத்துடன் பார்த்தவளவில் அவைகள் குஞ்சுக
ளாய்த் தாய்மீனுடன் தொடர்ந்துபோய்விடுவதுபோலப் பார்வ
திதேவியார் கிருபையுடன் பார்த்தவளவில் உயிர்களுய்வதினால்
சேற்கண்ணளென்றும், மீனாக்ஷியென்றும்சொல்லுகின்றது.(அஅ)

வேறு.பாலிமாநதியைநீங்கிவடகரைமருங்கிற்பன்ன
சாலையொன்றமைத்துவெய்யதவங்களைமுடித்தாளந்த
வேலையில்வேலைசூழுமேதினிபடைத்தவேதன்
சிலமாமுனிவர்தேவர்பணிந்தனர்செவ்விநோக்கி.

இ-ள். பாலாற்றினைவிட்டுநீங்கி அதன்வடகரையினருகில் ஒருப
ன்னசாலையேற்படுத்திக்கொண்டு அருமையானதவஞ்செய்தா[ள்]. அ
ப்போது சமுத்திரத்தாற்சூழப்பட்ட பூலோகத்தைப்படைத்த பி
ரமதேவனும் சிலமுள்ள முனிவர்களும் தேவர்களும் சமயந்தெ
ரிந்துகொண்டு வந்துபணிந்தார்கள்—எ-று. (அகூ)

(பன்னம் என்பது-பச்சிலை.)

ஞானமாய்க்கிரியையாகிநயப்புமாயமர்ந்தாய்போற்றி
வானமாய்க்காலாய்த்தீநீர்மாநிலமாவாய்போற்றி

யேனமாநெடியோனுக்கு மெகினமாமெனக்குஞ்சொல்லின்
மோனமாமதீதத்துற்றமுதல்வியேபோற்றிபோற்றி.

இ-ள். ஞானசத்தியாகியும் - கிரியாசத்தியாகியும் - இச்சாசத்தி யாகியு மிருப்பவளேபோற்றி, ஆகாயமாகியும் - வாயுவாகியும்- தே யுவாகியும் - அப்புவாகியும் - பிரிதிவியாகியும்இருக்குந் தாயேபோ ற்றி, இன்னமுஞ்சொல்லுமிடத்தில் பன்றியாகிய திருமாலுக்கும், அன்னமாகிய எனக்கும், மனவாக்குக்கெட்டாத மோனமாகிய அதீ தத்திற்பொருந்திய முதல்வியே போற்றிபோற்றி—எ-று. (கய)

முல்லையின்முதலேபோற்றிமூவரையளிப்பாய்போற்றி
தில்லையினடஞ்செய்வார்முன்றிரோதமாய்மறைப்பாய்போற்றி
தொல்லையின்மறையேபோற்றிதோன்றிநின்றழிந்தவெல்லா
மெல்லையிலமைப்பாய்போற்றியிருசரண்போற்றியென்றார்.

இ-ள். அருந்ததிமுதலிய மாதர்களுடைய கற்புத்தன்மைக்கெல் லாங் காரணமாயிருப்பவளேபோற்றி, திரிமூர்த்திகளையும் அளிப் பவளேபோற்றி, தில்லையில் நடனஞ்செய்யும் பரமசிவனுக்கெதி ரில் திரோதசத்தியாய்மறைக்குந் தாயேபோற்றி, பழமையாகிய வேதசொரூபமா யிருப்பவளேபோற்றி,சிருஷ்டிக்கப்பட்டுந் திதி க்கப்பட்டுமிருந்து அழிந்த உலகங்களையெல்லாம் மறுபடி அந்த ந்தவிடத்தில் அமைக்குந் தாயேபோற்றி, உன்னுடைய இரண்டு திருவடிகளும் போற்றியென்றார்—எ-று. (கக)

மலரவன்முதலோர்க்கெல்லாமிருக்கையும்வழங்கிமங்கை
நலமொழியகர்ந்தாளங்கேநான்முகக்கடவுள்சொல்வா
னுலகெலாம்பயந்தவன்னேயுயர்தவம்புரிவார்க்கெல்லாம்
பலமளித்தருள்வீர்யாரோவுமக்கதன்பலன்களீவார்.

இ-ள். இவ்வாறுதுதிசெய்த பிரமதேவன்முதலாகிய தேவர்களு க்கெல்லாம் ஆசனமுங்கொடுத்தருளிப் பார்வதிதேவியார் உபசார வார்த்தைகளுஞ் சொல்லியவளவிற் பிரமதேவன்சொல்லுகின்றார். உலகங்களையெல்லாம் ஈன்றருளியதாயே மகத்தாகிய தவஞ்செய் கின்றவர்களுக்கெல்லாம் வரமளித்தருள்வாய் நீசெய்ததவத்துக் குப் பலன்கொடுப்பவர்கள்யாரோ—எ-று. (கஉ)

அன்னையுமொழிவாளெம்மையமலனார்காளியென்று
முன்னமேபழித்தலாலேயுயர்தவமுடித்தோமென்று

ஞூன்னருமறையோன்சொல்வானுமக்கிதுவிளையாட்டெங்க
ளின்னலுந்தவிர்ப்பீரானாலிதுவுமோர்விளையாட்டன்றே.

இ-ள். நம்முடையதாயாகிய பார்வதிதேவியார் சொல்லுகின்றார் எம்மைக்காளியென்று பரமசிவம் முன்னேபழித்தலாலே அருமையாகிய இந்தத் தவஞ்செய்தோமென்று சொல்லினர். (அதைக்கேட்ட) நினைத்தற்கரிய வேதப்பொருளுணர்ந்த பிரமதேவன்சொல்லுகின்றான். தாயே உனக்கு இதுவொரு திருவிளையாட்டு எங்களுடையதுன்பத்தையும் நீக்குவீராகில் இதுவுமொரு திருவிளையாட்டாகுமென்ன—எ-று. (௬௩)

இறைவியுமுமக்குநாஞ்செய்கருமமேதியம்புமென்றாண்
மறையவன்மொழிவான்றீயநிருதரொவ்வரத்தினாலே
தறுகணேபுரிவாரந்தக்கொடுமையைத்தவிர்ப்பாயென்றான்
பொறைநிறைகுறைவிலாளுமன்னதுபுரிவேனென்றாள்.

இ-ள். உங்களுக்கு நான்செய்யத்தக்ககாரியம் யாதோவென்று உமையம்மையுஞ்சொல்ல,அதற்குப் பிரமதேவன்சொல்வது தாயே கொடிய தானவர்களென்னுடையவரத்தினாலே பொல்லாங்கேசெய்கின்றார்கள் அந்தக்கொடுமையைநீக்கி யருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான். அதைத் திருவுளத்திற்கொண்டு பொறுமையும் நிறையுங்குறைவில்லாத பார்வதிதேவியார் அவ்வண்ணமே செய்கின்றேமென்று அருளிச்செய்தார்—எ-று. (௬௪)

வெளிபெறற்கரியகோசங்கழிந்துமைவிடுத்தாளப்போ
தொளிதருமுகத்தின்செம்மையொழுகியவழகின்றோற்றங்
களிதருமதுவின்வாரியருந்துவான்கலந்துநின்ற
வளிகுலப்படலநீங்குமம்புயமலரேபோலும்.

இ-ள். இவ்வாறு அவர்களுக்கு அருளிச்செய்தபின் உமையம்மைசெய்த தபோபலத்தைக்கொண்டு வெளிபெறும்படி கரிய கோசத்தைநீக்கிவிட்டு விளக்கமுற்றபோது பிரகாசியாநின்ற திருமுகத்தின் செம்மைநிறமிகுந்த சவுந்தரியத்தில் தோற்றமானது களிப்பினைத்தரும்படியான தேன்வெள்ளத்தையுண்ணச் சேர்ந்திருந்த வண்டினங்களின் கூட்டம்நீங்கிய செந்தாமரைமலர்போன்றது—எ-று.

கோசம்என்பது - சட்டை.—அதாவது திருமேனியினுற்ற கருமைநிறம். அந்தநிறம் நீங்கினபோது உமையம்மையினுடைய திருமுகம் செந்தாமரைமலர்போற் பிரகாசித்ததென்பது கருத்து.

விரியுமைநிறம்போயன்னைதன்கடம்விளங்குந்தோற்றங்
கரியவான்புயலைநீத்தகனகவான்சிகரிபோலுந்
திருவுருவனைத்துஞ்சேரவிளங்குதல்சிறந்தவல்லி
சருகிலையுதிர்த்துச்செய்யதளிருடன்றழைத்தல்போலும்

இ-ள். பரந்த கருமைநிறம்நீங்கிப் பார்வதிதேவியாருடைய திருமேனிவிளங்குங் காக்ஷியானது, வானிற்செல்லுங் கருநிறமேகஞ் சூழ்ந்திருந்து நீங்கிய பொன்மயமான மகமேருவையொத்தது. அன்றியும் திருவுருவெல்லாஞ் செம்மைநிறமாகவிளங்குதல் சிறப்புள்ள ஒருபூங்கொடியானது சருகு - இலையிலைகளையுதிர்த்துவிட்டுச் செந்தளிருடன் தழைத்ததையும் ஒத்தது—எ-று. (கூசு)

வேறு.கழித்தெறிந்திடுங்கோசிகங்கவுசிகைவடிவாய்ச்
சுழித்தெறிந்தசெல்யமுனைபோற்கருநிறந்துலங்கக்
கொழித்தெறிந்தசெங்கொழுஞ்சுடர்க்கனலினைக்குழைத்து
வழித்ததாமெனச்சிவந்தகண்ணமனையுமருட்ட.

இ-ள். உமையவள் கழித்தெறிந்த சட்டையானது கவுசிகையென்னுமொரு சத்திவடிவாய் அலைகளால் சுழித்தெறியப்பட்ட செல்லினையுடைய யமுனைநதிபோலக் கருநிறம்விளங்கவுஞ் சொலித்தெழுகின்ற புகையினையுடைய செந்தீயைக்குழைத்துவழித்துவைத்ததுபோலச் சிவந்தகண்கள் நமனைவெருட்டவும்—எ-று. (கூஎ)

சிகையிலங்கிப்போயிமையவருலகமுந்தீக்கப்
புகையெழுந்திடுமெய்பிற்றினிற்கொடுவிடம்பொழிய
நகையரும்பியமுழக்கினிற்றிசையெலாநடுங்கத்
தொகைபடும்புவித்துகளினுலெழுகடல்சுவற.

இ-ள். அளகத்தினுண்டாகும் தீக்கொழுந்தானது பிரகாசித்துக்கொண்டுபோய்த் தேவருலகங்களையெல்லாந்தீக்கவும், புகையெழுகின்ற பற்களில் கொடியவிஷம்பொழியவும், நகையுண்டாகிய முழக்கத்தினுல் திக்குகளெல்லாம்நடுங்கவும், அவள்பாதத்தினுல் மிதியப்பட்டுப் பூமியிலிருந்தெழுகின்றதுகளினுல் எழுசமுத்திரமும் வற்றவும்—எ-று.

தொகைபடும்புவி - மூன்றுலகத்தி லொன்றென்றுசொல்லுந் தொகையுள்ளபுவியெனப் பொருள்கொள்க. (௬அ)

ஒருகைபற்றியபலகையுமொருகையில்வாளு
மிருகைபற்றியகபாலமுஞ்சூலமுமிலங்கக்
கருமுகத்தொடுமணிமலைவருதல்போற்கவுரி
திருமுகத்தெதிராகவந்திறைஞ்சினள்செறிந்து.

இ-ள். இவ்வாறுதோன்றிய கவுரியானவள் ஒருகையிற்பிடித்த கேடயமும், மற்றொருகையில் வாளாயுதமும், மற்றைய விரண்டு கைகளுக்குள் ஒருகையில் கபாலமும், ஒருகையில் சூலாயுதமும் விளங்கவும், கருமுகத்துடன் நீலமலைவருதல்போலக் கவுரியென் னும் பார்வதிதேவியாருடைய திருமுகத்துக்கெதிராகவந்து பூமி யில்விழுந்து பணிந்தாள்—எ-று. (௬௯)

அன்னையானவள்கோசிகையணங்கினையழைத்துக்
கன்னியேகொடுநிருதர்தங்கரங்களுஞ்சிரமும்
பொன்னிறுட்டவர்துயருடன்களைகெனப்புகன்றாள்
சொன்னவாறெலாம்புரிகுவேனெனச்சொலித்தொழுதாள்.

இ-ள். நம்முடையதாயாகியஉமையம்மை கௌசிகையென்னுங் காளியையழைத்து, மாதே, சும்பன் - நிசும்பன்முதலாகிய கொடி ய நிருதர்களுடன்போர்செய்து அவர்களுடைய கைகளும் - சிரங் களும் அறுபடக்கொன்று, தேவர்களுடைய துயரத்தை நீக்கிவி டக்கடவையென்று கட்டளையிட, அக்காளியானவள் தாயே நீ சொ ன்னபடியெல்லாஞ் செய்கிறேனென்று தொழுது சொல்லினள்.

அற்றநீங்கியமுனிவருந்தேவருமயனும்
பெற்றபேறுடன்பணிந்துதம்பதிகளிற்பெயர்ந்தா
ருற்றகோசிகிதனதுவெவ்வுருவினையொழித்துக்
கற்றைவார்குழன்மடந்தையாயவ்விடைகடந்தாள்.

இ-ள். காமம் - வெகுளி - மயக்கமென்னு முக்குற்றம்நீங்கிய முனிவர்களும் - தேவர்களும் - பிரமதேவனும் - பார்வதிதேவியா ரைப்பணிந்து பேறுபெற்றுக்கொண்டவர்களாய் தங்கள்தங்கள் பதவிகளிற்போய்ச்சேர்ந்தார்கள். அங்குப்பொருந்திய கோசிகை யானவள் தன்னுடைய கோரஉருவத்தையொழித்துக் கற்றையாட்

நீண்டிருக்கும்அளகத்தையுடைய ஒருமடந்தைப்பருவமுள்ள கன்னியுருவமுடையவளாகி அவ்விடம்விட்டு நீங்கினாள்—எ-று. (௧௦௧)

வேறு. இகன்மீதிலிருவோர்தமுயிர்வாரநினைவாகியிமவானிலே
சககாரநிழன்மீது நவகோடிமணியூசறனின்மேவியே
மகமேருநிகரானதனபாரமிசையாரவடமாடவே
மிகையானமுகையானநகையாடவளையாடவிளையாடுமே.

இ-ள். உமையவளிடத்தில் விடைபெற்றுக்கொண்டுசென்ற கன்னியானவள் போர்முகத்தில் அவ்விருவருடைய உயிரையும்வாங்க நினைவாகி இமயமலைச்சாரலில் மாமரநிழலில் நவகோடிமணிகள் பதித்துள்ள ஊசலிடத்திற் பொருந்தி மகமேருவையொத்த தனபாரத்தின்மேல் முத்துவடம் அசையவும், வெளிப்படுவதான முல்லையரும்பினையொத்த புன்னகைவிளங்கவும், கைவளையல்களாடவும் விளையாடுவள்—எ-று. (௧௦௨)

ஒருகாலைமயில்போலநடமாடிவிளையாடுமொருபோதிலே
மிருகாதிபதியாதிபலநூறியமராடிவிளையாடுமே
சருகானவனராசிமுகையோடுமலரோடுதளிராகவே
யிருகாதுமமுதூறமலையேழுமலையாகவிசைபாடுமே.

இ-ள். ஒருகாலத்தில் மயிலைப்போல நடமாடி விளையாடுவள், ஒருகாலத்தில் சிங்கமுதலிய பலமிருகங்களுடன் போராடிக் கொன்று விளையாடுவள், சருகாகஉலர்ந்திருக்கும் வனங்களெல்லாம் அரும்புகளுடனும் - மலர்களுடனும்- தளிர்களுடனுமாயிருக்கவும், கேட்பவர்களுடைய இரண்டுகாதிலும் அமுதமூறவும், ஏழுமலைகளும் அலைநீர்போல உருகவும் இசைபாடுவள்—எ-று. (௧௦௩)

அப்போதுதனிமுண்டனொடுசண்டனிருவோரு
மவணெய்தியு
ரிப்பேதையெவளிந்தவெழில்கண்டதிலையென்கொ
லெனநாடியு
ரொப்போதவரியாடனிலைதங்கணிருதேச
ரொடுகூறினர்
மைப்போதமுடையோருமதனம்பினுயிர்வெம்பி.
வலிமாறினர்.

இ-ள். கவுசிகியம்மை இவ்வாறிருக்கும்போது ஒப்பில்லாத முண்டன் - சண்டனென்னும் அசுரர்களிருவரும் அங்குவந்து சேர்ந்து இந்தமாதுயாவளோ, இப்படிக்கொத்த அழகினை நாமிதுவரையிற்பார்த்ததில்லை, இப்படிக்கொத்த அழகுள்ளவ ளிங்கேவந்திருப்பதற்குக் காரணம்யாதோவென் றாலோசித்து ஒப்புசொல்லுதற்கரிய அந்த கவுசிகியினுடைய அழகைத் தங்கள் அரசர்களாகிய சும்பன் - நிசும்பனிடத்திற்போய்ச்சொன்னார்கள். அதைக்கேட்ட இருளினிறமான அஞ்ஞானத்தையுடைய அவர்களிருவரும் மன்மதன்பாணத்தினாலுயிர்வருந்திவலியிழந்தார்கள்—எ-று.(௧௦௪)

வேறு.சுக்கிரீவனுமொருவனைவிடுத்தனர் தூதா
யக்குரோதனுமவட்கவருரைத்தவாறறைந்தான்
றக்ககாரியம்புகன்றனையெனினுமென்றனக்கே
யிக்குவேண்முதல்யாவரும்புதல்வர்காணென்றாள்.

இ-ள். அவ்வாறு வலியிழந்தவர்கள் சுக்கிரீவனென்னும் ஒருஅசுரனைத் தூதாயனுப்பினார்கள். அந்தக் குரோதநெஞ்சமுள்ளவன் கோசிகையென்னுஞ் சத்தியைக்கண்டு அவர்கள்சொல்லியவார்த்தையைச்சொல்லினன். அதைக்கேட்ட சத்தியானவள் அவனைநோக்கி நீதகுதியுள்ளவார்த்தையேசொல்லினை ஆயினும் எனக்குக் கரும்புவில்லேந்திய மன்மதன்முதலான யாவரும் புத்திரர்களென்று சொல்லினள்—எ-று. (௧௦௫)

இன்னமோர்மொழிதமக்குநானமர்க்குளேயிடைந்தாற்
சொன்னவாறெலாமெளிதெனவகற்றினடுதை
யன்னைகூறியவனைத்தையுமவனவர்க்கறைந்தான்
முன்னமாகியதமையனுநிசும்பனுமொழிவார்.

இ-ள். இன்னமொருவார்த்தை யிருக்கின்றது. அதாவது அவர்களுக்கு நான் போர்முனையில்தோற்பேனாகில் நீசொல்லியமுறைமையெல்லாம் எளிதாகுமென்றுசொல்லித் தூதனையனுப்பிவிட்டாள். அதைக்கேட்ட தூதன்சென்று நம்முடைய தாய்சொல்லியவற்றையெல்லாம் அவ்வசுரர்களுக்குச் சொன்னான். அதைக்கேட்ட முன்னவனான தமையனும், நிசும்பனுஞ் சொல்லுகின்றார்கள்—எ-று.
(௧௦௬)

வண்டுவார்குழன்மடந்தையைப்புகைக்கணன்வலியிற்
கொண்டுவாவெனவிளம்பிடப்புகைக்கணன்குறுகி
யெண்டிசாமுகங்கனலெழவமர்செய்தானெதிர்சென்
றண்டர்நாயகியொருமொழிக்கொடுமையாலழித்தாள்.

இ-ள். புகைக்கண்ணனென்னும் ஒரு அசுரனையழைப்பித்து அடாபுகைக்கண்ணனே, நீபோய் வண்டுகள்வாழும் அளகத்தையுடைய அந்தக்கோசிகையை பிடித்திழுத்துக்கொண்டு வாவென்றுசொல்ல, அவன் தன்சேனையுடன்போய் அஷ்டதிக்குகளிலும் புகையெழும்பும்படி போர்செய்தான். அதைநோக்கித் தேவர்களுக்கெல்லாமிறைவியாகிய கோசிகையம்மையானவள் ஒரு சாபவார்த்தையால் அவனையழித்தாள்—எ-று. (௧௦௭)

சண்டமுண்டனைவிடுத்தனரவர்களைத்தடுக்க
விண்டகூர்விழித்தோன்றியகாளியைவிடுத்தாள்
கண்டதுண்டமாயவர்விழவெறிந்தனள்காளி
யண்டரானவர்களித்திடவுதிரவாறுக.

இ-ள். அதன்பின்பு சண்டனென்பவனையும் முண்டனென்பவனையும் அனுப்பினார்கள். அவர்கள்வந்ததைக்கண்டு கோசிகையம்மையானவள் அவர்களைத்தடுப்பதற்குக் கூர்மையுள்ள தன்கோபதிருஷ்டியிலுண்டான காளியையனுப்பினாள். அந்தக்காளி போர்செய்து அவர்கள் கண்டதுண்டங்களாய் விழவும், உதிரப்பிரவாகம்பெருகவுங் கொன்றாள். அதைக்கண்டு தேவர்கள் களிப்படைந்தார்கள்—எ-று. (௧௦௮)

நிரைத்தசண்டனுமுண்டனுமிறந்தபின்னிருத
ரிரத்தபீசனைவிடுத்தனரவனெழுந்திமையோ
ரொருத்தரின்றியேபிலம்புகப்படமுரசொலித்து
மருத்துவேகமாம்வாம்பரித்தேரின்மேல்வந்தான்.

இ-ள். இவ்வாறுசேர்ந்துவந்து போர்செய்து சண்டனும்-முண்டனுமிறந்தபின், சும்பன்-நிசும்பனென்னும் அசுரர்கள் இரத்தபீசனென்னும் ஒருஅசுரனையனுப்பினார்கள். அவன் சேனையுடன்புறப்பட்டுத் தேவர்களி லொருவருமில்லாமல் யாவரும்பயந்து பிலத்திற்போயொளித்துக்கொள்ளும்படி பேரிகைமுழங்கத்தக்கதாக

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

வாயுவேகம்போலத் தாவிச்செல்லுகின்ற குதிரைபூட்டிய தேரிலேறிக்கொண்டுவந்தான்—எ-று. (௧௦௯)

திக்குப்பாலகர்வயிறெலாமெரியெழச்சிரித்தான்
சக்கராயுதனுலகமும்பொடிபடச்சரித்தான்
பக்கமேவருந்தானையைப்பரப்பியார்ப்பரித்தான்
கைக்கபாலிதன்படையெலாம்பொருதுசங்கரித்தான்.

இ-ள். அந்தரத்தபீசன் திக்குப்பாலகருடைய வயிறெல்லாமெரியும்படி நகைத்தும் அவ்வாறுநகைத்து மகாவிஷ்ணுவினுடைய உலகமும் பொடிபட அங்கேபோய்ச்சரித்தும் தன்னைச்சூழ்ந்துவருஞ் சேனையைப்பரப்பி ஆரவாரித்தான். அவ்வாறுஆரவாரித்துப் போர்செய்து காளிவிடும் பாணங்களையெல்லாம்அழித்தான்.எ-று.

இரத்தபீசனதிரத்தமோர்துளிவிழுமிடத்தே
யொருத்தன்மேவுவனவன்வரப்பரம்பரையுதிரம்
பெருத்துவீழ்தலாலவுணருமிகுதியாய்ப்பிறந்தார்
கருத்துவேகமாம்பரியின்மேலமர்செய்தார்கலந்து.

இ-ள். அந்த ரத்தபீசனுடைய உடலிரத்த மொவ்வொருதுளி பூமியில்விழுமிடத்தில் ஒரு அசுரனுண்டாகுவன், அவனுடலுதிரம் ஒருதுளிவிழுந்தால் அதிலிருந்து ஒருஅசுரனுண்டாவன், அவனுடலுதிரத்திலிருந்து ஒருவன்வருவன், இவ்வாறு உதிரம்பெருத்துவீழ்தலால் அசுரர்களுமிகுதியாயுண்டாகி மனவேகமுள்ளகுதிரையின்மேலேறிக்கொண்டுவந்து போர்செய்தார்கள்—எ-று.

ரத்தபீசனுடலிலிருந்து சிந்துகிற ஒருதுளி உதிரம் ஒருஅசுரனாகும்போது எவ்வளவுதுளிசிந்துமோ அவ்வளவு அசுரர்களாவதுமன்றி,அந்தத்துளியிலுண்டாகும் அசுரர்களுதிரத்துளியில் அவ்வளவுஅசுரர்களுண்டாவதுமாயிருத்தலால் அந்தச்சேனைக்களவில்லை.

இரத்தவண்டர்கணெருங்கினருடுக்கணமென்னப்
பரித்தவாளிமேற்கவுசிகிகணங்களும்பலவாய்த்
தரித்தவாளியுஞ்சூலமும்விடுத்தெதிர்தடுத்தார்
நிரைத்தகூளியுங்கணங்களுமாடினநிருத்தம்.

இ-ள். உதிரத்துளிகளிலுண்டாகிய ரத்தபீசர்களென்னும் அசுரர்கள் நக்ஷத்திரக்கூட்ட போலக்கூடிநெருங்கினார்கள். அவர்களைக்

கண்ட கோசிகையினுடைய படைக்கணங்களும் சிங்கங்களின்மே லேறிக்கொண்டுவந்து தாங்கள்வைத்துக்கொண்டிருக்கும் பாணங் களையும் - சூலாயுதங்களையும்விட்டு அசுரர்களைத்தடுத்துப் போர் செய்தார்கள். அந்தப்போர்க்களத்தில் ரத்தமாமிசங்களைப் புசிக்க வந்த பூதக்கூட்டமும் பேய்க்கூட்டமுங்கூத்தாடின—எ-று.(கக௨)

ஆழிவாளிகொண்டாளிமேற்காளிவந்தணுகி
யூழிமாரிபோற்கணைமழைபொழிந்துவாதொழிந்தாள்
பாழிநான்முகன்முதலியகடவுளர்பரிவா
லேழுமாதராய்ப்பொருதனருதிரமேலிடவே.

இ-ள். சக்கராயுதமும் - பாணங்களுமேந்திக்கொண்டு காளியா னவள் சிங்கவாகனத்தின்மேலேறிவந்து ஊழிக்காலமழைபோலப் பாணங்களைப்பொழிந்து போர்செய்தாள். அப்போது அசுரர்க ளதிகரித்து அவள்விட்டபாணங்களை அழித்துப் போர்செய்யவே கைசலித்து இளைத்துப் போர்செய்வதைவிட்டிருந்தாள். அதைக் கண்ட பலமுள்ள பிரமதேவன்முதலாகிய தேவர்கள் அவளுக்குச் சகாயமாக பரிவினால் சத்தமாதர்களாய்வந்து அசுரர்களுடனெதிர்த் து உதிரப்பிரவாகம்பெருகும்படி போர்செய்தார்கள்—எ-று.

சத்தமாதர்கள்—அபிராமி - கௌமாரி - மாகேசுவரி - நாராய ணி - வராகி - இந்திராணி - காளி - என்னுமெழுவருமாம். (கக௩)

வேறு. அயிராணிபலகோடிபடையோடுபகைவீரரறநூறினாண்
மயிலேறுகவுமாரிபொருதோகையொடுவாகைமலர்சூடினாள்
செயிராருவணமேறியெழுதானவருயாவிசிறைவாரினாள்
வெயில்வீசுமழுவாளிதிரிசூலமாகாளிவிழவீசினார்.

இ-ள். அந்தச் சத்தமாதர்களுக்குள் இந்திராணியென்பவள் பல கோடிபடையுடன்வந்து போர்செய்து அனேகம் ரத்தபீசர்களி றக்கும்படி அழித்தாள். மயில்வாகனத்திலேறும் கவுமாரியென்ப வள் ஒருபுறத்தில்போர்செய்து அநந்தம் ரத்தபீசர்களைக்கொன்று சந்தோஷித்துடன் வெற்றிமாலைசூடினாள். கோபம்பொருந்திய கருடன்மேலேறும் நாராயணியென்பவள் எதிர்த்துவந்த மிகுந்த ரத்தபீசர்களுடைய உயிரைச் சிறைவாரினாள். ஒளிவீசுகின்ற மழு வாதியேந்தியிருப்பவளாகிய மாகேசுவரியும், திரிசூலமேந்திய

மாகாளியும் ஒருபுறத்தில் அசுரர்கள்வீழும்படி ஆயுதங்களையே
விப் போர்செய்தார்கள்—எ-று. (ககச)

நிருதாதிபதி நால்வர்மதமாவிரதம்வாசிநெடிதேறியே
பொருதார்களுமைதானைமலையேறவுலகேழுபொடியாகவே
பெருந்தானைமுதலானதினிதேறுமெழுமாதரொதிரேறினார்
கருதார்கடலையேழுமலையாகநிணமேழுகடலாகவே.

இ-ள். (இவ்வாறு சத்தமாதர்களால் தங்கள்சேனை சின்னபின்னப்படுவதைநோக்கி) நான்கு அசுரர்கள் யானையின்மேலும், தேரின்மேலும், குதிரையின்மேலும் ஏறிக்கொண்டு கௌசிகையம்மையினுடையசேனைகள் முறிபட்டோடி மலைகளிலேறிக்கொள்ளவும், ஏழுலகமும் பொடியாகவும் போர்செய்தார்கள். அதைக்கண்டு ரிஷபம் - ஆனைமுதலான வாகனங்களில் இனிதாக ஏறுகின்ற சத்தமாதர்களும் அவர்களுக்கெதிரிட்டுப் பகைவருடைய தலைகள் சத்தகுலபர்வதங்கள்போலக் குவியவும், நிணம் ஏழுகடல்போலாகவும் போர்புரிந்தார்கள். (அதைக்கண்டு)—எ று. (ககரு)

வேறு. ஒருத்தர்போலவேமலைநிலங்கடல்கள்வானுலக
மிரத்தவண்டருநெருங்கியேயமர்செய்தாரிகலிற்
றரித்தவாளிமேற்காளியுமிடைந்தனள்சமர்க்குண்
மருத்துவேகமாய்த்தானையோடெழுவருமறைந்தார்.

இ-ள். அந்த ரத்தபீசர்கள் ஒருத்தர்போலவே மலைகள் - பூமி-சமுத்திரம்-ஆகாயமென்னு மிவ்விடமெங்கும்நிறைந்து போர்செய்தார்கள். சிங்கத்தின்மேலிருந்து போர்செய்கின்ற காளி இவர்களைக்கண்டு பின்னிட்டாள். சத்தமாதர்களோவென்றால் அவர்களும்பயந்து தங்கள்சேனைகளுடனோடி மறைந்துவிட்டார்கள்—எ-று

அன்னைகூறுவாளரியசாமுண்டியையழைத்துப்
பன்னுமேழ்கடலிடத்திலுன்னாவினைப்பரப்பித்
துன்னலாருடற்குருதிநீர்பருகெனச்சொன்னாள்
பொன்னுநாவினைப்படுத்தவையருந்தினாள்போரில்.

இ-ள். கௌசிகையம்மையானவள் சாமுண்டியையழைத்துச் சொல்லுகின்றாள். (இந்த அசுரர்களுடைய உதிரத்துளி பூமியில் விழுந்தால் அந்த ஒருதுளியும் ஒரு அசுரனாக உண்டாதலால்

அசுரர்கள் மேலுமேலும் விர்த்தியாகின்றார்கள் ஆதலால்) உன்னுடையநாவினை எழுசமுத்திரஞ்சூழ்ந்த உலகமெங்கும்பரப்பி இந்தப்பகைவருடைய உதிரம் ஒருதுளியாவது பூமியில்சிந்தாதபடிக்கு உண்ணென்றுசொன்னார். சாமுண்டியானவள் அவ்வாறே தன்னுடைய அழகுள்ள நாவைநீட்டி அசுரருதிரத்தையெல்லாம் பானஞ்செய்தாள்—எ-று. (கக௭)

எண்டிசைக்கணுஞ்சத்திகள்சரிதருமெல்லை
சண்டிகைக்கொடிகவுசிகியுரத்திலேசனித்தாள்
கண்டிளைத்திலாவவுணரும்பொருதனர்காளி
முண்டிகைக்கொடியிருவரும்பொருதமர்முடித்தார்.

இ-ள். அஷ்டதிக்குகளிலும் சத்தமாதர்களுந் தோற்றோடினபோது கவுசிகிமார்பிலேநின்றும் உமையவளுடைய கிருபையினால் சண்டிகையெல்பவர் தோன்றினள். அவளைக்கண்டு இளைத்திடாத அசுரர்களும் போர்செய்தார்கள். அதைக்கண்டு காளி-முண்டிகையென்னு மிவ்விருவரும் போர்செய்து அசுரர்போரினை முடித்தார்கள்—எ-று. (கக௮)

ஒற்றையாழியான்மறைந்திடக்கிரணங்களொடுங்கி
யிற்றவாறெனவிரத்தனேடவுணருமிறந்தார்
சுற்றும்வானவரார்த்தனர்மலர்மழைசொரிந்தா
ரற்றதம்படைநிலைமைகண்டிருவருமடுத்தார்.

இ-ள் ஒருவண்டில்பூண்ட தேரினையுடைய சூரியன்மறைந்தவுடன் கிரணங்க ளொடுங்கிப்போவதுபோல ரத்தபீசனென்னும் அவுணனுடன் மற்ற அசுரர்களுமடிந்தார்கள். அந்தரத்தில்சூழ்ந்திருக்குந் தேவர்கள்கண்டு ஆரவாரித்துப் பூமாரிபொழிந்தார்கள். இவ்வண்ணம் ஒழிந்துபோன தங்கள்சேனையி னிலைமையைக்கண்டு சும்பனும் - நிசும்பனும் போர்செய்ய யுத்தகளத்தில்அடுத்தார்கள்.

நிருதரெண்ணிலர்கரிகளுமெண்ணிலநெருங்கு
மிரதமெண்ணிலவாம்பரியெண்ணிலவிகலிற்
பரிதிகோடிபோற்படைக்கலங்கொடுகனற்பரப்பிப்
பொருதுதோன்றினர்சண்டிகைக்கொடியெதிர்பொருதாள்.

இ-ள், அளவில்லாத அவுணர்களும், அளவில்லாத யானைகளும், நெருங்குந் தேர்களும், தாவுகின்ற குதிரைகளும், அளவில்லாதவை

கொண்டு போர்முனையில் அநந்தங்கோடி சூரியர்கள்போல ஆயுதங்களையேந்திக்கொண்டு அக்கினிப்பொறிகளைப்பரப்பிப் போர் செய்து தோன்றினர்கள். அதைக்கண்ட சண்டிகையென்பவள் அவர்களுக்கெதிரில்சென்று பொருதாள்—எ-று. (௧௨௦)

வேறு. காலவயிரவியாளிமுகமயில்காளிகவுசிகிமார்பிலே
சூலமுடன்வருநீலிநாரவிதூசிபொரவெழுபோரிலே
கோலவிடநிகர்மாதரொருநவகோடியவர்தரவீரவாள்
ஞாலமிசையொளிவீசுபொழுதநாகருலகெனலானதே.

இ-ள். காலவயிரவியும் - யாளிமுகியும் - காளியும் - முன்னங் கவுசிகிமார்பிலேதோன்றிய காளியும் - நாரசிங்கியும்-தூசிப்படையில்நின்று பொரவெழுந்த யுத்தமுகத்தில் விஷத்தையொத்த நவகோடிசத்திகளை அவர்களுண்டாக்க, அந்தச்சத்திகள் கையிற்பிடித்திருக்கும் வீரவாளானது ஒளியைவீசும்போது அந்தயுத்தகளமானது தேவருலகமென்னும்படி பிரகாசித்தது—எ-று. (௧௨௧)

வேலையொலிநிகர்காளமணிகுழல்
வீரமுரசொலிமேகநேர்
போதுமுழவொலிபேரியொலிதிசை
போகவெதிர்பொருபோதிலே
சூலதரிமுதலானதெரிவையர்
தூசிபொரவெழுதூளிவான்
மேலவுணர்செலாததடைசெய
வேணுமெனவெழல்போலுமே.

இ-ள். கடலோசைபோல ஒலிக்கும் எக்காளஓசை - கைம்மணியோசை - வேய்ங்குழலோசை - ரணபேரிகையோசை - ஒலிக்கும் மேகத்தையொத்த குடமுழாவினோசை - மற்றுமுள்ள வாத்தியங்களினோசை இவைகளெல்லாம் அஷ்டதிசையிலும்பரவவும் எதிரிலே யுத்தஞ்செய்யும்போது, காளிமுதலானசத்திகள் தூசிப்படையில் போர்செய்தலால் எழுகின்றதூளியானது அவுணர்கள் ஆகாயத்தின்மேலோடிப் போகாதவண்ணந் தடைசெய்வதுபோலெழுகின்றது—எ-று. (௧௨௨)

வேறு. மடலாளிமலராளிவளையாளியடியா
ருடலாளியுயிராளியுயர்காளிபரியா
மடலாளிபகையாளியரவாளிசொரியு
மிடலாளிரதம்வாசிவிழுவேகமிகுமே.

இ-ள். இதழ்களையுடைய தாமரைமலரில் வாசமாயிருக்கும் நாராயணியும், கயிலையில்வாசமாயிருக்கும் ருத்திரியும், அடியார்களுடைய உடல்களைக்காப்பவளும் உயிர்களைக்காப்பவளுமாகிய மேன்மைபொருந்திய மகாகாளியும், அவள்வாகனமாகிய சிங்கமும், சர்ப்பம்போன்ற பாணங்களையேவுகின்ற பகைவீரர்களும் - தேர்களும் - குதிரைகளும் - இறந்துவிழும்படி யுத்தமுகத்தில் வேகத்துடன் உலவுவார்கள்—எ-று. (கஉங)

வேறு. வாளிசாபநேமிசூலமாலையேவும்வீரர்நீள்
தோளின்மீதுமார்பின்மீதுசூடமீதுகாகமார்
ஞாளிபேய்கள்சேனமேறநாலுபாலுமேவுமே
காளகூடநேரதானகாளியேறுமாளியே.

இ-ள். விஷத்தையொத்த மகாகாளி யேறிக்கொண்டிருக்கிற வாகனமாகிய சிங்கமானது வில்லில் சந்தானஞ்செய்யும் பாணங்கள்-சக்கரங்கள்-சூலங்கள் - என்னுமிவைகளை வரிசைவரிசையாக ஏவுகின்ற அசுரப்படைவீரர்களுடைய நீண்டபுசங்களின்மேலும், மார்பின்மேலும், மகுடத்தின்மேலும், காகங்களும் - நாய்களும்- பேய்களும் - பருந்துகளும்-ஏறும்படி நான்குபுறத்திலுந் தாவும்.

கோடிகோடிகாலகேயர்கூறுதேரிலேறிமே
லோடியோடிமார்பிலேறியூறதாகநூறுமே
நாடிநாடிவேகமோடுஞாலமீதுலாவுமே
சூடிவாகையோகைவீறுதோளிலேறுமாளியே.

இ-ள். அந்தச் சிங்கமானது அநந்தங்கோடி காலகேயர்களேறியதேரிலேறி, அவர்கள்மேலோடியோடி, மார்பிலுமேறி, ஊறுபடும்படிகொல்லும். இன்னும் அசுரர்களெங்கிருக்கின்றார்களென்று பூமியெங்குந்தேடி வேகமுடன் உலாவும், வெற்றிமாலையணிந்து சந்தோஷமிகுந்திருக்கும், அவர்களுடைய புசங்களின்மேலும் ஏறும்—எ-று. (கஉ௫)

வேறு. எட்டுவகைகளையெட்டுவகைகளை
யெற்றுமியல்பெனவெற்றுமே
முட்டுமிரவியையெற்றுமமரிடை
முற்றுபரிகளையெற்றுமே
கொட்டுமுழவொடுகிட்டுமவருடல்
குத்துமுடிமிசைதத்துமே
தட்டுமவுணரைவெட்டிநிலவெழு
சங்கமுடையவள்சிங்கமே.

இ-ள். அஷ்டகுலபர்வதங்களையும் எள்ளையுந் துவரையினையுங் கொறிக்குந்தன்மைபோல பற்களால்கடித்தெறியும், சூரியமண்டலத்தை முட்டியெற்றும், போரிலேவந்த குதிரைகளைக்கொல்லும், பேரிகை கொட்டிக்கொண்டு வருகின்றவர்களுடைய உடல்களைக்குத்தும், அவர்கள் தலைகளின்மேல்தத்துமே தோள்களைத் தட்டிக்கொண்டுவருகின்ற அசுரர்களை வெட்டும், நிலவை வீசுகின்ற தவளச்சங்கமுடைய மகாகாளியினுடைய சிங்கமானது—எ-று. (௬௰௬)

கற்பமுடிவெனநிற்கவிமையவர்
கற்பதருவைமுறிக்குமே
சர்ப்பமுடியிலெடுக்குதரணி
சலிக்கவொருபதம்வைக்குமே
யெற்புமலையைநிணத்தினளறிடை
யிட்டுமுனையிலிறைக்குமே
யற்புநிறைபவள்கற்புநிறைபவ
ளங்கமிசைவிடுசிங்கமே.

இ-ள். அன்புநிறைந்தவளும் - கற்புநிறைந்தவளுமாகிய கவுசிகி அந்தப்போர்க்களத்தில் விடுகின்ற சிங்கமானது இது கற்பகால மென்னும்படிநிற்கத் தேவர்களுடைய கற்பகவிருக்ஷங்களைமுறிக்கும் ஆதிசேஷன்முடியில் தாங்கிக்கொண்டிருக்கிற பூமியானது சலிக்கும்படி ஒருகாலைப் பெயர்த்துவைக்கும் எலும்புகளையெல்லாம் போர்க்களத்தில் நிறைந்திருக்கிற நிணச்சேற்றிலிட்டு வால் முனையாலிறைக்கும்—எ-று. (௬௰௭)

எறுபரிகளுடாளுமிரதமு
மியானைநிரைகளும்வீழவே
நூறுமுடிமிசையேறுநடமொடு
நூறுநமனெனநோவவே
கீறுமுகிர்கொடுபீறுமுடலுயிர்
கேதமுறுபவர்சோரிநீ
ராறுபுகும்விளையாடுமழவிடை
யாளிவரவிடுமாளியே.

இ-ள். இளமையாகிய ரிஷபவாகனமுள்ள உருத்திரனையென்னுங் காளியானவள் எவுகின்றயாளியானது எறும்படியானகுதிரைகளும் - வீரர்களும் - தேர்களும் - யானைக்கூட்டமும் விழும்படி கொல்லும், கூத்தாடிக்கொண்டு அவர்கள் தலைகளின்மேலேறி நமனைப்போலக் கொல்லும், அவர்கள்வருந்தும்படி கீறத்தக்க நகங்களினால் உடலையும்-உயிரையும் பீறிவிடும், இங்குள்ள அசுரர்களுடைய உதிரப்பிரவாகத்தில் மூழ்கிவிளையாடும்.—எ-று. (௧௨௮)

முடக்குமிருதொடைகிடக்குநிலமிசை
முகத்தையுகிர்கொடுமுறுக்கிவால்
கடிக்குமுளைமயிர்பொடிக்குநெடுவரை
கடக்குமொலியொடுகனைக்கும்வாய்
துடிக்குமுதுகினைநெளிக்கும்வயிறிடை
சுருக்குமிருசெவிநெருக்குமே
நடக்குமெரியெழவிழிக்குமுடலினை
நடுக்கும்விழுமெழுநண்ணுமே.

இ-ள். மேலும் அந்தச்சிங்கமானது தொடைகளை முடக்கிக்கொண்டு பூமியில் சற்றுநேரம் விழுந்துகிடக்கும், பின்னுமெழுந்து முகத்தை நகங்களினால்தேய்த்து வாலால்முறுக்கிப் பற்களால்கடிக்கும், சந்தோஷத்தினால் கழுத்துமயிர்பொடிக்கப் புளகமடையும், மகமேருமுதலிய பெரியமலைகளைக்கடக்கும், ஆரவாரித்தலுடனே கெற்சிக்கும், வாய்துடிக்கும், முதுகினை நெளிக்கும், மத்தியில் வயிற்றைச்சுருக்கும், இரண்டுகாதுகளையும் நெருக்கும், நடக்கும், தீயெழக் கண்களை உக்கிரமாகவிழிக்கும், உடலைநடுக்கும், விழும், எழும், இவ்வாறு அந்தயுத்தகளத்திலிருக்கும்—எ-று.

வேறு. அற்றனர்சிரங்கள்சிலரற்றனர்கரங்கா
விற்றனர்கண்மார்புசிலரிற்றனர்கடிண்டோள்
புற்றனைவிரும்பினவர்புற்றினையடைந்தார்
பெற்றனர்களாவியுடல்பெற்றவருமானார்.

இ-ள். இந்த யாளியினால் சில அசுரர்கள் தலையறுபட்டார்கள், சிலர் கைகால்கள் அறுபட்டார்கள், சிலர் மார்பு அறுபட்டார்கள், சிலர் பலம்பொருந்திய தோள்களறுபட்டார்கள், இப்படிவிளைந்ததினால் உயிருடனிருப்பவர்கள் பயந்து புல்லை வாயிற்கடித்துக் கொண்டவர்களும், புற்றுக்களின்மே லேறிக்கொண்டவர்களும், உயிரையும்பெற்றார்கள். பழுதுபடாத உடலையும்பெற்றார்கள்.—போரில்தோற்றவன் புல்லை வாயிற்கடித்துக்கொண்டாலும், புற்றிலேறிக்கொண்டாலுங் கொல்லுகிறதில்லை. (௧௫0)

அஞ்சுமுகிநாலுமுகியாறுமுகிமாறு
மஞ்சுமுகிநேமொனும்வராகமுகிவானாள்
செஞ்சுமுகிகார்முகிசிலீமுகியராகி
விஞ்சுமுகிறொலிவிளைத்தமர்விளைத்தார்.

இ-ள். அஞ்சுமுகமுள்ள மகேசுவரியும், நான்குமுகமுள்ள அபிராமியும், ஆறுமுகமுள்ள கௌமாரியும், மாறுத மேகம்போன்றமுகமுள்ள நாராயணியும், பன்றிமுகமுள்ள வராகியும், இந்திராணியும், வில்லுகளுடையவர்களும், பாணமுடையவர்களுமாய் மிகுந்த மேகத்தினொலிபோல குணத்தொனிசெய்து போர்செய்தார்கள்—எ-று. (௧௫௧)

தானவர்களானவர்கள்தானவர்கள்வாளால்
வானவர்கள்காணவுடல்மண்மிசைவிடுத்தார்
கானவரையாழிமிசைகால்விசையினாலே
போனவர்களாருயிர்புரந்தவர்களானார்.

இ-ள். தானவர்களாயிருப்பவர்கள் ரணபீதியால் தங்களினமாகிய தானவர்களுடைய வாளாயுதங்களால் தேவர்கள்காணும்படித் தங்களுடல்களை மண்ணின்மேல்விட்டார்கள். வனமுள்ள மலைகளினிடத்தும் சமுத்திரத்தினிடத்தும் வாயுவேகமாயோடி யொளித்தவர்கள் தங்களுடைய பெறுதற்கரிய உயிர்களைக் காப்பாற்றினவர்களானார்கள்—எ-று. (௧௫௨)

தங்கணிழல்கண்டுசிலர்சத்திபடையென்றே
பங்கமுடனஞ்சினர்படைக்கலமெறிந்தா
ரங்கவைகடந்துசிலராயுதமெடுக்குந்
துங்கமிலையென்றுபுரிகுளுறவுபோலும்.

இ-ள். போரில்பயந்து திகைத்துஓடுகிற சிலஅசுரர்கள் தங்கள் நிழலைக்கண்டு இது சண்டிகையினுடைய சேனையென்றெண்ணிப் பங்கத்துடன் பயங்கொண்டு தங்கள்கையிலிருக்கும் ஆயுதங்களை யெறிந்துவிட்டார்கள். கையிலிருக்கும் ஆயுதங்களைப் போட்டுவிட்டு இனி ஆயுதமெடுக்கத்தக்கபலம் எங்களுக்கில்லையென்று ஆணையிட்டுக்கொள்ளுதலை யொப்பாயிருந்தது—எ-று. (கங௩)

வேறு. நிருதர்யாவருமிறந்தனரிறந்தனனிசும்பன்
பொருதசண்டிகைக்கெதிரவன்றமையனும்போரி
லிருவராகநாம்பொருதுவோம்வருதியோவென்றான்
மருவுசண்டிகையவனெதிர்நடந்தனண்மகிழ்வால்.

இ-ள். அசுரர்களெல்லாருமிறந்தார்கள். அதுவுமன்றி நிசும்பனென்பவனுமிறந்தான். இவ்வாறிவர்களுடன் போர்செய்தழித்த சண்டிகையென்னுங் காளிக்கெதிர் அவன்தமையனாகிய சும்பனென்பவன்வந்து காளியைநோக்கி நாமிருவருமாகத் தனித்துப்போர் செய்யலாம் நீவருவையோவென்றான். நிசும்பனுடன் போர்செய்து செயம்பெற்றிருந்த சண்டிகையென்பவள் மகிழ்ச்சியுடன் அவனெதிரில்நடந்தாள்—எ-று. (கஙச)

எழுமாதருங்கன்னியுங்காளியுமிவரைச்
சூழுமாதருமுண்டியும்பிறவுமோர்தொகையா
யாழிநாயகிமுலைக்குளேபுகுந்தனரன்பா
லூழிகாலையினுலகெலாம்புகுந்தனவொக்கும்.

இ-ள். இவ்வாறு சண்டிகையுஞ்-சும்பனும் போர்செய்வதைக்கண்டுபயந்து சத்தமாதர்களும் - துர்க்கியும் - காளியும்-இவர்களைச் சூழ்ந்த மற்றமாதர்களும் முண்டியென்பவளும் மற்றச்சேனைகளுமொருதொகையாய்த் தங்களுயிரினிடத்திலிருக்கும் ஆசையினால் கவுசிகியினுடைய முலைக்கச்சுக்குள்ளே புகுந்துகொண்டார்கள். அது ஊழிகாலத்தில் உலகமெல்லாம் சத்தியினிடத்தில் ஒடுங்கியதையொத்தது—எ-று. (கஙரு)

கன்னியாகியசண்டிகையவுணனைக்கரத்தாற்
சென்னிவேறறவெறிந்தனளவனுயிர்செகுத்தாள்
பொன்னினாடர்தம்பதிகளின்மகிழ்ச்சியாய்ப்புகுந்தார்
முன்னமேமுனைறநிறுத்தியகதையினைமொழிவோம்.

இ-ள். இவ்வாறு எல்லாரு மொளித்துக்கொண்டதைப்பார்த்து இனியிவனை வைக்கலாகாதென்றுட்கொண்டு சண்டிகையென்பவள் தன்னுடையகைவாளால் அந்த அவுணனுடைய தலை வேருயற்று விழும்படிவெட்டி அவனுயிரைக்கொன்றாள். இப்படி அவனிறந்ததைக்கண்டதேவர்கள் மகிழ்ச்சியுடன் தங்கள்பதிகளிற்போய்ச்சேர்ந்தார்கள். முன்னம் நிறுத்தியகதையையினிச்சொல்லுகிறோம்.

வேறு. முன்புசெய்தவங்களெல்லாமுடித்துமையவளும்பாலித்
தென்கரைமருங்கிலெய்தித்தீர்த்தமொன்றமைத்துமூழ்கித்
தன்பெயரதற்குநாட்டித்தடத்திலோரிலிங்கந்தாபித்
தன்புறப்பூசைமுற்றியாலயமதனிற்சேர்ந்தாள்.

இ-ள். முன்செய்த தவங்களையெல்லாம் பூர்த்திசெய்துகொண்டு பார்வதிதேவியாரும் பாலாற்றின் தென்கரையோரத்திற்போய் ஒருதீர்த்தமுண்டாக்கி அதில் ஸ்நாநஞ்செய்து கௌரீதீர்த்தமென்று அந்தத்தீர்த்தத்துக்கு நாமமும் ஏற்படுத்தி அதனருகில் ஒரு சிவலிங்கந்தாபித்து அன்புபொருந்தப் பூசையுஞ்செய்துமுடித்து ஆலயத்துக்குளெழுந்தருளினர்—எ-று. (௧௩௭)

வேறு. பரகதிக்கிதுநெறியெனவருள்பரம்பரனை
நரகதிக்குநாம்புகுந்திடாதுதவியநலத்தைக்
குரகதக்குலமறைகளாற்றுதித்திடுங்கோவை
மரகதக்கொடிபடர்ந்திடும்வழித்துணைமருந்தை.

இ-ள். பரகதிக்கு இதுமார்க்கமென்றருளும் பரம்பரனை நரகதிக்கில் நாம்செல்லாதவண்ணங் கிருபைசெய்யும் தருமசொரூபனைத் திரிபுரசங்காரகாலத்தில் தேரிற்பூட்டுங் குதிரைகளாகிய வேதங்களால் துதிக்கப்படும் இறைவனை மரகதக்கொடிபடர்ந்த வழித்துணைமருந்தை—எ-று. (௧௩௮)

என்னுதர்மலாமலரிலொன்றிலாமையாலிரங்கிக்
கன்னனார்விழியிடந்தருச்சனைபுரிகனியை

வெண்ணிலாவிளங்கொழுந்துமேற்படர்சடைவிளக்கை
மண்ணுளார்க்கருங்கதிதரும்வழித்துணைமருந்தை.

இ-ள். எண்ணுகின்ற ஆயிரந்தாமரைமலர்களி லொருமலரில்லா மையால் விஷ்ணுஇரங்கித் தன்கண்ணைப்பறித்து அருச்சனைசெய் தகனியை, வெண்மைபொருந்திய இளந்திங்கட்கொழுந்து மேற் படர்ந்த சடைக்காட்டினையுடைய சோதியை, இம்மண்ணுலகத்தி லிருப்பவர்களுக்குக் கதியருளும்படியான வழித்துணைமருந்தை

கனி—பலா - மா - வாழையென்னும் முப்பழங்கள். அன்புடை யாருள்ளத்தில் மதுரிப்பதால் கனியென்றார். வளருந்தன்மையு டைமைபற்றி திங்கட்கொழுந்தென்னப்பட்டது. (கருக)

எண்டிசாமுகத்திறையவர்க்கிறையவர்க்கிறையை
யண்டகோளகைக்கப்புறத்தப்புறத்தவனைப்
புண்டரீகனுக்கருமறைப்பொருளினுட்பொருளை
வண்டுவாழ்குழலிடத்தனைவழித்துணைமருந்தை.

இ-ள். அஷ்டதிக்குகளிலுமிருக்கும் இறைவர்களுக்கு இறைவர் களானவருக்கும் இறையாயிருப்பவனை, அண்டகோளகைக்கு அப் புறத்திலும் அப்புறமாயிருப்பவனை, பிரமதேவனுக்குரிய அரு மையாகிய வேதத்தினுட்பொருளுக் குட்பொருளாயிருப்பவனை, வண்டுகள்பொருந்திய அளகத்தினையுடைய பார்வதியிடப்பாகனை வழித்துணைமருந்தை—எ-று. (கஎ0)

கண்டுபோற்றினுள்வணங்கினுளிறைஞ்சினுள்கசிந்து
தொண்டினேடுவந்துருகிநாண்மலர்மழைசொரிந்தா
ளண்டர்நாயகன்விடையின்மீதினிதெழுந்தருளிப்
புண்டரீகமென்கரங்களாற்றழுவினன்புயத்தில்.

இ-ள். தரிசித்துத் துதிசெய்து வணங்கிப் பணிந்து அடிமைத் திறத்துடன் மனமுருகி புதியமலர்களா லருச்சித்தவளவில் தேவர் நாயகனுகிய பரமசிவம் ரிஷபவாகனத்தின்மேலெழுந்தருளிப் புய த்திற்பொருந்தத் தன்னுடைய கைத்தாமரைகளால் தழுவினர்—

தேற்றமாகவேகௌரிமாபுரமெனத்திருப்பேர்
சாற்றினுர்களத்தலத்திணுக்கெனச்சொன்ஞன்றவத்தோன்

போற்றுமாதவருரைசெய்வார்நெடியமால்புரமென்
றேற்றமானதுமொழிகுவீரெனவவனியம்பும்.

இ-ள். இவ்வாறு பராசத்தி பூசித்தகாரணத்தினால் அந்தத்தலத்துக்கு கௌரிமாபுரமெனப் பெயர்கூறினர்களென்று சூதமுனிவர் தெளிவுண்டாகச்சொல்லினர். அதை வினவிய முனிவர்கள் சொல்லுகின்றார்கள் சூதமுனிவரே, அந்தத்தலத்துக்கு விண்டுபுரமென்று மேன்மையான பெயர்வந்ததற்குக் காரணஞ்சொல்லுவீரென்னச் சூதமுனிவர் சொல்லுகின்றார்—எ-று. (கசஉ)

கௌரீபுரசருக்கமுற்றியது.

ஆ திருவிருத்தம்-கசஎ.

---

# விண்டுபுரிசருக்கம்.

முந்துநல்லுகங்கழிந்தபின்னுகத்திலேமுகில்போல்
வந்துதோன்றினனவுணர்தங்குலத்தொருமறலி
துந்துவென்பதங்கவன்பெயரவன்பெயர்சொன்னால்
வெந்துநீறெழுமானிடருலகமும்விண்ணும்.

இ-ள். கிரேதாயுகஞ்சென்றபின்பு திரேதாயுகத்திலே அவுணர் குலத்தில் மேகநிறமுள்ளவனாய்த் துந்துஎன்னும்பெயரையுடைய ஒரு அசுரன்பிறந்தான். அவன்பெயரைச்சொன்னாலும் மானிடர்கள்வாழு மிவ்வுலகமும்-தேவருலகமும்வெந்துநீறாகும்—எ-று. (க)

பொருவில்பாகவன்மனத்திலேகனலினைப்புதைத்தான்
வருணனென்பவன்விழியிலேபுனலினைவைத்தான்
பெருகுவாயுவின்முகத்திலேவாயுவைப்பிணித்தா
னருளிலந்தகன்றனக்குமோரந்தகனானன்.

இ-ள். ஒப்பில்லாத அக்கினிதேவனுடையமனதிலே தீயைவைத்தான். வருணனுடையகண்களிலே நீரினைவைத்தான். பெருகாநின்ற வாயுதேவனுடைய முகத்திலே காற்றினைவைத்தான். அருளில்லாத நமனுக்கு மொருநமனானான்—எ-று.

அக்கினிதேவன்மனத்திலே தீயைவைத்ததாவது இந்தஅவுணனாலுண்டாகும் பயமாகிய தீயானது மனதிற் கொதித்துக்கொண்

டிருத்தல். வருணன்கண்களில்நீரினைவைத்ததாவது அசுரன்செய்யும் வருத்தத்தினால் அழுதுகொண்டிருத்தல். வாயுதேவன்முகத்திலே காற்றைவைத்ததாவது அசுரன் பயத்தினாற் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருத்தல். (உ)

காலைமஞ்சனச்சாலையிற்சந்திரகாந்தச்
சாலையுஞ்சினகரங்களினிரைத்திடுந்தகும்பிற்
கோலமஞ்சனமுருகுநீராட்டுவன்குபேரன்
மாலைகுங்குமக்குழம்புகொண்டணுகுவர்வானோர்.

இ-ள். மஞ்சனச்சாலைகளுக்குள் ஒன்றாகிய சந்திரகாந்தக்கற்களால்வகுக்கப்பட்ட சாலையில் காலைப்பொழுதிலும், மற்றக்காலங்களில் மற்றச்சாலைகளிலும் வரிசையாகவைத்திருக்கிற குடங்களிலிருக்கிற அழகும் வாசனையுமுள்ளநீரினால் அந்தஅசுரனுக்குக் குபேரன் ஸ்நானஞ்செய்விப்பன். மற்றத்தேவர்கள் மாலைப்பொழுதில் குங்குமமுதலிய பரிமளவர்க்கஞ்சேர்ந்த சந்தனக்குழம்புகொண்டுவந்து பூசுவார்கள்—எ-று.

காலைப்பொழுதிற் சந்திரகாந்தச்சாலையில் மஞ்சனமாட்டுவன். மற்றக்காலத்தில் மற்றச்சாலைகளில் ஸ்நானஞ்செய்விப்பனென்பது தாற்பரியம். (ங)

சிந்துராசனுங்கொடுத்திடுநவமணித்திரள்க
ளைந்தருக்களையிந்தனமாகவேயளிப்பர்
கொந்தலர்ச்சடைமுனிவருமிமையவர்குழுவுந்
துந்துவிப்படிவாழ்வதையரியுடன்சொன்னார்.

இ-ள். சமுத்திரராசன் நவமணித்திரள் கொடுப்பன், பஞ்சதருக்களைமுறித்து அவன்மடைப்பள்ளிக்கு விறகாகக்கொடுப்பர், இப்படிநடந்துவரும்போது கொத்தாகிய சடைமுடியுள்ள முனிவரும் தேவர்கூட்டமும், துந்துவென்பவனிவ்வாறுவாழ்வதை விஷ்ணுவுடன்சொன்னார்கள்—எ-று. (ச)

கொடியதுந்துவின்செயலெலாமிந்திரன்கூற
நெடியமாயனுமொழிகுவானிமையவர்திருப
வடிகொள்சக்கரமுக்கணனருளினால்வாங்கி
முடிவிலாதவன்வாழ்வுநுங்குறைகளுமுடிப்போம்.

இ-ள். கொடிய துந்துவினுடையசெயலையெல்லாம் தேவேந்திரன்சொல்ல, அதைக்கேட்ட விஷ்ணுவுஞ்சொல்லுகிறார் தேவேந்திரனே பரமசிவனுடைய திருவருளால் சக்கராயுதம்பெற்றுக்கொண்டு முடிவில்லாத துந்துவினுடைய வாழ்வையும் உங்கள்குறையையும் முடிப்போம்—எ-று. (ரு)

விதனநீங்கிநும்பதிபுகுந்திடுமெனவிடுத்து
நதியிலோங்கியகவுரிமாபுரத்தினைநண்ணி
மதுவழிந்திடப்பொருதவன்மதுவழிந்தொழுகும்
புதியபங்கயமலரினாற்றொடங்கினான்பூசை.

இ-ள். விசனம்நீங்கி உங்கள்பதியைச் சேருங்களென்று அனுப்பிவிட்டு நதியினாலோங்கிய கௌரீபுரத்திற்சேர்ந்து முன்னாளில் மதுஎன்னும் அசுரன் அழியும்படியழித்த விஷ்ணுவானவர் தேன் வழிந்தொழுகாநின்ற தாமரைமலர்களால் பரமசிவத்தைப் பூசை செய்யத்தொடங்கினார்—எ-று. (௬)

காயமெங்கணுந்தாமரைவனத்தைநேர்கண்ண
னாயிரம்பசுந்தாமரைவழித்துணையப்பர்
தூயபொன்னடித்தாமரைமலரின்மேற்சூட்டி
நேயமாகவேயருச்சனைபுரிந்தனனெடுநாள்.

இ-ள். செந்தாமரைமலர்களையொத்த அவயவங்களையுடைய மகாவிஷ்ணுவானவர் ஆயிரந்தாமரைமலர்களை மார்க்கசகாயரென்னும் பரமசிவத்தினுடைய பரிசுத்தமுள்ள திருவடித்தாமரைகள் மேற்சாத்தி நெடுநாள் அன்புடனருச்சனைசெய்தார்.

தாமரைமலர்களையொத்த அவயவமாவன—முகம்-கண் - வாய்-அங்கை-பாதம்-என்பவை. (எ)

அன்னவாகனற்கரியவனடியவர்க்கெளியான்
றன்னலார்புரமெரித்தவன்விடையின்மேற்றோன்றி
மன்னுமாழியிற்றுயில்விடுத்தனுகியமாலே
யென்னைநாடினக்களித்திடும்வரங்களென்றிசைத்தான்

இ-ள். இவ்வாறு விஷ்ணு பூசைசெய்வதற்குத் திருவுளமிரங்கி அன்னவாகனமுடையபிரமதேவனுக்குஅரியவரும், அடியவர்க்கெளியரும், தேவர்பகைவருடைய முப்புரங்களையெரித்தவருமாகிய

பரமசிவம் ரிஷபவாகனத்தின்மே லெழுந்தருளி பாற்கடலில் அறிதுயில்நீங்கிய மாயவனே, நாமுனக்குத் தரவேண்டியவரம் யாதென்றார்—எ-று. (அ)

மந்தரகிரியோடுமரகதமலையைத்தாங்கி
வந்திடுங்கயிலையன்னமழவிடைமருங்குறண்ணிப்
பந்தணிவிரலிபாகத்திறைவனைப்பணிந்துபோற்றித்
துந்துவையழிக்குமாறோர்சுடர்ப்படைதருகவென்றான்.

இ-ள். மகமேருவுடனே மரகதமலையைத்தாங்கிக்கொண்டு வருதல்போன்ற வெள்ளிமலையாகிய கயிலையையொத்த ரிஷபவாகனத்திற்கு அருகிற்சென்று பந்துபோல அழகுபொருந்திய விரற்களையுள்ள பார்வதிபாகனைப்பணிந்து போற்றிசெய்து துந்துவென்னும் அவுணனையழிக்குமாறு ஒரு ஆயுதம் அருளிச்செய்யவேண்டுமென்றனர்—எ-று.

சுவாமி-பொன்னிறம், பார்வதியார் - மரகதநிறம், ரிஷபம்-வெள்ளைநிறமாதலால் மந்தரகிரியையும் மரகதமலையையுந்தாங்கிவருங் கயிலையென்றார். (கூ)

வேறு. அஞ்சக்கரமந்திரங்களினலாயிரமாமம்புயத்தைக்
கஞ்சக்கரங்களினிலேந்திப்பதமீதணிந்தகரியவற்கு
நஞ்சக்கரவமணியாகப்புனைவானுதல்சேர்நயனத்தான்
செஞ்சக்கரமொன்றினிதளித்தானேற்றானந்தத்திருமாலே.

இ-ள். பஞ்சாக்ஷரமந்திரங்களினால் ஆயிரந்தாமரைமலர்களைத் தன்கைத்தாமரைமலரிலேந்தித் தமது திருவடியிலருச்சித்த விஷ்ணுவுக்கு அக்குமணியினையும் விஷமுள்ளநாகத்தையும் ஆபரணமாகஅணிந்தவரும் நெற்றிக்கண்ணையுடையவருமாகிய பரமசிவம் ஒருசக்கராயுத மினிதாக அருளிச்செய்ய அதை விஷ்ணுவானவர் ஏற்றுக்கொண்டனர்—எ-று. (கo)

நீலமாலென்னுங்காலனேமியாங்கதிரைவீசிக்
கோலமாநிருதராயகங்குலைக்குலைத்துவீழ்த்தான்
சாலவேயிமையோர்போதும்விடிந்ததுதலத்தின்பேரும்
வேலைமேலுறங்குமாயன்பெயரினல்விளங்கிற்றன்றே.

இ-ள். நீலநிறமுள்ள விஷ்ணுவாகிய காலனுனவன் சக்கரமாகிய சூரியனையேவிஅசுரகோலமாய்வந்திருக்கிற இருளைக்குலைத்த

வுள்வில் மிகுதியாகத் தேவர்களுக்குப்பொழுதுவிடிந்தது. அதுமுதல் அந்தத்தலத்தின்பேரும் பாற்கடலிலுறங்கு மாயவன்பெயரால் விளங்கியது—எ-று. (கக)

பின்னுமத்தலத்திலெய்திப்பெருந்தவம்புரிந்துதன்பேர்
தன்னிலோர்தடமுங்கண்டுமருங்கிலோரிலிங்கந்தாபித்
திந்நிலம்பிழைக்கச்செய்தானிரும்பகைதவிர்ப்போரந்தப்
பொன்னியறடத்திற்றோய்ந்துபுனிதனைப்போற்றுவாரே.

இ-ள். மறுபடியும் அந்தத்தலத்திற்சென்று பெரியதவம்புரிந்து தன்பெயராலே மாதவதீர்த்தமென்று ஒருதீர்த்தமுமுண்டாக்கி அதன்மருங்கி லொருசிவலிங்கமுந்தாபித்து இவ்வுலகத்தார்பிழைக்கும்படி யிவ்வாறுபூசைசெய்தான். மிகுந்த ஆணவமலப்பகையை த்தவிர்ப்பவர்கள் பொலிவுள்ள அந்தத்தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து சிவலிங்கப்பெருமானையுந் துதிசெய்வார்கள்—எ-று. (கஉ)

தந்தமாதவன்றடத்திலேதமதுடனனைத்தார்
தொந்தமாகியபிறவியாங்கடலினிற்றுளையா
ரந்தரானவர்முழுகிநல்விழியுடைத்தாவர்
வந்தியானவண்முழுகினற்பெறுகுவண்மகவை.

இ-ள். மகாவிஷ்ணுவுண்டாக்கிய மாதவதீர்த்தத்தில்தங்களுடைய உடல்நனையும்படி முழுகினவர்கள் தொடர்ந்துவருகிற சனனக்கடலில்முழுகார்கள். குருடர்கள்ஸ்நாநஞ்செய்தால் கண்பெறுவார்கள்.மலடியாயிருப்பவள்ஸ்நாநஞ்செய்தால்பிள்ளையைப்பெறுவாள்.

விண்டுபுரிசருக்கமுற்றியது.

ஆ திருவிருத்தம்-உகo.

## கரபுரிசருக்கம்

ஒருபெருங்கதையுரைக்குதுந்துவாபரயுகத்தி
னிருதர்தங்குலத்துதித்தனன்கரனெனுநிருதன்
பொருதுநாலிருதிசையினுந்தன்பெயர்பொறித்தான்
கருதிலன்னவன்பெயர்சொலிற்காலனுங்கலங்கும்.

இ ள். பெரிதான ஒருகதைசொல்லுகிறோம், அதாவது துவாபரயுகத்தில் *கரனென்னுங் கழுதைமுகமுள்ள ஒரு அசுரராசன்

* கரமென்பது - கழுதை.

அசுரகுலத்திற்பிறந்த அந்தக்கரன் இந்திரன்முதலான தேவர்களுட ன்போர்செய்து வென்று அஷ்டதிக்குகளிலுந் தன்பெயரைநிறுத் தினன். அவன்பெயர்சொன்னாலும் நினைத்தாலும் யமனும் மனங் கலங்குவான்—எ-று. (க)

நெய்யுமாற்றலருதிரமுமிறைச்சியுநிணமும்
பெய்யும்வேலினனுடலுயிரனைத்தையும்பிரித்து
வையமீதுதன்கொடும்பசிக்கருத்தினல்வருத்தி
வெய்யபாவமும்பழிகளும்விளைந்தனமிகவும்.

இ-ள். நெய்யிலும் - பகைவருடைய உதிரத்திலும் - இறைச்சியி லும்-நிணத்திலும்-தோயும்படியான வேலினையுடையவன், உலகத் திலிருக்கும் உடலுயிர்களையெல்லாம் வதைசெய்து பிரித்துத் தன் பசிக்கு ஆகாரமாக உண்ணக்கொடுத்தவன், இதனல் கொடியபாவ மும் பழிகளும் அவனுக்கு மிகுதியாகவிளைந்தன—எ-று. (உ)

மண்ணின்மேலநரைதிரையுமாய்ப்பிணியுமாய்வலிபோ
யுண்ணிலாவியபசியினல்வேட்டமுற்றலைந்தா
னெண்ணிலாதவத்தினத்திலோர்தினத்திலேயிளைத்துத்
தெண்ணிலாவிரிசங்குசூழ்பாலியிற்றிளைத்தான்.

இ-ள். அந்தக்கரனென்னும் அசுரன் நரையும்-திரையும்-பிணிக ளும்உடையவனுப் பலங்குன்றி வயிற்றிலுண்டாகிய பசியினல் உலகமெங்கும் மிருகவேட்டையாடித்திரிந்தான். இவ்வாறு திரிந்து கொண்டிருக்கும் அளவில்லாதநாள்களிலொருநாள் ஆகாரமொன் றுங்கிடையாமைபாற் பசிகொண்டு இளைப்படைந்து வருகின்ற வன் தெளிந்தநிலாவின் பிரகாசம்பொருந்திய சங்குகள்சூழ்ந்த பாலாற்றினைக்கண்டு அதில்மூழ்கினன்—எ-று. (ந)

வேறு. முத்திபைக்கொடுக்கும்பாலிநதியிலேமுழுகினேர்க்குச்
சித்தியுமெளிதாமிம்மைமறுமையின்வினையுந்தீரு
மத்தகுநதியினீரால்விளைந்தநெல்லமுதுண்டாருக்
குத்தமரல்லாரில்லைத்துண்டதீவினையுந்தீரும்.

இ-ள். முத்தியைத்தருவதாகிய பாலாற்றில் முழுகினவர்களுக் கு அஷ்டசித்திகளுமுண்டாகும், இப்பிறப்பிலும் முன்பிறப்பிலு முண்டாகிய வினைகளுந்தீரும், தகுதியுள்ள அந்தநீரினல்விளைந்த

நல்லரிசியன்னம் புசித்தவர்களுக்கு முன்னமொருகாலம் உத்தமரல்லாதார்வீட்டில் அன்னம்புசித்தலால் நேரிட்டபாவமுந்தீரும்.

பாலிமாநதித்தெய்வநீராடியபலத்தா
லாலமாயவனேயமாயவன்புரத்தடைந்தான்
சாலுமப்பதியடைந்திடுமேரும்பெருந்தவத்தாற்
சூலபாணியாம்வழித்துணைமருந்தனைத்தொழுதான்.

இ-ள். ஆலகாலவிஷத்தையொத்த அந்தஅசுரன் தெய்வத்தன்மையுள்ள அந்தப்பாலாற்றினீரில் மூழ்கியபலத்தினால் அன்புடன் விஷ்ணு பூசைசெய்ததாகிய விண்டுபுரியிற்சேர்ந்தான். மேன்மைபொருந்திய அந்தத்தலத்தையடைந்த அரிதாகிய பெரியதபோபலத்தினால் சூலபாணியாகிய மார்க்கசகாயனைத்தரிசித்துத் தொழுதான்—எ-று. (ரு)

மன்னியவிமானந்தோன்றுமிடமெலாம்வானோர்நாடா
மின்னிசைமுரசங்கேட்குமிடமெலாமயனூடென்பர்
சென்னியர்துதியினேசைதெரிவிடந்திருமாலூரா
முன்னியசிவன்வாழ்கோயிலுருத்திரனுலகமாமே.

இ-ள். சிவலிங்கப்பெருமான் வீற்றிருக்கிற கெர்ப்பக்கிரகஸ்தூபி தெரியும்படியிருக்கிற இடமெல்லாம் தேவருலகத்துக்குச்சமானமாம், அங்குமுழங்கு மினிதானஓசையுள்ள முழவுகேட்குமிடமெல்லாம் பிரமலோகமென்பார்கள்,பாணர்கள்துதிக்கும் ஓசைகேட்குமிடமெல்லாம் விஷ்ணுலோகமாமென்பார்கள், கருதுகின்ற பரமசிவம்வீற்றிருக்கும் திருக்கோயிலானது ஸ்ரீகண்டருத்திரலோகமாகிய கைலாசமாம் என்பார்கள்—எ-று. (சா)

வேறு.பெற்றதன்பெயராலொருமலர்த்தடம்பெருக்கி
நற்றடங்கரைமீதிலோரிலிங்கமுநாட்டி
நிற்றநிற்றமத்தடத்திடைமூழ்கிவெண்ணீறிட்
டற்றநீங்கவேயருச்சனைபுரிந்தனனலரால்.

இ-ள். பேறுபெற்ற அந்தஅசுரனானவன் தன்பெயரால் மலர்களுள்ள ஒருதீர்த்தமுண்டாக்கி அந்தத்தீர்த்தக்கரைமேல் ஒருசிவலிங்கமுந்தாபித்துத் தினந்தோறும் அந்தத்தீர்த்தத்தில்ஸ்நானஞ்செய்து விபூதியணிந்து பாவம்நீங்க மலரால்அருச்சனைசெய்தான்.—

நாயினுங்கடையானவராயினு நரகிற்
றீயவல்வினையாளர்களாயினுஞ்சிவனார்
தூயபொன்னடித்தாமரைக்கொருமலர்சூட்டி
லாயிரம்பிறப்பியற்றியபழவினையகலும்.

இ-ள். நாயினுங் கடைப்பட்டவர்களானாலும் நரகில்விழத்தக்க பாவிகளானாலும் மார்க்கசகாயருடைய பரிசுத்தமுள்ள திருவடித் தாமரைமலரில் ஒருமலர்சாத்தினாலும்ஆயிரம்பிறப்பிற்செய்த பழ வினை நீங்கும்—எ-று. (அ)

நறுமலர்ச்சடைவழித்துணைபவர்க்கொருநாளி
லறுகுபச்சிலைசருகுமற்றுயினுமணிந்தான்
மறுபிறப்பறுமிறப்பறும்பகையறுமகவு
முறுதிபற்றியமேன்மையுங்கல்வியுமுளதாம்.

இ-ள். வாசனைபொருந்திய கொன்றைமாலையணிந்த சடாமகுட முள்ள வழித்துணைநாதருக்கு ஒருதினத்தில் அறுகாவது - பச்சிலை யாவது - உலர்ந்தவிலையாவது-மலர்களாவது சாத்தினால் மறுபிறப் பறும், இறப்புமறும், பகைவரும் ஒழிவார்கள், புத்திரசம்பத்தும்- உறுதிபெற்றமேன்மையும் கல்வியுமுண்டாகும்—எ-று. (௯)

வினையகன்றிடும்பிணிகளுமகன்றிடுமிடிபோம்
நினையுமெய்ப்பொருளாயினும்வருமிவைநிற்க
தினைவிதைக்குநேரறமுமத்தலத்திலேசெய்தாற்
பனைவிதைக்குநேராகவேவளர்ந்துமேற்பலிக்கும்.

இ-ள். நல்வினைதீவினையென்னு மிருவினைகளும் அவையேது வாகவருகின்ற மகாரோகங்களும் நீங்கும், வறுமையுமொழியும், கருதுகின்ற எவ்வகைப்பொருளுங்கிடைக்கும், இவைகணிற்க தி னையளவுதருமம் அந்தத்தலத்திற்செய்தால் பனங்கொட்டைக்குநே ராகவே அதிகரித்து மறுபிறப்பில் பயன்தரும்—எ-று. (௧௦)

ஆவிலாயிரமாயிரந்தினந்தினமழிக்கும்
பாவியானவனெனினுமப்பதியினிற்பணிந்தால்
நீவிலாதமெய்ஞ்ஞானியாய்ப்புலன்களைநிறுத்தி
யாவியானவமகன்றிடச்சிவகதியடைவார்.

இ-ள். தினந்தோறும் பத்துலட்சம்பசுக்களை வதைசெய்யும் மகாபாவிகளேயானாலும் அந்தத்தலத்தில்வந்து சுவாமியைப்பணிந்தால் பழுதில்லாத மெய்ஞ்ஞானியாய் ஐம்புலன்களையடக்கி உயிரைப்பற்றிய ஆணவமலம்நீங்கச் சிவகதியையடைவார்கள்—எ-று.

மரகதக்கொடியிறைவனைக்காலையில்வணங்கி
லிருதுவிற்செயும்வினையறும்பகற்பொழுதிறைஞ்சி
லிருபிறப்புடைவினையறுமெழுபிறப்புள்ளே
பரவும்வல்வினையகன்றிடுமாலையிற்பணிந்தால்.

இ-ள். மரகதவல்லியென்னும் பார்வதிதேவியாரை இடப்பாகத்திலுடைய வழித்துணைநாதரைக் காலைப்பொழுதில் தரிசனஞ்செய்தால் ஒருபிறப்பிற்செய்த பாவம்நீங்கும், பகற்காலத்தில் தரிசனஞ்செய்தால் ஒருசனனத்தில்செய்த பாவம்நீங்கும், அந்திப்பொழுதில் தரிசித்தால் எழுபிறப்பிலுஞ்செய்த பாவமெல்லாம் நீங்கும்—எ-று. (கஉ)

சோதியைக்கரபுரியினிற்காலையிற்றொழுதா
நீதியினர்க்குறவாகியபாதகந்தீரும்
பாதகத்தொகையைந்தறும்பகலிடைப்பணிதல்
போதுபுக்கபின்பணிதன்மாபாதகம்போக்கும்.

இ-ள். கரபுரியில் வழித்துணைநாதரைக் காலைப்பொழுதிற்பணிந்தால் கொடியவர்களுடன் உறவுசெய்தலாலுண்டாகும் பாவந்தீரும், பகற்காலத்தில்தொழுதால் பஞ்சமாபாதகம்நீங்கும், அந்திப்பொழுதிற்பணிந்தால் வாக்கினாற்சொல்லக்கூடாத பெரியபாவங்களெல்லாம்நீங்கும்—எ-று. (கங)

காலையேத்திடின்மனத்தினால்வரும்வினைகழலும்
வேலைநண்பகற்பணிந்திடிலுரைதரும்வினைபோம்
மாலையானதில்வழித்துணைமருந்தனைவணங்கி
லோலமோலமென்றேவிடும்வினையெலாமோடும்.

இ-ள். வழித்துணைநாதரைக் காலைப்பொழுதில் துதிசெய்தால் மனதினால்வரும் பாவம்நீங்கும், மத்தியானகாலத்தில்தொழுதால் வாக்கினால்வரும்வினைபோம், அந்திப்பொழுதிற்பணிந்தால் ஓலமோலமென்றுமுறையிட்டுக்கொண்டு சகலபாவமுந்தொலையும்—எ-று.

விழுந்துமெய்யுறப்பணிந்தவர்வினைகளும்வீழு
மெழுந்தபோதவர்வினையெலாமெழுந்திராதிறக்கு
மழுந்துமெய்யினிற்றுகளினுக்கோருகமழுதின்
கொழுந்தருவோனுலகினிலுறைகுவர்குடியாய்.

இ-ள். உடல் பூமியில்படும்படி மார்க்கசகாயனைப்பணிகின்றவர்களுடைய பாவமெல்லாம்நீங்கிப்போம், அவ்வாறுபணிந்தெழுந்த போது அவர்கள்பாவமெல்லாம் எழுந்திராமல்நீங்கிப்போம், அப்போது சரீரத்திற்பொருந்திய துகள்களில் ஒருதுகளுக்கொருயுகமாக அமுதக்கொழுந்தாகிய இளந்திங்களைச்சூடிய பரமசிவத்தினுலகத்தில் வாசமாயிருப்பார்கள்—எ-று. (௧௫)

காலமன்றியபொழுதினிற்பணிதலோர்கரத்தால்
பாலலோசனர்ப்பணிகுதலிடத்தினிற்பணிதன்
மேலினிற்கலைதனுடன்பணிகுதல்விடைமு
னாலயத்தினிற்பணிகுதல்பழுதிவையைந்தும்.

இ-ள். காலமல்லாதகாலத்தில் ஆலயத்திற்போய் நெற்றிக்கண்ணுள்ள பரமசிவத்தைப் பணிதலும், ஒருகையினால்தொழுதலும், சிவலிங்கப்பெருமானுக் கிடப்புறத்திலிருந்துபணிதலும், மேலே வஸ்திரம்போட்டபடியேபணிதலும், ஆலயத்துக்குள் நந்திமுன் பணிதலும்ஆகிய இவ்வைந்தும் பழுதுள்ளசெய்கையாம்—எ-று.

கரபுரிசருக்கமுற்றியது.

ஆ திருவிருத்தம்-௨௨௬.

---

# விரிஞ்சைப்புரிசருக்கம்.

மாதவம்புரிவதிட்டனிப்படிசொலமகிழ்ந்து
சூதவந்தணன்முதலினோரனைவருந்துதித்து
வேதியன்புரமானதெப்படியெனவினவத்
தாதைதல்புரமாகியகதையினைச்சாற்றும்.

இ-ள். பெரியதவஞ்செய்கின்ற வசிஷ்டமுனிவர் இவ்வாறு கரபுரிமான்மியத்தைச்சொல்லக்கேட்டு மகிழ்ந்து சூதமுனிவர்முதலாகிய முனிவர்கள்யாவரும் அவரைத்துதித்துப் பிரமதேவன்பெயரால்

விரிஞ்சைப்புரமென்று பெயர்பெற்றதெவ்வாறென்றுவினவ, வசிஷ்டரானவர் தம்முடையதாதையாகிய பிரமன்பெயரால் விரிஞ்சைப்பதியென்றாகிய சரித்திரத்தைச்சொல்லுகிறார்—எ-று. (க)

முன்னைநாலுகங்கூடியதாயிரமேடிநந்தா
லன்னவாகனற்கொருபகலாகுமப்பகலின்
மன்னுமீரேழுமனுக்களும்வலாரியும்வாழ்வர்
பின்னரப்படிநூறுகங்கனன்மழைபெய்யும்.

இ-ள். முன்னம் நான்குயுகமுங்கூடியஆயிரஞ்சதுர்யுகஞ்சென்றால் பிரமதேவனுக்கொருபகலாகும், அந்தவொருபகலில் பதினன்குமனுக்களும் தேவேந்திரனும் வாழ்வார்கள். பின்பு அப்படி நூறுயுகம் அக்கினிமழைபெய்யும்—எ-று. (உ)

அங்கியாலுலகேழும்வெண்பலியுருவாகும்
பொங்குநூறுகம்பின்னருங்கனன்மழைபொழியு
மெங்குமோருருவாகியேயுருகுமவ்வெரியாற்
றுங்கவானவர்சத்தியவுலகினிற்சூழ்வர்.

இ-ள். அந்தஅக்கினிமழையினால் உலகமெல்லாம் வெண்மைநிறமுள்ள சாம்பலாகும், அதன்பின்பும் நூறுயுகம் அக்கினிமழைபெய்யும், அந்த அக்கினிமழையினால் எங்குமொரு உருவமாயுருகும், அப்போது தேவர்கள்சகிக்கமாட்டாமல் சத்தியலோகத்திற்போய்ச்சேர்வார்கள்—எ-று. (ங)

அந்தவெண்ணிலேநூறுகம்புனன்மழையடரும்
வெந்தயாவையுந்தணிந்திடுநூறுகமீளத்
தந்தமாரியின்வாரியானமறைந்திடுந்தரணி
மந்தராசலம்பாதியப்புனற்குளேமறையும்.

இ-ள். மேற்சொல்லிவந்த அளவின்படி நூறுயுகம் நீர்வருஷிப்பொழியும், அந்த நீர்வருஷத்தினால் முன்வெந்தவைகளெல்லாந்தணியும்,மறுபடி நூறுயுகம்பெய்த நீர்வருஷத்தினால்இவ்வுலகமறைந்துவிடும், அந்தநீரிலே மகமேருவானது பாதிமறையும்—எ-று

இந்தநாலுகத்தாயிரநான்முகற்கிரவா
மந்தநள்ளிருண்முழுவதுமாலிலைத்துயில்வோ
னுந்திமீதயனுறங்கிடுமவ்விரவொழிந்தால்
வந்தொரோண்மாயுலகெலாமமைத்திடுமாயன்.

இ-ள். மறுபடி இவ்வாறு ஆயிரஞ்சதுர்யுகமானால் பிரமதேவனுக்கு ஒருராத்திரியாம், அந்த இராத்திரிமுழுவதும் பிரமதேவன் ஆலிலையிற்பள்ளிகொண்டிருக்கும் நாராயணமூர்த்தியினுடைய நாபிக்கமலத்தினிடத்தில் உறங்குவன். அந்த இராத்திரியொழிந்தால் நாராயணமூர்த்தி வராகஅவதாரஞ்செய்து உலகத்தையெல்லாம் முன்போல அமைப்பன்—எ-று. (௫)

(நள்ளிருள் - செறிந்த இருள்.)

ஆண்டுநூறுசென்றிடலயனரியிடத்தடங்கு
மீண்டுமச்சுதனச்சுதனாகியவிதியைக்
காண்டரும்படியளித்திடுஞ்சதுமறைக்கடவு
டண்டியாவையும்படைத்திடுந்திசைமுகனாகி.

இ-ள். இப்படி நூறுவருஷஞ்சென்றால் பிரமதேவன் மகாவிஷ்ணுவினிடத்திலொடுங்குவன், மறுபடி விஷ்ணுவானவர் அந்தத் தன் புத்திரனாகிய பிரமதேவனை யாவருங்காணும்படி யுண்டாக்குவன். அதன்பின்பு பிரமதேவன் நான்குமுகமுள்ளவனாகி உலகங்களையெல்லாஞ் சிருஷ்டிப்பன்—எ-று. (௬)

பிரமகற்பமோரிரண்டொருநாளதாய்ப்பெருகு
திருவினாயகற்காண்டுநூறப்படிசென்று
லரனிடத்திலேயடங்குவனடங்கியவரியை
விரவுசிட்டியிலுருத்திரன்மீளவும்விதிப்பன்.

இ-ள். இவ்வாறுநடக்கும் இரண்டு பிரமகற்பம் விஷ்ணுவுக்கு ஒருநாளாய்ப்பெருகும், அவ்வண்ணம் நூறுவருஷஞ்சென்றால் விஷ்ணுவானவர் உருத்திரனிடத்திலேயடங்குவர். அவ்வாறுஅடங்கிய விஷ்ணுவைச் சிருஷ்டியில் உருத்திரமூர்த்தியானவர் மறுபடிசிருஷ்டிப்பார்—எ-று. (எ)

அதுவிரித்திடிற்பெருகிடும்பரம்பரையதனால்
விதிபடைப்புநான்முகக்குமுமக்கெனவிளம்பு
முதலியிற்றியினெடியவனுந்தியிலுதித்த
பதுமனப்பொழுதறிந்திலன்படைத்திடும்பரட்டை

இ-ள். அதனைவிரித்துச்சொன்னால் அதிகமாம் ஆதலால் அது நிற்க, பிரமதேவனுடைய சிருஷ்டிப்பைப் பரம்பரையினால் நான்

சொல்லுகிறோம் உங்களுக்கென்று சொல்லுகிறார். பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் விஷ்ணுவினுடைய நாபியிலுதித்த பிரமதேவன் அக்காலத்தில் சிருஷ்டித்தொழில் தெரியாதவனுயிருந்தான்—எ-று. (அ)

நெற்றிமீதினிலமலனைச்சமாதியாலினைத்தான்
சுற்றராமுடியிறைவனுமுமையுடன்ருேன்றி
யிற்றைநாளுனக்களித்திடும்வரங்களேதென்ருன்
முற்றயாவையுந்தெரிந்திலன்படைப்பெனமொழிந்தான்.

இ-ள். அவ்வாறு தெரியாமலிருந்த பிரமதேவன் நிஷ்டையில் தன்னுடைய நெற்றியினிடமாகப் பரமசிவத்தைத் தியானஞ்செய்துகொண்டிருந்தான். அப்படியிருக்கும்போது நாகங்களைச்சுற்றிய சடைமுடியுள்ள பரமசிவன் பார்வதிதேவியாருடன் பிரத்தியக்ஷமாய்ப் பிரமதேவனை அருளுடனேக்கி இப்போது நாமுனக்குத் தரவேண்டியவரம் யாதென்ன, பிரமதேவன் பரமசிவத்தை வணங்கி அடியேன் சிருஷ்டிக்குந்தொழில் சிறிதுந்தெரியாதவனுயிருக்கிறேனென்ருன்—எ-று. (கூ)

பரமனேயெனப்பகர்ந்திடும்பதுமனைப்பார்த்துப்
பிரமனேயுனக்குணைசெய்வோமுலகெலாம்பெண்ணும்
விரவுமாணுமாயிருக்குமவ்விரண்டையும்விரிக்கி
லுருவமாகநம்மிடத்திலேயறிகவென்றுரைத்தான்.

இ-ள். பரமசிவமே அருள்செய்யவேண்டுமென விண்ணப்பஞ்செய்த பிரமதேவனைநோக்கிப் பிரமனே யுனக்குநாம் அருள்செய்கிறோம் உலகமெல்லாம் பெண்ணும்பொருந்திய ஆணுமாயிருக்கும் அவ்விரண்டையும் உருவமாகவிவரிக்கில் சத்தியும்-சிவமுமாயிருக்கும் நம்மிடத்திலே யறிந்துகொள்வாயாகவென்று திருவாய்மலர்ந்தருளினர்—எ-று. (க0)

பகுதியாகியபடைப்பிருமூன்றுளயகில்
விகுதியாகியபடைப்பொருமூன்றுளவிதிக்கிற்
றெருகுதியாகவேமாயையிலொருகலைதோன்று
மிகுதியாகுமக்கலையினிற்பிறிக்குமவ்வியத்தம்.

இ-ள். பிரகிருதியாகிய சிருஷ்டி ஆறுவகையாயிருக்கின்றன; சொல்லுமிடத்தில் விகுர்தியாகிய சிருஷ்டி மூன்றுவகையாயிருக்கின்றன, விதிக்குமிடத்தில் தொகுதியாகவே மாயையிலொருகலை தோன்றும், பிகுதியாகிய அக்கலையில் அவ்வியத்தமுண்டாகும்.—

ஆறவன்னதிற்பிறந்திடும்புத்தியாங்கதிலாங்
கார மூன்றும்வந்துதித்திடுமவைகளிற்கருத்துஞ்
சாருமிந்திரியமொருபதும்பூதமுந்தழைக்கும்
பாரிலிப்படியறுவகைச்சிருட்டியும்படைப்பாய்.

இ-ள். பொருந்த அந்தக்கலையில் புத்தியுண்டாகும், அந்தப்புத்தியினிடமாக மூன்று அகங்காரமும்பிறக்கும், அந்த அகங்காரங்களில் மனமும் தசவித இந்திரியங்களும் பஞ்சபூதங்களும் உண்டாகும், உலகத்திலிவ்வாறு அறுவகைச்சிருஷ்டிகளையும்படைப்பாய்.

ஆங்காரம் மூன்றுவன—பூதாதியாங்காரம் - தைசதவாங்காரம் - வைகாரிகாங்காரம்.—இந்திரியங்கள் பத்தாவன—மெய்-வாய்-கண்-மூக்கு-செவி-என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாக்கு - பாதம் - பாணி - பாயுரு - உபத்தம் - என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்துமாம்.— பஞ்சபூதம்—பிரிதிவி - அப்பு - தேயு - வாயு - ஆகாயம் - என்பவை. (௧௨)

மூவகைப்படும்விருத்தியின்விரிவினைமொழியின்
மாவுமற்றுளபறவையுமொருவகைமரனும்
பூவளித்திடும்புதர்களுமொருவகைபுணருந்
தேவர்மற்றுளமனிதருமொருவகைச்சிருட்டி.

இ-ள். மூன்றுவகைப்பட்ட விருத்தியின்விரிவைச்சொல்லில் மிருகங்களும்-மற்றையபக்ஷிகளும்-ஒருவகைச்சிருஷ்டி, விருக்ஷங்களும்-மலர்களைத்தருகின்ற புதர்களும்-ஒருவகைச்சிருஷ்டி, தேவர்களும் - மனிதர்களு மொருவகைச்சிருஷ்டியாம்—எ-று. (௧௩)

மேலதாகவேதோன்றிடுந்தருக்களின்விகற்பஞ்
சாலுமானிடர்தோமுகநிலையினுற்சனிப்பர்
கோலமோகுறுக்காயெழும்விலங்குபட்குலங்கள்
தோலுறுஞ்செவிதுளைச்செவியர்புயிர்த்தொகுதி.

இ-ள். விருக்ஷபேதங்களெல்லாம் மேல்நோக்கி ஊர்த்தமுகமாகவளரும், மிகுதியான மானிடர்கள் கீழ்நோக்கி அதோமுகநிலையினுற்சனிப்பார்கள், மிருகங்களும்-பக்ஷிகளும்-பக்கப்பார்வையாகச்சனிக்கும், இவ்வகையுள்ள உயிர்வருக்கங்கள் தோல்புறத்திற்றோன்றுங் காதுகளையுடையதுகளும் தோல்புறத்திற்றோன்றாமல் துளைமாத்திரமுள்ளதான காதுகளையுடையதுகளுமாம்—எ-று.

காதிருப்பதாக வெளியிற்றோன்றாமலிருப்பது துளைச்செவி, இவ்வாறு துளைச்செவிகளையுடையவை பக்ஷிகள்முதலானவைகளாம். (கச)

பிண்டமீதினிற்றோற்செவியுயிரெலாம்பிறக்கு
மண்டமீதினிற்சனித்திடுந்துளைச்செவியனைத்துஞ்
சண்டனாண்பெண்ணென்றுனைபெறுமூவகைத்தருக்கள்
எண்டகும்படிவயிரமுள்ளனவுமற்றிலவும்.

இ-ள். தோற்காதுகளையுடைய உயிர்களெல்லாங் கருவில் பிண்டமாகத்தங்கியுதிக்கும், துளைச்செவியுயிரெல்லா முட்டையிற்றங்கிப்பிறக்கும், வயிரமுள்ளவிருக்ஷங்கள் ஆண்விருக்ஷங்களென்றும் வயிரமில்லாதவிருக்ஷங்கள் பெண்விருக்ஷங்களென்றும் அலிவிருக்ஷங்களென்று மூன்றுவகைப்படும்—எ-று. (கரு)

(சண்டனென்பது - அலி.)

மாதுபாகனிப்படிசிட்டிவகையெலாமறைந்தான்
வேதநாயகனப்படியுலகெலாம்விதித்தான்
சோதிதன்னருட்பெருமையாற்றெரிந்ததித்தொழிலென்
றோதிதாடொழக்காபுரிப்பதியினையடைந்தான்.

இ-ள். பார்வதிபாகனாகிய பரமசிவன் இவ்வாறு சிருஷ்டிக்கிரமங்களை அருளிச்செய்தார். அதைத்தெரிந்துகொண்ட பிரமதேவன் அந்தக்கிரமப்படி உலகத்தையெல்லாஞ் சிருஷ்டித்தான், அப்படிசிருஷ்டித்துச் சோதிசொரூபமாகிய பரமசிவத்தினுடைய அருளால் இந்தச்சிருஷ்டித்தொழில் நமக்குத் தெரிந்ததென்று அந்தக்கடவுளைப்பணிவதற்குக் காபுரியையடைந்தான்—எ-று. (கசா)

ஆற்றினுக்கெலாந்தலைமையாம்பாலிநீராடிப்
போற்றிநம்பனையனுதினமருச்சனைபுரிந்து

கோற்றொடிப்பசுங்கொடியிடைமரகதக்கொடியை
மாற்றுமிக்கபொன்மலர்களாற்பணிந்தனன்வழுத்தி.

இ-ள். நதிகளுக்கெல்லாந் தலைமையாகிய பாலிநதியில் ஸ்நாநஞ்செய்து நாள்தோறும் மார்க்கசகாயரை அருச்சனைசெய்தும் வளையலணிந்த கையினையும், பசுங்கொடியொத்த இடையினையும் உடைய மரகதவல்லித்தாயையும் மாற்றுயர்ந்த பொன்மலர்களால் அருச்சித்துந் தொழுதும் தோத்திரஞ்செய்தான்—எ-று. (௧௭)

அயனுமத்தலத்தொருதடஞ்சமைத்தனனலர்மேற்
கயல்குதிக்குமத்தடத்திலோரிலிங்கமுங்கண்டான்
வியன்மணிச்செறிகரபுரியெனும்பதிவிரிஞ்சைப்
பெயர்படைத்ததுபிரமனுஞ்சிவகதிபெற்றான்.

இ-ள். பிரமதேவனும் அந்தத்தலத்தில் ஒருதீர்த்தமுண்டாக்கிச் சேல்மீன்கள்குதிக்கும்படியான அந்தத்தீர்த்தக்கரையில் ஒருசிவலிங்கமும் ஸ்தாபித்துப் பூசைசெய்தான். இந்தக்காரணத்தினால் பெரியமணிகள்நிறைந்துள்ள கரபுரியானது விரிஞ்சைப்பதியென்று பெயர்பெற்றது. இவ்வாறுபூசித்த பிரமதேவன் மார்க்கசகாயருடைய கிருபையினால் சிவகதியடைந்தான்—எ-று. (௰௮)

விரிஞ்சைப்புரிசருக்கமுற்றியது.

ஆ திருவிருத்தம்-உ௪௪.

---

# வழித்துணைச்சருக்கம்

அடிவளைந்துமுனிவர்தொழவரமளிக்குங்களிற்றுமுகத்
தரசைப்போற்றி
வடிவளைந்ததனம்பெருத்துநடுவளைந்தமாகதப்பூ
மயிலைப்போற்றி
கொடிவளைந்தமதில்புடைசூழ்கரபுரியிலொருசிறுவன்
குறைவுதீர
முடிவளைந்தவழித்துணைவரடிபணிந்துகதைகளெல்லா
மொழிகுவேனே.

இ-ள். சிரவணங்கித் தம்முடையதிருவடியைத்தொழுகின்றமு னிவர்களுக்கு வேண்டியவரங்களைக்கிருபைசெய்யும் யானைமுகமு ள்ள விநாயகரைப்போற்றிசெய்து அழகுகலந்த திருத்தனபாரம் பூரித்துவளர்ந்தஇடையினையுடையமரகதவல்லித்தாயாரையும்போற் றிசெய்து கொடிகள்பொருந்தியமதிலானது புறத்திற்சூழ்ந்திருக் கும்படியான கரபுரியினிடத்தில் ஒருபிராமணப்பிள்ளையினுடைய மனக்குறைவுதீரும்படிதிருமுடிவளர்ந்த மார்க்கசகாயருடையதிரு வடியையும்வணங்கி மற்றச்சரித்திரங்களையுஞ் சொல்லுகிறேன்.—

வேறு. பாடலம்புனைமாதவிபைங்குரா
நீடுதண்டலையெங்குநெருங்கவுந்
தேடிமங்கையர்கொந்தளதேசமேற்
கூடிவண்டுறைகுந்தளதேசமே.

இ-ள். பாதிரிமரமும் - குருக்கத்திமரமும்-பசியகுராமரமும்- நீடியசோலைகள் எங்கும்நெருங்கியிருக்கவும், தேடிவந்து மாதர்க ளுடைய அளகபாரத்தினிடத்தில் வண்டுகள்கூட்டமாகச்சேர்ந்தி ருக்கும்படியான வளப்பத்தையுடையதுகுந்தளதேசம்—எ-று. (உ)

அங்கயங்களுமாறுதடங்களுஞ்
செங்கலங்கல்படுந்தினமானமுந்
துங்கவல்லியர்தோளினுதிர்ந்திடுங்
குங்குமங்களிற்குந்தளதேசமே.

இ-ள். பரிசுத்தமான மாதர்களுடைய தோளில்நின்றும் உதிர்ந் திடுங் குங்குமங்களினால் அழகிய கசங்களும் - ஆறுகளும் - தடா கங்களும்-நாள்தோறுஞ் செஞ்சேறுபடும்படியான வளப்பத்தை யுடையது குந்தளதேசம்—எ-று. (ஙா)

வேறு. அளகைபோலவந்நாட்டிலோர்பதியுளததிலே
வளமையான்மிகுத்தவனொருபெருங்குடிவணிகன்
தளர்விலானரற்கடியவன்பெயர்தனபாலன்
மிளகுவாணிபம்புரிந்ததிற்பெருந்தனம்விளைத்தான்.

இ-ள். அளகாபுரியைப்போல் அந்நாட்டிலொருபதியிருக்கின் றது, அதில்வளப்பத்தினால் மிகுந்த வைசியகுலத்திற்பிறந்த ஒருவர் த்தகனுண்டு, அவனே யாதொருதளர்ச்சியுமில்லாதவனும் பரமசிவ

னுடையதிருவடிக்கு அன்புள்ளவனும் தனபாலனென்னும் பெய ருள்ளவனுமாய் மிளகுவர்த்தகஞ்செய்து அதினால் மிகுந்ததனம் சம்பாதித்தான்—எ-று. (க)

நாற்றிசைக்கணுமவன்பொதிவழங்கிடுநாளிற்
கூற்றுதைத்தவர்காஞ்சிமாநகரியைக்குறித்திட்
டேற்றினத்தின்மேற்பற்பலகறிப்பொதியேற்றி
யாற்றினத்துகள்விரிஞ்சையம்பதியைவந்தடைந்தான்.

இ-ள். அந்தத்தனபாலகன் நாலுதிக்கிலும் மிளகுபொதி அனு ப்பிக்கொண்டிருக்கும்நாளில் கூற்றுவனையுதைத்தருளிய ஏகாம்ப ரநாதர்வீற்றிருக்குங் காஞ்சிபுரத்துக்குப்போகக்குறித்து எருதுக ளின்மேல் அநேக மிளகுபொதியேற்றிப் பாலிநதியில் சங்குகள்த வழும்படியாகிய விரிஞ்சைப்புரத்தில்வந்துசேர்ந்தான். எ-று.(உ)
(நந்து எனற்பாலது - விகாரவகையால் நத்து எனநின்றது.)

கோறலைத்தருங்கொடும்படையெயினர்கள்குழீஇ
யாறலைத்தனரெனச்சிலர்பகர்தலுமஞ்சி
மாறலைத்தெழுங்கருங்கயன்மருங்கயற்கமுகந்
தாறலைத்திடுங்கரபுரிதனினில்வந்திறுத்தான்.

இ-ள். கொல்லுந்தொழிலைச்செய்கின்ற கொடியபடைகளுள்ள வேடர்கள் கூட்டமாய்க்கூடிக்கொண்டு வழியில் அடித்துப்பறித் தார்களென்று சிலர்சொல்லவே பகையாகிய மீன்களைவருத்தியெ ழுகின்ற சேல்மீன்கள் வயல்களுக்குஅருகிலிருக்குங் கமுகங்குலைக ளையலைக்கும்படியான கரபுரியில்வந்து சேர்ந்திருந்தான்—எ-று,

மீண்டுசென்றிடின்முதலிலேபடும்பெருவிலையா
வீண்டுவிற்கிலோமுதலலாதுறியமிலையித்
தூண்டுசெஞ்சுடரிரவியும்புரவியுஞ்சோலைத்
தீண்டுகச்சியும்புகவரிதெனமனந்திகைத்தான்.

இ-ள். திரும்பிப்போய்விட்டால் முதலிலேகுறையும் அதிகவி லையாக இவ்விடத்தில்விற்றாலும் முதலாகுமேயன்றி இலாபமில்லை, தூண்டுசெஞ்சோதியுள்ள சூரியனையும் பச்சைக்குதிரையினையும் சோலைதீண்டும்படியான காஞ்சிபுரத்திற்போய்ச் சேர்வதும் அரி தென்னப் பலபலவகையாக எண்ணினான்—எ-று.

எய்த்துநொந்தவனிறையுவல்கோயின்முன்னெய்தி
யத்தனேதிருவழகுறவாடியவமலா
வைத்தவான்பொதிபறிபடாவகைதுணைவந்தாற்
பத்துவான்பொதியிளகுனதாமெனப்பகர்ந்தான்.

இ-ள். இவ்வாறு எண்ணிவருந்தினவன் பரமசிவம்வீற்றிருக்குந் திருக்கோயிலுக்கெதிரிற்சென்று இறைவனே சிறந்தஅழகுபெற நிருத்தஞ்செய்த அமலனே, நான்கொண்டுவந்துவைத்திருக்கிற பெரியபொதிகள் வேடர்களால் பறிக்கப்படாதவண்ணம் வழித்துணைவந்தால் பத்துப்பிளகுப்பொதி சுவாமிகளுடையதாகுமென்றுசொல்லிப் பிரார்த்தித்தான்—எ-று. (௮)

சொல்லிமீண்டுவந்திருக்கையிலடைந்துகண்டுயின்று
னல்லிலேயவன்கனவிலேயிறையவனணுகி
நல்லவான்றுணைவழிக்குவந்துதவிடுநாளைப்
புல்லமீதினிற்பொதிகளையெடுக்கெனப்போனான்.

இ-ள். இவ்வாறு பிரார்த்தனைசெய்துகொண்டு தன்னிருப்பிடத்திற்சேர்ந்து நித்திரைசெய்தான். அவ்வாறுநித்திரைசெய்யும் இராத்திரியில் பரமசிவம் அவன்சொப்பனத்திலெழுந்தருளி நாளையதினமுனக்கு நல்லவழித்துணைவரும்ஆதலாற் பயமின்றி எருதுகள்மேல் பிளகுப்பொதிகளையேற்றக்கடவையென்று அருளிச்செய்து மறைந்துபோனார்—எ-று. (௯)

மற்றைநாளெழுந்தெருத்தின்மேல்விரிகளைவரிந்து
கற்றைநீள்கயிற்றசைத்துவெண்கவடிகைகட்டி
யற்றநீங்கியேபவுன்பொதியெடுத்திடுமளவி
னெற்றிமேல்விழிமறைத்தரன்வந்துமுன்னின்றான்.

இ-ள். கனவுகண்டவணிகன் மறுநாளெழுந்து எருதுகள்மேல் வரிகளைக்கட்டிக் கற்றையாகிய நீண்டகயிற்றினால் இறுக்கி வெண்பலகறைக்கோவைகள் அலங்கரித்துத் துன்பம்நீங்கி அவன் பொதியெடுக்கும்போது நெற்றிக்கண்ணைமறைத்துப் பரமசிவம் ஒருதுணையாளன்போல்வந்து நின்றருளினர்—எ-று. (௧௦)

வெள்ளைமால்விடைநீலவம்புரவியாய்விளங்கப்
பிள்ளைவான்பிறைக்கேதகைமடலெனப்பிறங்கத்

துள்ளுநீர்த்திரைக்கங்கைமேற்பாகையாய்த்துலங்கப்
புள்ளிமாவுரிப்பட்டுடையாடையாய்ப்பொருந்த.

இ-ள். வெள்ளைரிஷபமானது நீலநிறமுள்ள தாவுகின்ற குதிரை யாய்விளங்கவும், இளந்திங்களானது தாழம்பூமடல்போலவிளங்க வும், துள்ளுகின்ற அலைநீரையுடைய கங்கையானது சிரசின்மேல் பாகையாய்விளங்கவும், புள்ளிமான்றோல் உடையானது பட்டிரு லாகிய ஆடையாய்விளங்கவும்—எ-று. (கக)

அருமணித்தலையரவநீள்குண்டலமாகத்
திருமுகத்திலேநுதல்விழிதிலதமாய்த்திகழ
வொருகரத்தினிற்சூலமோர்குந்தமாயொளிரப்
பொருகளிற்றுரிகஞ்சுகமாகமேற்பொருந்த.

இ-ள். கிடைப்பதற்கரிய மாணிக்கம்பொருந்திய படமுள்ளநா கங்கள் குண்டலங்களாகவும், நெற்றிக்கண்ணானது திருமுகத்தினிட த்தில் திலதப்பொட்டாய்விளங்கவும், ஒப்பற்ற திருக்கரத்திலிருக் கும் சூலமானது வேலாயுதமாகப் பிரகாசிக்கவும், யானைத்தோலா னது சட்டையாய் மேலேவிளங்கவும்—எ-று. (கஉ)

வந்துதோன்றிநாம்வழித்துணையாகவேவருவோம்
சிந்தைநீகளித்தெழுகெனவுரைத்துமுன்சென்று
ரைந்துமாகதியடவிலேநடத்திஞரையந்த
புந்தியான்மகிழ்வணிகனும்பின்வழிபோனன்.

இ-ள். இவ்வாறு பரமசிவம்வந்துதோன்றி உனக்குநாம் வழித் துணையாகவேவருகிறோம் நீமனமகிழ்ந்து புறப்படு என்றுசொல் லித் தாம் ஏறிக்கொண்டிருக்குங் குதிரையைப் பஞ்சகதிக்கிரமத் திலேசெலுத்திஞர். அதைக்கண்டு விரும்பியமனதிஞல் மகிழ்ந்த அந்தவர்த்தகனும் அவருக்குப்பின்ஞக வழிநடந்தான்—எ-று.

கதியைந்தாவன—மல்லகதி - மயூரகதி - வானரகதி - வியாக்கிர கதி - விடபகதி - என்பவை. (கங)

காவதஞ்சிலதடங்களைக்கடந்திடுங்காலை
யாவிலேறியகடவுண்மற்றவன்செயலறிய
மாவைவேறொருநெறியிலேவிலக்கியுண்மறைந்தான்
றேவர்கோன்மறைந்திடுதலுமவனுளந்திகைத்தான்.

இ-ள். சிலகாதவழிசென்றுகடந்தபோது ரிஷபத்திலேறிய பர
மசிவம் அவனுடையசெய்கையை யாவருமறியும்படி குதிரையை
வேறொருவழியில்திருப்பி அங்கேமறைந்தருளினர். பரமசிவம் இ
வ்வாறுமறைந்தவளவில் அந்தவர்த்தகன் மனந்திகைத்தான்—எ-று.

அந்தவெல்லையாறலைப்பவர்பிறப்பிடமதலாற்
றந்தியாளியெண்கடற்புலியளவறச்சரிப்ப
தந்தகாரமுண்மறைசெறியுடையவாரணியங்
கொந்தறுதவணிலங்கிடும்பருதியங்குன்றம்.

இ-ள். அந்தவிடத்தில் வேடர்கள் பிறப்பிடமாயிருப்பதுமன்றி
யானை - சிங்கம் - கரடி - வன்மையுள்ளபுலி - என்னு மிம்மிருகங்
கள்சஞ்சரிப்பதும் அந்தகாரமுள்ளேமறைந்த விருக்ஷங்களினு
டைய நெருக்கமுமுள்ள காட்டினிடத்தில் மலர்க்கொத்துகளை நீங்
காததாகிய பருத்திமலையென்றொரு குன்றம்விளங்கிக்கொண்டிரு
க்கின்றது—எ-று.

பருத்திமலையென்று பெயருண்டாயது இன்னின்னகாரணத்தி
னாலேயென்று ஒருசொல்லுக் கிரண்டுபொருள்படும்படி. (கரு)

பொன்றிடாநெடுங்கலைகளையுதவிடும்பொலிவோ
வன்றியேகதிர்சூழ்ந்திடும்பெருங்குணத்தாலோ
நின்றுவேட்டுவர்பறித்தலினோநெடும்பருத்திக்
குன்றமென்றுபேர்படைத்ததிவ்வனத்திடைக்குன்றம்.

இ-ள். மலையானது - கலைமான்களைத்தருவது, பருத்தியானது-
வஸ்திரங்களைத்தருவது, ஆதலா லிவ்விரண்டுக்கும் பொருள்படும்ப
டிஒழிவில்லாத பெரியகலைகளையுதவிடும்பொலிவினாலேயோ மலை
யானது ரத்தினக்கிரணங்கள்சூழப்படுவது, பருத்தியானது பஞ்சு
நூற்கப்படும் இராட்டினத்திற்பொருந்திய இரும்புக்கம்பியில் சூ
ழப்படுவது ஆதலாலிவ்விரண்டிற்கும் பொருள்படும்படி கதிர்சூ
ழ்ந்திடும் பெருங்குணத்தாலோவென்றும், மலையானது வேடர்க
ளிருந்து அந்தமார்க்கத்தில் நடப்பவர்களுடைய சொத்துகளைப்ப
றிப்பதற்கிடமாயிருப்பது, பருத்தியானது நெய்தற்றொழிலாளிகள்
விரும்பிப்பறிப்பதற்குக் காய்களையுடையது, ஆதலால் இவ்விரண்
டிற்கும் பொருள்படும்படி வேட்டுவர் பறித்தலினோவென்றும்,

அந்தவனத்திலிருக்கும் மலையானது பருத்திக்குன்றமென்று சொல்லும்படி பெயருண்டாயதெனக்கூறினர். உவரென்னுஞ் சுட்டுச்சொல் ஈண்டு - நெய்தற்றொழிலாளிகளையெடுத்துக் கூறநின்றது. இவரென்னுஞ்சொல்-சமீபத்திலிருப்பவர்களையும், அவரென்பது-அப்புறத்திலிருப்பவர்களையும், உவரென்பது-அதினும் அப்புறத்திலிருப்பவர்களையுங் குறித்துச்சொல்லுகின்ற சுட்டுச்சொற்கள். பருத்திக்குன்றென்பது இயற்கைப்பெயராயிருப்பினும் அதற்குக்காரணங் கற்பித்துக்கூறுவது கவிசாதுரியமென்றுணர்க. மேல் இன்னமொருவகைப்படுத்திக் கூறுகின்றார்—எ-று. (௧௬)

அலகிலாதவெண்மஞ்சுவந்தடைதலினாலும்
விலகிடாதுபன்மலர்களும்விரிதலினாலும்
பலவிதம்படுமுத்தினத்தாலும்வெண்பருத்தி
மலையைநேரெனவிளங்கிடும்பருத்திமால்வரையே.

இ-ள். அந்தமலையின்மேல் அளவில்லாதவைகளாய் வெண்மைநிறமுள்ள பனிகள்வந்துசூழ்வதினாலும், வெண்மைநிறமுள்ள பல மலர்கள் எப்போதும் மலர்ந்திருப்பதினாலும், பலவிதமுத்துகள் பொருந்தியிருப்பதினாலும் பருத்திக்குன்றமானது வெண்மைநிறமுள்ள பருத்திப்பஞ்சுப் பொதியினையொத்திருப்பது—எ-று.

அம்மலை பருத்திக்குன்றமெனப் பெயர்பெற்றிருப்பதுமன்றி பனிகள்சூழ்ந்திருப்பதினாலும், வெண்மலர்கள் மலர்ந்திருப்பதினாலும், முத்துகள்பொருந்தியிருப்பதினாலும், பஞ்சுப்பொதியினையொத்திருக்கின்றதென்றுங் கூறினர். பலவிதமுத்தாவது—யானைத்தந்தமுத்துகளும் - மூங்கில்முத்துகளும் - பன்றிக்கோட்டுமுத்துகளுமாம். (௧௭)

இடியிடித்துவிற்கொடுதுளியிறைத்துவிண்ணெழிலி
யடிவரைப்புறத்ததிர்த்திடுஞ்செயலெனவதிர்த்துக்
கொடியவிற்கொடுகணைகளைச்சிதறியக்குவட்டிற்
செடிகளிற்செறிவனசார்செறிந்தனர்சினத்து.

இ-ள் மேகமானது இடியிடித்து இந்திரதனுவைக்கொண்டு மழைத்துளிகளையிறைத்து மலைச்சாரலின்புறத்தில் குமுறுகின்ற செய்கைபோல் அந்தமலையிலிருக்குங் காட்டுமரங்களிற் பதுங்கி

யிருக்கும் வேடர்கள் கொடியனுகளான விற்களைப்பற்றிக்கொண்டும் பாணங்களைச்சிதறிக்கொண்டும் கோபங்கொண்டு ஆரவாரத்துடன்வந்து அந்தவர்த்தகனைச்சூழ்ந்துகொண்டார்கள்—எ-று.(கஅ)

மடித்தவாயினர்நெடியமுண்மரமெனமயிராற்
பொடித்தமேனியரசைத்திடுங்கச்சையர்பொருந்தப்
பிடித்தஞாளியர்செருப்பினரிருட்பெரும்பிழம்பே
குடித்தபோற்கருநிறத்தினர்நமனினுங்கொடியோர்.

இ-ள். அந்தவேடர்கள் மடித்தவாயினையுடையவர்களும், நீண்ட முட்களையுடைய மரங்கள்போல மயிர்கள்பொடித்த சரீரத்தையுடையவர்களும், அரையிலிறுக்கிக்கட்டிய கச்சையுடையவர்களும், பலவிடங்களி லோடாமலிருக்கும்படி பிடித்துக்கொண்டிருக்கும் நாய்களையுடையவர்களும்,கால்களில்செருப்பினையுடையவர்களும், பெரிய இருட்கூட்டமே விழுங்கினதுபோன்ற நிறத்தையுடையவர்களும், கூற்றுவனினும் கொடியவர்களுமாய்—எ-று. (கக)

கொம்புகாகளஞ்சிறுகணூர்துளைவளைகுறித்துப்
பம்பைபேரிகைபகைத்துடிமுழக்கியார்ப்பரித்து
வெம்புஞாளியைச்சங்கிலித்தொடரினும்விடுத்தே
யம்புராசிபோல்வளைதடியெறிந்துவந்தடர்த்தார்.

இ-ள். ஊதுகொம்புகள்-எக்காளங்கள்-சிறியகண்ணுள்ளதுளைபொருந்திய சங்குகள் என்னுமிவைகளை யூதிக்கொண்டும், பம்பை-பேரிகை-துடியென்னுமிவைகளை முழக்கிக்கொண்டும், ஆரவாரித்து உறுமுகின்றநாய்களைச் சங்கிலிக்கயிறுகளினின்றும்விடுவித்து எழுசமுத்திரங்கள்போல வளைதடிகளையெறிந்தும்வந்துசூழ்ந்தார்கள்.

பூழிகண்களிலிறைத்தனருரத்தினிற்புடைத்தார்
தாழும்வன்கொடிகொண்டவன்புயங்களைத்தளைந்தார்
பாழியாலவன்றனங்களையனைத்தையும்பறித்தா
ரூழிகாலமென்றயிர்த்தனரவ்விடையுறைவோர்.

இ-ள். இவ்வாறுவந்தவேடர்கள் அவன்கண்களில் புழுதியையிறைத்தும்,மார்பிலடித்தும், அங்கிருக்கும் வலியகொடிகளால் அவன்புசங்களைக்கட்டியும், தங்கள்பலத்தினால் அவன் தனங்களையெல்லாம் பறித்துக்கொண்டார்கள். அங்கிருந்திதைக்கண்டவர்கள் ஊழிகாலமோ இதுவெனச் சந்தேகித்தார்கள்—எ-று. (உக)

மருத்துப்போலவேயோடினர்விடையுடன்வந்தோர்
விரைத்துத்தள்ளியவிடைகளுங்வெருண்டுவெற்பேற
வெருத்துக்குன்றமாமெனப்படும்பொதிகள்வீழ்ந்திடலாற்
பருத்திக்குன்றும்போய்ப்பொதியமாமலையெனப்படுமால்.

இ-ள். அப்போது பொதியெருதுடன்வந்த ஆள்களெல்லாரும் வாயுவேகமாக ஓடிப்போய்விட்டார்கள். விரைந்து பொதிகளைத்தள்ளிவிட்ட எருதுகளும்பயந்து மலையின்மேலேறுதலால் அந்தப் பருத்திமலை யெருதுமலையென்றுசொல்லும்படி விளங்கியது, அன்றியும் பொதிகளானவை அங்குவீழ்ந்தமையால் பருத்திக்குன்றமென்பதுமாறிபெரியபொதியமலையென்றுஞ்சொல்லும்படியாயது.

அனையகாலையிற்பெருந்தனபாலனுமயர்ந்து
நினைவுதோன்றியபின்புதென்விரிஞ்சையினிமலா
கனவினீயெழுந்தருளியகருணையைக்கண்டு
வனமதாகுமிச்சுரத்திலேதமியனும்வந்தேன்.

இ-ள். அவ்வாறு வேடர்கள்வந்து பறித்துக்கொண்டகாலத்தில் தனபாலனென்னும்வணிகனுஞ்சோர்வடைந்து நினைவுவந்தபின்பு விரிஞ்சைப்புரத்துவீற்றிருக்கும் நிர்மலனே, அடியேன்சொப்பனத்தில் தேவரீரெழுந்தருளியகிருபையைக்கண்டு வனமாகிய இந்த அருநெறியில் தனியனாகிய நானும்வந்தேன்—எ-று. (௨௩)

தூயவாசிமேன்முன்னமேதுணைவருந்தோன்றல்
மாயமாயிடைச்சுரத்திலேதடித்தெனமறைந்தா
னாயிரம்பொதிமுளகுடன்விடைகளுமகன்ற
நீயிரங்குவாயினியெனவணிகனுநினைந்தான்.

இ-ள். பரிசுத்தமுள்ள குதிரைமேல் துணையாகவந்த ஒருமகாபுருஷன் இந்தநடுக்காட்டில் மின்னல்போல மாயமாய்மறைந்தான். அவன்மறைந்தவளவில் ஆயிரம்பொதி மிளகுகளும் எருதுகளும் போய்விட்டன. சுவாமீ திருவுளமிரங்கி யருள்செய்யவேண்டுமென்று தியானஞ்செய்தான்—எ-று. (௨௪)

பருத்திமால்வரைமருங்கினிற்பதுக்கையிற்பறித்தோ
ரொருத்தரான்றியேயகப்படப்பிடித்தவருடனே

பெருத்தின்மேற்கறிப்பொதிகளுமெடுத்தூர்ந்திறைபோன்
மருத்துவேகமாம்பரியின்மேலவனெதிர்வந்தான்.

இ-ள். வணிகனிவ்வாறு தியானஞ்செய்தவளவில் பரமசிவந்திருவுளமிரங்கி அந்தப் பருத்திமலைச்சாரலிலிருக்குஞ் சிறுதூறுகளில்வந்து பறித்துக்கொண்டுபோன வேடர்கள் ஒருவருந்தப்பாமல் அகப்படும்படி பிடித்துக்கொண்டு அவர்களுடனே எருதுகளின்மேல் மிளகுபொதிகளும் ஏற்றிக்கொண்டு வாயுவேகமுள்ள குதிரையின்மேல் ரூபம்போலத் தாமுமேறிக்கொண்டு அந்தவர்த்தகனெதிரில் வந்தருளினர்—எ-று. (௨௫)

கண்டுவாணிபன்கறிப்பொதியனைத்தையுங்களிப்புட்
கொண்டுவாசிமேலவன்றனக்கினியனகூறி
பண்டுபோனெறிபடர்ந்தனனவன்றனைப்பார்த்துத்
தண்டநீபுரியெயினரையெனச்சொன்னான்றலைவன்.

இ-ள். அப்போது வணிகன் மிளகுபொதிகளையெல்லாங்கண்டு உள்ளத்தில் மகிழ்ச்சிகொண்டு குதிரையின்மேலிருப்பவருக்கு உபசாரவார்த்தைசொல்லி முன்போல் வழிநடந்தனன். அவனவ்வாறு நடக்கும்போது பரமசிவம் அவனைப்பார்த்து இந்தவேடரையெல்லாம் நீதண்டனைசெய்யென்று திருவாய்மலர்ந்தருளினர்—எ-று.

வெற்றிவாசிமேல்வீரனிப்படியெலாம்விளம்ப
வுற்றகள்வரைப்பிணிகளாய்நிறுத்தலுமொருங்கே
பற்றியேதனபாலனுங்குறிக்கொடுபார்த்தா
னெற்றிமேலவரவர்க்கெலாமிருந்ததுநீறு.

இ-ள். செயமுள்ள குதிரையின்மேலிருக்கும் வீரனிவ்வாறெல்லாஞ்சொல்லி வந்திருந்ததிருடர்களைக் கட்டினகட்டுடன் வரிசையாகநிறுத்தினபோது தனபாலனென்னும்வர்த்தகனும்அவர்களைப் பற்றிக்கொண்டு குறிப்பாகப்பார்த்தான். அப்படிபார்க்கும்போது அவர்களுடையநெற்றிகளிலெல்லாம்விபூதியிருந்தது—எ-று.(௨௭)

ஈசனார்திருமேனியாயவர்களையெண்ணிப்
பாசமாகியதளையவர்புயத்திலும்பரிந்திட்
டாசினன்பொருடனித்தனியவர்க்கெலாமளித்து
வாசிமேலவன்பின்வழிநடந்தனன்வணிகன்.

இ-ள். அவர்கள்நெற்றியில் விபூதியிருக்கக்கண்டவளவில் பரம சிவத்தின்திருமேனியாக அவர்களைநினைத்து அவர்கள்புசங்களில் கட்டியிருந்த கயிறுகளை அவிழ்த்துவிட்டு அவர்களுக்கெல்லாந் தனித்தனியே குற்றமில்லாத நல்லபொருளைக்கொடுத்து அந்தவணிகன் குதிரையின்மேலிருப்பவர்பின்னே வழிநடந்தான்—எ-று.

அம்புராசிசூழ்புவிக்கெலாமறம்வளர்த்தருளு
மும்பர்நாயகிமுதன்மையாற்சமயமாறுடையாள்
கும்பவார்முலைமுகட்டினாற்றிருப்புயங்குழைத்த
கம்பவாணர்வாழ்காஞ்சிமாநகரியைக்கண்டான்.

இ-ள். அப்படிவழிநடந்தவன் சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்துயிர்களுக்கெல்லாம் அறம்வளர்த்தருளிய தேவர்களுக்கெல்லாந்தலைவியும், ஆறுசமயங்களுக்கு முதன்மையானவளுமாகிய காமாக்ஷியம்மை தன்னுடைய பொற்கும்பம்போன்று கச்சணிந்திருக்குந் திருத்தனபாரங்களால் திருப்புயங்களைக்குழைவித்த ஏகாம்பரநாதர் வீற்றிருக்குங் காஞ்சிபுரத்தைக்கண்டான்—எ-று. (௨௯)

காவணங்களுங்கனககோபுரங்களுங்கண்டான்
பூவணங்குவாழ்ஹர்மியநிரைகளைப்புகழ்ந்தான்
தீவணன்றிருக்கோயிலையணுகுறான்சென்றோ
ராவணம்புகுந்தொருதனிமண்டபத்தணைந்தான்.

இ-ள். பந்தல்களும் பொன்னாலாகிய கோபுரங்களுங்கண்டான், திருமகள்வாசஞ்செய்யும் நிலாமுற்றங்களையுங் கண்டுபுகழ்ந்தான். இப்படிப்புகழ்ந்தவன் தீவண்ணனாகிய ஏகாம்பரநாதர்வீற்றிருந்தருளுந் திருக்கோயிலுக்குள் சென்றுதொழாமல் கடைவீதியிலிருக்கும் ஒருமண்டபத்தில்போய்ச் சேர்ந்தான்—எ-று. (௩௦)

வேறு. தாமணியறந்துபுல்லப்பொதியெலாந்தள்ளித்துள்ளுஞ்
சேமணிகளைந்துகண்டாவரணமுஞ்சிகையுநீக்கி
* யாமணிநிரையாவூட்டிப்பிணித்துணவாரம்புற்பெய்து
தேமணியலங்கலானுங் ○ கலைக்குடிலிடத்திற்சேர்ந்தான்.

இ-ள். தாமணியடித்து எருதுகளின்மேலிருக்கும் பொதிகளை யெல்லாங் கீழேதள்ளியடுக்கிட்டுத் துள்ளுகின்ற எருதுகளுக்குக் கட்டியிருக்கும் பெரியமணிகளையும், வரிசையாகக் கோத்துக்

கழுத்திற்கட்டியிருக்குமணிகளையும், கொம்புகளிற்கட்டியிருக்கும் சிகைமயிரினையும்நீக்கி,வரிசைவரிசையாக நீரூட்டிக்கட்டி உண்ணு தற்கு நல்லபுல்லும்போட்டு வாசனைபொருந்திய மாலையணிந்துள்ள அந்தவர்த்தகனும் கூடாரத்திற்சேர்ந்தான்—எ-று.

* ஆம்ஸ்பது - நீர். ○ கலைக்குடில் - நூலாடையாலாகியவீடு, அது கூடாரமென்று சொல்லப்படுகின்றது. (௩௧)

அத்தனு மொழிவானன்பாம்வணிகனே நமக்குள்ளூரி
லெத்தனை கருமமுண்டாயிருந்துமுன் றனிமையெண்ணி
யித்தனை தூரம்வந்தேமே குதுமறவேனம்மைச்
சத்தியமுணர்ந்தோர்மார்க்கசகாயனென் றுரைக்கும்பேரே.

இ-ள். பின்பு பரமசிவம் அந்தவணிகனைப்பார்த்துச் சொல்லுகின்றார். அன்பனாகியவணிகனே,நமக்குள்ளூரிலெத்தனைகாரியமுண்டாயிருந்தும் நீ தனிபாகச்செல்லுகின்றாயென்பதைக்கருதி இவ்வளவுதூரம்வந்தோம் இனிநம்மூருக்குப்போகிறோம் நீநம்மைமறந்துவிடாதே உண்மையுணர்ந்தவர்கள் நமக்கு மார்க்கசகாயனென்று பெயர்சொல்லுவார்கள்—எ-று. (௩௨)

செட்டியுந்துணையாய்வந்தசேவகனகன் றபின்னர்க்
கிட்டியவினைஞர்க்கெல்லாமவன்பெருங்கேண்மைசொல்லிக்
கொட்டினன்மரீசமெல்லாங்குளிரவிட்டளந்துவிற்றுக்
கட்டினன்மறுபைதன்னின்மறுவிலாக்கனகராசி.

இ-ள். அந்தவர்த்தகன் தனக்குத்துணையாகவந்த வீரனாகியபரமசிவம்போய்விட்டபின் தன்னைச்சேர்ந்திருக்கிற தொழிலாளிகளுக்கெல்லாம் நண்பானவார்த்தைசொல்லி மிளகுகளையெல்லாங்கொட்டி நிறைமரக்காலையிட்டளந்து விற்று அந்தவிலைப்பொருளை வேறுபைகளிற்கட்டினன்—எ-று. (௩௩)

நெற்றிரள்விலைப்போங்காலம்பதடியும்விலையாநேர்போ
லுற்றனமிளகுசீரும்பதருமொன்றொழியாவண்ணம்
விற்றிடுங்களிப்பினாலேவிரிஞ்சையிற்பாவிக்கொண்ட
புற்றரவணிந்தார்க்கென் றபொதிகளும்போக்கினானே.

இ-ள். நெல்லம்பாரம் விலைபோங்காலத்தில் பதர்களும் விலையாகுமுறைமைபோல பொருந்திய நல்லமிளகுகளும் பதராயிருக்கு

மிளகுகளுங் கொஞ்சமும் ஒழியாவண்ணம் விற்குங்களிப்பினாலே சர்ப்பாபரணமணிந்த மார்க்கசகாயருக்கென்று விரிஞ்சைபுரத் தில்பிரார்த்தித்த பெரியபொதிகளையும் விற்றுவிட்டான்—எ-று.

மாலையின்மரீசங்கொண்டவணிகர்தம்மனையிற்பெய்து
காலையிலெழுந்துபார்த்தார்கனவியபயறதாகச்
சாலவேயிருந்ததந்தவணிகனைத்தடுத்தார்சென்றுன்
வேலைநன்றெமக்குச்செய்தவிரகுநன்றெனவுஞ்சொன்னார்.

இ-ள். அந்திப்பொழுதில் மிளகுவாங்கிக்கொண்டுபோன வர்த்தகர்கள் தங்கள்வீட்டில்வந்து மிளகுகளைக்கொட்டிப் பொழுது விடிந்தபின்புபார்க்குமளவில் அவை பெரியபயறுகளாயிருந்தன. அவ்வாறிருக்கவே அவர்களெல்லாருஞ்சென்று தனபாலனென்னுஞ்செட்டியைமறித்து உன்செய்கையும் அழகாயிருக்கின்றது நீ யெங்களுக்குச்செய்த உபாயமும் அழகாயிருக்கின்றதென்றுசொன்னார்கள்—எ-று. (௩௫)

வேறு. நன்றுநன்றுநின்வாணிபமெனச்சிலர்நகைத்தார்
சென்றுசென்றவன்கலைகளைப்பிடித்தனர்சிலபேர்
மன்றிலேறிநின்வழக்கினையுரைத்திடவருவா
யென்றுகூறினார்சிலர்சிலர்கரம்பிடித்தீர்த்தார்.

இ-ள். உன்னுடையவர்த்தகம் அழகாயிருக்கின்றது அழகாயிருக்கின்றதென்று சிலர்நகைத்தார்கள். சிலபேர் தனித்தனியாகப்போயவன்வஸ்திரத்தைப் பிடித்துக்கொண்டார்கள். சிலர் பொதுவாரிடத்திற்போய் உன்னுடையவழக்கினைச்சொல்லுதற்கு வாவென்று சொல்லினர். சிலபேர் அவன்கையைப்பிடித்திழுத்தார்கள்—எ-று.

வேறு. கள்ளமாய்மிளகுகாட்டிக்கடலையும்பயறுந்தந்தா
யள்ளிவந்தனம்பாரின்னமரைக்கணஞ்சென்றாலெல்லா
யெள்ளுமாய்மணலுமாகுமெனச்சொன்னார்வணிகனையுற்
றுள்ளமுநடுங்கியென்னமாயமென்றுணர்ச்சியானான்.

இ-ள். திருட்டுத்தனமாய் மிளகுகாட்டிக் கடலையும்பயறுங்கொடுத்தாய் இதோ அள்ளிக்கொண்டுவந்தோம்பார், இன்னம் அரைக்ஷணஞ்சென்றால் நெல்லாகியும் - எள்ளாகியும் - மணலுமாகுமென்றுசொன்னார்கள். அதைக்கண்ட தனபாலன் சந்தேகித்து மனமும் நடுங்கி இதென்னமாயமென்று எண்ணமிடலானான்—எ-று. (௩௭)

மதியிலாவணிகன்றானும்வழித்துணையிறைவற்கென்,
பொதிகளைமறந்துவிற்றவினையினாற்பொருந்திற்றிந்த
வதிசயமிகவென்றெண்ணியதிகமோர்பொதியுங்கூட்டிப்
பதின்றொருபொதியுமீவேனிறைக்கெனப்பராவிக்கொண்டான்.

இ-ள். விவேகமில்லாத அந்தவர்த்தகனும் சற்றுநேரம்ஆலோசித்து மார்க்கசகாயருக்கென்று பிரார்த்தனைசெய்தபொதிகளையும் மறந்துவிற்றகுற்றத்தினால் இந்தவிபரீதஞ் சம்பவித்ததென்றெண்ணி அதிகமாக ஒருபொதியுங்கூட்டிப் பதின்றொருபொதியாக மார்க்கசகாயருக்குக் கொடுக்கிறேனென்று பிரார்த்தனைசெய்துகொண்டான்—எ-று. (௬௮)

மனைகளிற்பயறுமுன்னமிருந்திடுமரீசமெல்லாங்
கனவெனுஞ்சீருமாகியிருப்பதுகண்டார்கண்ட
வனைவரும்வியந்துபோனார்வணிகனுமச்சந்தீர்ந்தான்
வினவியவவன்கனாவின்மேவினான்விரிஞ்சைநாதன்.

இ-ள். அவன் பிரார்த்தனைசெய்துகொண்டவளவில் இதுதெரியாத அந்தவர்த்தகர்கள் தங்கள்வீடுகளில் முன்னம் பயறாயிருந்த மிளகுகளெல்லாம் கனவுகண்டதன்மைபோலாய் பழையபடி மிளகாயிருப்பதுகண்டு அதிசயமடைந்து அவனுக்குபசாரஞ்சொல்லிச்சென்றார்கள். பின்பு தனபாலனென்னும்வணிகனும் பயம்நீங்கினான். முன்பிரார்த்தனைசெய்த அந்தவணிகன் கனவில் மார்க்கசகாயரெழுந்தருளினர்—எ-று. (௬௯)

பராவியபொதிகளுக்குப்பதின்றொருபொதிகடந்;
புராதனவணிகாவந்தப்பொதிகளைவிதியினாலே
யராவணிசடையானன்பர்க்களித்திடென்றருளிப்போனா
னிராமயனுரைத்தவாறேயளித்தனனிதிக்குநாதன்.

இ-ள். எழுந்தருளிய சுவாமியானவர் அவனைநோக்கி முன்பிரார்த்தனைசெய்த பத்துப்பொதிகளுக்குப் பதின்றொருபொதியாகக் கொடுத்த பழமையான அன்புள்ளவணிகனே, அந்தப்பொதிகளையெல்லாம் சர்ப்பங்களையணிந்த சடைமுடியையுடைய பரமசிவனடியார்களுக்குக் கிரமமாகக்கொடு என்றருளிச்செய்துபோனார்.

பரமசிவம் அருளிச்செய்தமுறைமைப்படி அந்தத் தனபாலனென்னும் வர்த்தகனுங்கொடுத்தான் —எ-று. (௪௦)

(நிராமயனென்பது - இயல்பாகவே நோயில்லாதவன்.)

குஞ்சரவுரியானம்பர்க்கருளியகுலைகளெல்லா
நஞ்சுமிழெயிற்றுப்பேழ்வாய்நாகநன்மணிகளான
மஞ்சிகன்வழிக்குவைத்தமரீசமுமணிகளான
நெஞ்சிறுவலையுற்றுனார்புகநினைவுடாலுவ.

இ-ள். யானைத்தோல்போர்த்தருளிய பரமசிவத்தின் அடியார்களுக்குக்கொடுத்த மிளகுகளெல்லாம் விஷத்தைக்கக்குகிற பற்கள் பொருநதிய பெரியவாயையுடைய நாகரத்தினங்களாயின. அந்த வர்த்தகன்மார்க்கத்தில் விற்கவைத்த மிளகுகளும் நாகரத்தினங்களாயின. அதைக்கண்டு வர்த்தகன்மகிழ்ச்சியுற்று ஊருக்குச்செல்ல எண்ணங்கொண்டான் —எ-று. (௪௧)

மச்சிகனெழுந்துகம்பவாணனைத்தொழுதுபோற்றிக்
கச்சியம்பிகையைவாழ்த்திப்பாலியைக்கண்டுவண்டு
குச்சரிமுழக்குங்காவும்வாவியுங்குளனுநோக்கிப்
பச்சிமநெறியாற்சென்றுவிரிஞ்சையம்பதியிற்சேர்ந்தான்.

இ-ள். அந்தவர்த்தகனெழுந்து ஏகாம்பரநாதனைத்தொழுது துதி செய்து காமாக்ஷியம்மையினையும் போற்றிசெய்து அவ்விடம்விட்டுப்போய்ப் பாலிநதியைக்கண்டு வண்டுகளிசைபாடிக்கொண்டிரா நின்ற சோலையுந் தடாகமுங் குளமுங்கண்டு மேற்றிசைவழியாற் சென்று விரிஞ்சைப்புரத்தில்சேர்ந்தான்—எ-று. (௪௨)

வேறு. அத்தலத்திடையணுகியாலயத்தினில்வந்தா
னித்தமுத்தனைநிமலனையானந்தநிதியைக்
கைத்தலத்தினிற்கனகமேகருணையங்கடலே
சுத்ததத்துவமுடிவனேயெனச்சொலித்தொழுதான்.

இ-ள். அந்தத்தலத்திற்சேர்ந்து திருக்கோயிலிற்சென்று நித்தியனைமுத்தனை நிமலனை ஆனந்தநிலையைத்தரிசித்து அடியார்களுக்கு கையிற்பொருத்திய நிதியமே கிருபாசமுத்திரமே சுத்ததத்துவமுடிவிலிருக்குங் கடவுளேயென்று துதிசெய்து பணிந்தான்-எ-று.

ஊதியப்பொருளனைத்தையும்பகிர்ந்தாற்குதவிக்
காதலித்தயல்பேர்பெறுந்திருக்குளக்கரையிற்
போதகப்புகர்முகச்சிறுவிழிப்பெரும்புழைக்கைச்
சோதியைப்பதிதலைமைத்தனன்றிணைப்பெயர்சூட்டி.

இ-ள். தனக்குக்கிடைத்த இலாபப்பொருளையெல்லாம்பங்கிட்டு மார்க்கசகாயருக்குவழங்கிப் பிரமதீர்த்தக்கரையில் யானைமுகமும் சிறியகண்ணும் பெரியதுதிக்கையுமுடைய விநாயகரை ஆலயேற் றுவிநாயகரெனத் திருப்பெயருந்தரித்துத் தாபனஞ்செய்து பூசித்தான்—எ-று. (சச)

தன்பதிக்கணேசேர்ந்துதன்கிளைஞருந்தானு
மின்பமுற்றரும்பொருளுடன்பெரும்பொருளெய்தி
மன்பதைக்கெலாம்விழித்துணைவழித்துணைமருந்தற்
கன்புமுற்றியநலத்தினாற்சிவபதமடைந்தான்.

இ-ள். பின்பு தன்பதியிற்சென்று அங்கிருக்குஞ் சுற்றத்தாருந் தானும் இன்பமடைந்து இப்போதுகிடைத்துள்ள அரும்பொருளுடன் மேலானபொருளையுமடைந்து நிலையாகிய ஆத்துமகோடிகளுக்கெல்லாம் விழித்துணைபோன்ற வழித்துணைமருந்தருக்கு அன்புமுதிர்ந்த நன்மையினால் முத்தியடைந்தான்—எ-று. (சரு)

மாவளவெனினுஞ்செம்பொன்வழித்துணையமலற்கீந்தோர்
பூவளவன்றியந்தப்பொன்னுலகனைத்துங்காத்து
மேவருமணிக்காற்செம்பொன்விமானமேல்விடைகடாங்கத்
தேவர்கண்முனிவர்வாழ்த்தச்சிவபதம்புகுவரன்றே.

இ-ள். ஒருமாவளவுபொன்னாவது மார்க்கசகாயர் திருப்பணியின்பொருட்டுக் கொடுப்பவர்கள் அரசர்களாய் இந்தப்பூலோகத்தைக்காக்குமளவேயன்றித் தேவேந்திரனாகி அந்தப்பொன்னுலகத்தையெல்லாங்காத்து ரத்தினக்கால்கள்பொருந்திய பொன்விமானத்தின்மேல் விடைகள்தாங்கத்தக்கதாக தேவரும் முனிவரும்வாழ்த்தச் சிவபதஞ்சேர்வார்கள்—எ-று. (சசு)

இருங்கலையணியத்தந்தோரிழைக்[illegible]
மருங்கலைமறையோன்றெய்வவுலகினுக்கரசராவர்

நெருங்கலைகொடுத்தகாசுநித்திலமணியீந்தோர்கள்
கருங்கலையுரியான்போலக்கயிலையிலிருப்பர்கண்டீர்.

இ-ள். மார்க்கசகாயருக்குசாத்தும்படி ஒருவஸ்திரமாவது நல்லதாகக்கொடுத்தவர்கள் இழைக்கொருபிரமகற்பகாலம் அரியவேதசாஸ்திரங்களைபுணர்ந்த பிரமதேவனுடைய உலகத்துக்கு அரசாவர்கள். நெருங்கிய சமுத்திரத்தின் அலைகளாற்கொடுக்கப்பட்ட முத்துவடமுதலிய மணிகளையணிவித்தவர்கள் கருமான்றோலாடையினையுடைய பரமசிவத்தைப்போலச்சாரூபம்பெற்றுக் கயிலையங்கிரியில்வீற்றிருப்பார்கள்—எ-று. (௬௭)

வழித்துணைச்சருக்கமுற்றியது.

ஆ திருவிருத்தம்-உ௧௧.

---

## பரலோகச்சருக்கம்.

ஒருகதையுரைப்போமின்னமுலகினிற்றிலதமானோன்
திருமறைதெளிந்தசாவித்திரனெனுமொருவன்மிக்க
தருமமுந்தவமுமுள்ளோன்சங்கரன்பதவிவேண்டி
யருமணிகொழித்ததூய்நீராடுவான்போயினானே.

இ-ள். இன்னமும்நாம் ஒருகதைசொல்லுகிறோம் அதாவது இவ்வுலகத்தில் திலதம்போலச்சிறந்துள்ளவனும் பெருமையுள்ளவேதங்களையோதியுணர்ந்த சாவித்திரனென்னும் பெயருமுடையவனாகிய ஒருபிராமணன் மிகுந்ததருமமுந் தவமுமுள்ளவனாகிச் சிவபதத்தைவிரும்பி அரியமணிகளைக்கொழிக்கும் பரிசுத்தமானதீர்த்தங்களில் ஸ்நாநஞ்செய்ய யாத்திரையாகப்போனான்—எ-று. (௧)

பொன்னியிற்படிந்துதெய்வக்குமரியிற்புகுந்துபோந்து
கன்னியிற்றுளைந்துகர்னவேணியிற்றிளைத்துச்செம்புப்
பன்னியிற்குளித்துச்சோணபத்திரையடைந்துகாசி
மன்னியநதியின்மூழ்கிக்கரபுரிமருங்கிற்சேர்ந்தான்.

இ-ள். யாத்திரையாகச்சென்றவன் காவிரியில்ஸ்நாநஞ்செய்தும், தெய்வத்தன்மையுள்ள குமரிநதியிலும்ஸ்நாநஞ்செய்து, அங்கிருந்துசென்று கன்னிநதியிலும் ஸ்நாநஞ்செய்து, கர்னவேணியிலும் ஸ்நாநஞ்செய்து, தாம்பிரபரணியில் ஸ்நாநஞ்செய்தும்,

சோணபத்திநாயில் ஸ்நாநஞ்செய்தும், கங்கையில் ஸ்நாநஞ்செய் தும்செல்லுகின்றவன் காபுரியென்னும் விரிஞ்சைப்பதியருகி சேர்ந்தான்—எ-று. (௨

பரவியபலத்தினாலேபாலியாறடைந்துமூழ்கி
மரகதக்கொடியைநீங்காவழித்துணைமருந்தைப்போற்றி
யிருகரைமருங்கிற்சென்றான்யாகமண்டபமும்வேள்வி
புரிபவரொலியுமத்தப்புகைகளும்பொலிந்ததன்றே.

இ-ள். இந்தநதிகளிலெல்லாம் ஸ்நாநஞ்செய்தபலத்தினாலே பா(லி) விநதியில் ஸ்நாநஞ்செய்(து), மரகதவல்லித்தாயைப்பிரியாத வழித்துணைநாதரைப் போற்றிசெய்து இரண்டுகரைப்பக்கத்திலுஞ்சென்றான். அங்கே வேள்விமண்டபமும் வேள்விசெய்கின்றவர்களுடைய வேதஓசையும் ஓமப்புகையும்பொலிந்திருந்தன—எ-று. (௩)

ஆரணமுழக்கமோர்பாலஞ்சுமான்படிப்பதோர்பாற்
காரணம்விதிப்பதோர்பாற்காமிகமுழக்கமோர்பால்
வீரதந்திரங்களோர்பால்வாதுளம்விதிப்பதோர்பாற்
கிரணமிகுதியோர்பாற்சிவபுராணங்களோர்பால்.

இ-ள். வேதவோசை யொருபுறத்திலும், அஞ்சுமானென்னும் ஆகமம்சொல்லுவதொருபுறத்திலும், காரணஆகமம்விதிப்பதொருபுறத்திலும், காமிகஆகமம்வாசிப்ப தொருபுறத்திலும், வீராகமம்வாசிப்ப தொருபுறத்திலும், வாதுளாகமம்வாசிப்ப தொருபுறத்திலும், கிரணம்என்னும் ஆகமம்வாசிக்குமிகுதி யொருபுறத்திலும், சிவபுராணம்வாசிப்ப தொருபுறத்திலுமாகவிளங்குகின்றது.

அந்தவெல்லையின்மருங்கிலேதனதடியவர்க்கு
முந்துமாகதேசிகனெனுமொருமுனிவ
னெந்தையாருறைகயிலையின்பெருநலமிசைத்தான்
வந்திறைஞ்சியக்கதையெலாங்கேட்டனன்மறையோன்.

இ-ள். அந்தவிடத்திலொருபுறத்தில் முதன்மையான ஆகமதேசிகனென்கிறவொருமுனிவர் தன்னுடையசிஷர்களுக்குப் பரமசிவம் வீற்றிருக்குங் கயிலாயகிரியின்சிறப்புகளைச் சொல்லிக்கொண்டிருந்தனர். சாவித்திரனென்னும் பிராமணன் அங்குவந்து அந்தச்சரித்திரத்தையெல்லாங்கேட்டனன்—எ-று. (௪)

வேறு. நீறுடம்பினில்வெழுக்கண்களி
லாறிரண்டுசொரிதருமன்பர்போ
லூறுகின்றவருவியொழிவரு
வீறுவெள்ளிவிலங்கல்விளங்குமே.

இ-ள். விபூதியானது சரீரத்தில்பிரகாசிக்க இரண்டுகண்களிலுமிருந்து இரண்டுநதிபெருகுதல்போல ஆனந்தபாஷ்பம்பொழிகின்ற அடியார்கள்போல—சுரந்துகொண்டிருக்கிற அருவியொழியாமல்விழுகின்ற வெள்ளிமலையாகிய கயிலையங்கிரிவிளங்கிக்கொண்டிருக்கின்றது—எ-று. (௭)

வேறு. பன்னகாதிபர்முடிமணியிழைத்தசோபான
மன்னும்வானவர்விஞ்சையர்நெருங்கலின்மகுடப்
பொன்னுமாரமுநீலமுமுதிர்ந்திடும்பொடியா
லன்னிதாநிறம்படைத்ததுபெருங்கயிலாயம்.

இ-ள். நாகராசர்களுடைய சிரசுகளிலிருக்கும் மா........ வியற்றப்பட்டிருக்கு ...களில் தேவர்களும்-வித்தியாதரர்களும் நெருங்கிச்செல்லும்போது பொன்னும்-முத்தும்-நீலரத்தினமும்- உதிருகின்றபொடிகளால்அக்கயிலாயம் வேறுநிறம்படைத்தது.—

பரம்புமேழிசைதும்புருநாரதர்பாடக்
கரும்புநேரிதழ்தாளவெண்ணகைநிலாக்கவினக்
குரும்பைமேலணிமுழுமணியிளவெயில்கொழிப்ப
வரம்பைமார்நடம்புரிதரும்பெருங்கயிலாயம்.

இ-ள். தும்புருநாரதர்கள் எழிசைகளைப்பாடும்படி கரும்பு போலமதுரமுள்ளஅதரம் அழகினைத்தரவும், முத்துகளையொத்த வெண்பற்கள் வெண்ணிலாவைத்தரவும், தென்னங்குரும்பையொத்த தனங்களின்மேல் அசைகின்ற மணிவடங்கள் இளவெயிலைத் தரவும், ரம்பாஸ்திரிகள் நடனஞ்செய்யும்படி விளங்குவது கயிலாயம்—எ-று. (௮)

கண்டிகாபரணங்களுநெற்றியிற்கண்ணும்
புண்டரங்களுஞ்சடைகளும்பொலியநாற்புயத்துத்
தொண்டரானவர்பணிவிடைபுரிந்துதற்சூழ
வண்டர்நாயகனுறைதரும்பெருங்கயிலாயம்.

இ-ள். ருத்திராக்ஷமணியாபரணங்களும், நெற்றியில் அக்கினிநேத்திரமும், திரிபுண்டரவிபூதியும், சடைமுடியும் விளங்கவும், நான்கு புயங்களும்பெற்றுச் சாரூப்பியப்பதமடைந்துள்ளதொண்டர்கள் பணிவிடைசெய்துகொண்டு தம்மைச்சூழவும் பரமசிவம் வீற்றிருக்கப்பெற்றது பெரியகயிலாயம்—எ-று. (௰)

இருவினைத்தருமுக்குணவலைகளையெறிந்து
பொருவிலுத்தமர்பிறவியாங்கரையறப்பொருதும்
விரவருட்டிரைவிதிர்த்தெழுமானந்தவெள்ளத்
தருவியற்புதந்தருவதுபெருங்கயிலாயம்.

இ-ள். இருவினைகளைத்தருகின்ற முக்குணமாகிய மலைகளையெறிந்து ஒப்பில்லாத உத்தமர்கள்செனனமாகிய கரையிடியப் பொருதுபொருந்திய அருளாகிய அலைகள்பரந்தெழுகின்ற ஆனந்தவெள்ளமாகிய அருவியின் அற்புதத்தைத்தருவது பெருங்கயிலாயம்.

என்றுபற்பலவிதங்களாற்றேசிகனிசைத்தா
னன்றுநன்றெனமகிழ்ந்துசாவித்திரனவில்வான்
கொன்றைவார்சடையிறையுறைகயிலையங்குவட்டுக்
கின்றுநான்கடிதேகுவெனெனச்சொல்லியெழுந்தான்.

இ-ள். இவ்வாறு தேசிகர் பலமுறையாகக்கூறினர். அதைக்கேட்ட சாவித்திரன் நன்றுநன்றெனமகிழ்ந்து சொல்லுகின்றனன். கொன்றைமாலையணிந்த நீண்டசடையினையுடைய பரமசிவம்வீற்றிருந்தருளும் கயிலாயகிரிக்கு இன்றுநான் விரைவாகச்செல்லுவேனென்று சொல்லி எழுந்திருந்தான்—எ-று. (௧௧)

அத்தடங்கிரிக்கேகுதலெளியதோவரிதோ
பத்துநாள்வழிக்கதிகமோகுறையுமோபகரீ
ருய்த்திடும்படிக்குறுதுணையாகுவாருளரோ
மூத்தனேனெனக்கறிஞர்காள்சொலுமெனமொழிந்தான்.

இ-ள். அந்தமலைக்குச்செல்லுதல் அரியதோ எளியதோ, பத்துநாள்வழிக்கு அதிகமோ குறையுமோ சொல்லுங்கள், அங்கேசேர்க்கும்படி துணையாகின்றவர்களிருக்கிறார்களோ மோக்ஷத்திலிருப்புள்ளவனாகிய எனக்கு முனிவர்களே சொல்லுங்களென்று சொன்னான்—எ-று. (௧௨)

செய்ய்தாமரைவதனமுங்குளிர்ந்தபுன்சிரிப்புந்
தையல்பாகமுநாகமுந்துலங்குசெஞ்சடையுங்
கையிலேந்தியகணிச்சியும்புள்ளிமான்கன்று
மையன்மேனியுங்காண்பதெப்பொழுதெனவயர்ந்தான்.

இ-ள். செந்தாமரைமலர்போன்ற திருமுகமும், குளிர்ந்தபுன்ன
கையும், பார்வதியாரிடப்பாகமும், சர்ப்பாபரணமும், பிரகாசியா
நின்ற செஞ்சடாமகுடமும், திருக்கரங்களிலேந்தியமழுவும், புள்
ளிபொருந்தியமான்கன்றும், பரமசிவத்தின் திருமேனிப்பொலிவு
ம், அடியேன்தரிசிப்பதெப்பொழுதோவென்றுசோர்வடைந்தான்.

வாசமாலையுமுப்புரிநூலணிமார்புங்
காசுலாவியவடங்களுங்கந்தரக்கறுப்புந்
தேசுமுன்றிருவழகுமென்விழிகளாற்றினோக்க
வாசையாயினேனெனச்சொலியந்தணனயர்ந்தான்.

இ-ள். இறையவனே, வாசனைபொருந்திய கொன்றைமாலையும்,
முப்புரிநூலணிந்த மார்பும், மணிகள்பொருந்திய சர்ப்பவடங்க
ளும், கண்டத்திற்கருமையும், தேசும் உன்றிருவழகையும், என்கண்
களால் தரிசிக்க விருப்பங்கொண்டேனென்றுசொல்லிச் சாவித்தி
ரனென்னும்பிராமணன் சோர்வடைந்தான்—எ-று. (௧௪)

வேறு. மயிலெனுமடந்தையும்பனைக்கைவள்ளலு
மயிலுடைமுருகனுநீயுமன்பரும்
கயிலையிலுறைதருங்காட்சியானது
மயிலுமென்விழிகளாற்பார்க்கவேண்டுமே.

இ-ள். மயில்போன்ற சாயலையுடைய பார்வதிதேவியாரும், ப
னைமரம்போன்ற துதிக்கையினையுடைய விநாயகமூர்த்தியும், வே
லாயுதமுடைய சுப்பிரமணியக்கடவுளும், தேவரீரும், அடியார்க
ளும், கயிலாயகிரியில்வீற்றிருக்குந் திருக்கோலத்தை அடியேன்
கண்களால் தரிசிக்கவேண்டுமே—எ-று. (௧௫)

மாசறுத்தசாவித்திரன்கூறியமாற்றம்
சுரர்க்கெலாநகையினைவிளைத்ததப்பொழு
தேசிகர்க்கெலாமுயர்ந்தவனுரைசெய்வான்
மீசனுற்றிடுங்கயிலைநீபுகுவதற்கெளிதோ.

இ-ள். முக்குற்றங்களை நீக்கிய சாவித்திரனென்னும்பிராமணன் கூறியவார்த்தையானது அங்கிருந்த முனிவர்களுக்கெல்லாம் நகையினையுண்டாக்கிற்று. அப்பொழுது தேசிகர்களுக்கெல்லாம் உயர்ந்ததேசிகர் மொழிகின்றார். சிறியவனே பரமசிவம்வீற்றிருக்குங் கயிலை நீசெல்லுவதற்கெளிதோ—எ-று.

(கரு)

ஈசராலயமெழுகுவார்திருவலகிடுவார்
வாசமாலிகையுதவுவார்மலர்ப்பொழில்வைப்பார்
தூசுசந்தனமுதவுவார்விளக்குடன்றூப
மாசையாலரற்குதவுவாரம்மலையடைவார்.

இ-ள். சிவாலயத்தை மெழுகுகின்றவர்களும், திருஅலகிடுகின்றவர்களும், வாசனைபொருந்திய திருப்பள்ளித்தாமங் கொடுப்பவர்களும், திருநந்தவனம்வைப்பவர்களும், திருவாடையும்-சந்தனமுங் கொடுப்பவர்களும், திருவிளக்குந் தூபமும்-அன்புடன் பரமசிவத்துக்குக்கொடுப்பவர்களும், அந்தக்கிரிக்கு அடைவார்கள்.எ-று.

மஞ்சனப்புனலுதவுவார்வலஞ்செய்துவருவார்
நெஞ்சகத்தினிலவன்றிருவடியினை நினைவார்
பஞ்சுரத்திசைபாடுவாராடுவார்பணிவா
ரஞ்செழுத்துணையாடுவாரம்மலையடைவார்.

இ-ள். திருமஞ்சனதீர்த்தங் கொடுப்பவர்களும், பிரதக்ஷிணஞ் செய்கின்றவர்களும், மனதில் அவருடைய திருவுருவத்தைத் தியானிப்பவர்களும், பஞ்சுரமென்னும்பண்ணுடன் பாடுகின்றவர்களும், ஆனந்தக்கூத்தாடுகின்றவர்களும், பணிகின்றவர்களும், பஞ்சாக்ஷரஞ் செபிக்கின்றவர்களும், அந்தக்கிரியையடைவார்கள்—எ-று.

அட்டமூர்த்தியையருச்சனைபுரிந்தருளறவோ
ரெட்டியோகமுங்குறைவறவியற்றியவியல்போர்
சிட்டராயவர்மகிழ்வுறத்திருப்பணிசெய்தோ
ரிட்டமாயதற்குதவினோரம்மலையிருப்போர்.

இ-ள். அஷ்டமூர்த்தமான பரமசிவத்தைப்பூசித்த புண்ணியவர்களும், அஷ்டாங்கயோகங்களுங் குறைவறச்செய்த இயல்பினையுடையவர்களும், சிஷ்டராகிய சிவனடியார்கள்கண்டுமகிழும்படி

திருப்பணிசெய்தவர்களும், அந்தத் திருப்பணிக்கு உதவிசெய்த வர்களும் கயிலையிலிருப்பவர்களாம்—எ-று.

அஷ்டமூர்த்தமாவன—பிரிதிவு - அப்பு-தேயு-வாயு - ஆகாயம்-என்னும் பஞ்சபூதங்கள், சந்திரசூரியர்கள், ஆன்மா-என்றுசொல்லப்படும் எட்டுமாம். யோகம் எட்டாவன—இயமம்-நியமம்-ஆதனம்-பிராணாயாமம் - பிரத்தியாகாரம்-தாரணை-தியானம் - சமாதி - என்பவை. இந்தஎட்டுக்கும் விபரமெழுதிற்பெருகும். (௧௯)

இயாகமானவைபுரிந்தவரிமையவரிறைஞ்சப்
பாகசாதனன்பதவியிலனந்தநாட்பயில்வா
ராகமாகியேகொழுநரைவழிபடுமவர்கள்
போகபூமியிலமுதமுண்டவருடல்புணர்வார்.

இ-ள். யாகஞ்செய்கின்றவர்கள் தேவர்கள்பணியும்படி தேவேந்திரன்பதவியில் அநேகம்நாள் வீற்றிருப்பார்கள். உயிர்க்குடல் போலத் தத்தங்கணவர்களைத்தொழுகின்ற கற்புள்ளமாதர்கள் போகபூமியில் அவர்களுடன் அமுதமுண்டு சேர்ந்திருப்பார்கள்-எ-று.

கணவனுயிரும் - மனைவியுயிர்க்குடல்போலுமிருப்பது கற்பு. இந்தக்கற்புள்ளவள் கணவனிறந்தா லியல்பாகத் தானுமிறப்பள். பதியிறக்கக்கேட்டிறந்த பத்தினிபோல் என்பதனாலும் இரண்டுடற்குயிரொன்றாயினு மொன்பதனானுமுணர்க. (௨௰)

போரகத்தினிலிறைவன்முன்னுயிர்விடப்பொருநோர்
வீரபத்திரபுவனமாம்விசயமாபுரத்திற்
காரடக்கியகுழலியர்கனதனக்கரட
வாரணத்துடன்பொருதுகொண்டனுதினம்வாழ்வார்.

இ-ள். யுத்தமுகத்தில் தங்கள்அரசனுக்குமுன் உயிர்விடச் சண்டைசெய்பவர்கள் வீரபத்திரர்புவனமாகிய விசயபுரத்தில் மேகத்தையடக்கியதுபோன்ற அளகபாரமுள்ள தேவமாதர்களுடைய கனத்ததனமாகிய மதச்சுவடுபொருந்திய யானையுடன் பொருதுகொண் டனுதினம்வாழ்வார்கள்—எ-று.

அவ்வுலகத்துத் தேவமாதர் தனத்திற்புணர்ந்துவாழ்வார்களென் பதுகருத்து. போர்முகத்தில் தன்னுடைய அரசனுயிர் போய்விடுவதாய் நேரிடுமாகில் வீரனாயிருப்பவன் தன்னுயிரைக் காத்துக்

கொள்ள ஓடிவிடாமல் அவனுயிர்போவதற்குமுன் தன்னுயிர்போ ம்படி போர்செய்வது தருமம். (உக)

சந்திராதிபர்வானவர்தானவர்தலைவ
ரிந்திராதிபர்மாலயன்பதவிபோலெளிதோ
வந்தவானவர்பதமெலாங்கணத்திலேயழியு
நந்திவாழ்மலையழிவுறாதிருக்குமெந்நாளும்.

இ-ள். சந்திரசூரியர்கள்-வானவர்கள்-தானவர் தலைவர்கள்-இந்தி ரன்முதலிய திக்குப்பாலர்கள் - பிரமவிஷ்ணுக்கள் என்னு மிவர்க ளுடைய பதவிகள்போலயாவரும்அடைவதற்கெளியதோ அந்தத் தேவர்களுடைய பதவிகளெல்லாம் க்ஷணப்பொழுதுக்குள் அழிந் துவிடும், பரமசிவம்வீற்றிருக்குங் கயிலைமலை அழிவில்லாமல் எந் நாளுமிருக்கும்—எ-று.

இதனை பூழிதோறேருங்குமோங்கல் என்பதனுனுமுணர்க. தான வர்-அசுரர்-இராக்கதர் - எனமூன்றுபிரிவு. மாபலிமுதலானவர்கள் தானவகுலம், சூரபன்மன்முதலானவர்கள் அசுரகுலம், இராவணன் முதலானவர்கள் இராக்கதகுலம். (உஉ)

கயிலைபுக்கவரனந்தனூர்பதவியிற்கலப்பர்
பயிலுமங்கவர்சதாசிவர்புரத்தினிற்பதிவர்
செயிரகன்றபினுசிதர்பதவியைச்செறிவ
ருயர்வரத்தினாற்பரசிவன்றிருவடியுறைவர்.

இ-ள். கயிலாயகிரியிற்சேர்ந்தவர்கள் அநந்தேசருடைய பத வியிற்சேர்வார்கள். அங்குச்சேர்ந்தவர்கள் பின்பு சதாசிவபுரத்திற் சேர்வார்கள். மாயாமலம்நீங்கினபின் ஆசிதர்பதவியிற் சேர்வார் கள். அங்குப்பெற்ற மேலானவரத்தினால் பரசிவன் திருவடியிலு றைவதாகிய சாயுச்சியபதவியை அடைவார்கள்—எ-று. (உ௩)

சுந்தரன்சிவவேதியன்றம்பிரான்றோழ
னந்தவேதியன்றான்முதலாகவுமனையா
னெந்தையார்திருவருளினால்வரவிடும்யானை
வந்தபோதலாலடைவதாயிருந்ததோமறையோய்.

இ-ள். பிராமணனே இன்னமுஞ்சொல்லுகிறேன்கேள் ஆலால சுந்தரர் - ஆதிசைவப்பிராமணர் - தம்பிரான்தோழரென்னுமந்தப்

பிராமணசிரேஷ்டர் இந்தவுலகத்தில் திருவவதாரஞ்செய்வதற்குப் பரமசிவம் காரணராயிருந்தும் அந்தச் சுந்தரமூர்த்திசுவாமிகள் நம்மிறைவர்திருவருளால்வரவிட்ட யானைவந்தபோதல்லாமல் கயிலாயத்தை அடையும்படியிருந்ததோ—எ-று. (௨௪)

தூண்டுவெண்டிரைவாரியைக்கடந்திடுந்தோன்றல்
பூண்டபேரருணாவினுக்கரையரப்பொருப்பைக்
காண்டுமென்றுளமுயற்சியாற்சென்றதுகாணார்
மீண்டுவந்தனரறிந்திலையோமறைவேந்தே.

இ-ள். வேதியனே அலைகளையெறிகின்ற சமுத்திரத்தைக் கற்றூண்தெப்பமாகக்கடந்துவந்தஇறைவராகிய பரமசிவத்தின்பேரருள் பூண்ட திருநாவினுக்கரையர் அந்தக்கயிலைமலையைத்தரிசிப்போமென்று மனதிலெண்ணங்கொண்டுசென்று அதனைத்தரிசிக்காமல் திரும்பிவந்துவிட்டனர். அதை நீஅறியாயோ—எ-று. (௨௫)

அன்னையென்றரன்மொழிந்திடுமன்புடையரிவை
முன்னரேழிசைமொழிந்திடுமருங்கொடிமுதலாய்
தன்னுடம்பினிற்றசையினையிழிவெனத்தள்ளிப்
பின்னரல்லவோகயிலையிலடைந்தனள்பெரியோய்.

இ-ள். அம்மையேயென்று பரமசிவன் திருவாய்மலர்ந்தருளப்பெற்ற அன்புள்ளமாதும் முன்னமேழிசையுடன்கூடியமுத்தபதிகமொழிந்தஅருங்கொடிபோல்பவரும் யாவருக்குமுதன்மையான தாய்போல்பவருமாகிய காரைக்காலம்மையார் தன்னுடம்பிலிருக்குந்தசையை யிழிவெனத்தள்ளிப் பின்பல்லவோ கயிலையிலடைந்தனர் பெரியோய்—எ-று.

ஏழிசைபாடிய அருங்கொடிஎன்பதற்கு - ஏழிசைபாடிய கலாவதியெனப் பழையவுரையிலிருக்கின்றது. திருத்தொண்டரிலெடுத்துச்சொல்வதே புராணிகர்கருத்து. அன்றியும் இருவரைச்சேர்த்துச்சொல்வது அவர்கருத்தாயின தம்முடம்பென்றுகூறுவர். (௨௬)

அந்தமால்வரைமானிடர்புகுவதற்கரிதா
முந்துமானிடப்பிறவியிலருந்தவமுடித்து
வந்தபுண்ணியபலத்தினால்வானவர்வடிவா
யெந்தையாருறைகயிலையிற்புகுதலாமென்றான்,

இ-ள். பெருமைபொருந்திய அந்தக்கயிலைமலை மனிதர்செல் லுவதற்கரியது, முன்னம்அடைந்த மனிதப்பிறவியில் அருந்தவஞ் செய்துவந்த புண்ணியபலத்தினால் தேவர்வடிவாய் நம்மிறைவர்வீ ற்றிருக்குங் கயிலையிலடையலாமென்றான்—எ-று. (உஎ)

அப்பிறப்பிலேகாணலாமெனச்சொலுமவரை
மெய்ப்பொருட்பயன்றெளிந்தசாவித்திரன்வெகுண்டு
துப்பிலர்க்குநீரிந்தவாசகங்களைச்சொல்லு
மிப்பிறப்பிலேகயிலையிற்புகுவனென்றெழுந்தான்.

இ-ள். மறுபிறப்பிலேகாணலாமென்றுசொன்ன தேசிகரை மெ ய்ப்பொருட்பயன்தெளிந்த சாவித்திரனென்பவன்வெகுண்டு வி வேகமில்லாதவர்களுக்கு நீரிந்தவார்த்தைகளைச்சொல்லும்,நானிந்த ப்பிறப்பிலேதானே கயிலையிற்சேர்வேனென்றெழுந்தான்—எ-று.

வேறு.அருமறையந்தணனருந்தவம்புரிந்
திருணிறைமிடற்றனையிறைஞ்சியேத்தியே
மருளறுமனத்துடன்வைகுநாளிலே
கரபுரியிறையவன்கனவிற்றோன்றினான்.

இ-ள். அப்படியெழுந்துசென்ற பிராமணன் அரியதவஞ்செய் து கருமைநிறம்பொருந்திய திருமிடற்றினையுடைய பரமசிவத் தைத்துதிசெய்துகொண்டு மயக்கம்நீங்கிய மனத்துடனிருக்கும் நாளில் கரபுரியிறையவனாகிய மார்க்கசகாயர் அவன்சொப்பனத்தி லெழுந்தருளினர்—எ-று. (உகூ)

விடிந்திடும்பொழுதினில்விரைந்துபாலியிற்
படிந்துநங்கோயின்முன்பணிந்துவைகினாற்
கடிந்துநின்வினைகளைக்கயிலைக்கேற்றுவோ
முடிந்ததுன்றவமெனமொழிந்துபோயினான்.

இ-ள். எழுந்தருளிய பரமசிவம் அவனைநோக்கிஅன்பனே விடி ந்தபோது நீவிரைந்துசென்று பாலிநதியில்ஸ்நானஞ்செய்து நம் முடைய ஆலயத்தில்வந்து பணிந்திருந்தால் உன்னுடையவினைக ளைக்கடிந்து கயிலைக்குஏற்றுவோம் உன்தவம் நிறைவேறிற்றென்று சொல்லி யெழுந்தருளினார்—எ-று. (௩௦)

நண்ணினன்காலையினதியிலாடினன்
புண்ணியன்கோயின்முன்போந்துமாந்தரை
மண்ணினின்றரன்றிருமலைக்குநண்ணுவேன்
கண்ணிமையுறாதுநீர்காணுமென்றனன்.

இ-ள். அந்தப்பிராமணன் சுவாமிகட்டளையிட்டபடி காலைப் பொழுதிலெழுந்து பாலிநதியில்முழுகி சிவாலயத்தின்முன்சென்று அங்கிருக்குமனிதரையெல்லாநோக்கி இம்மண்ணுலகத்திலிருந்து நான் இப்போது பரமசிவம்வீற்றிருக்கிற கயிலைக்குச்செல்லுகிறேன் நீங்கள்யாவரும் கண்ணிமைகூட்டாமல் காணுங்களென்றனன்—எ-று. (௩௧)

வள்ளறன்கோபுரவாயிற்கோயில்க
ளெள்ளுறவிடமறமனிதரொய்தினர்
கள்ளவிழ்கொன்றையான்கனகவாலயத்
துள்ளினும்விடையின்மேலொருவன்றோன்றினன்.

இ-ள். பரமசிவத்தினுடைய கோபுரவாயிலுள்ள ஆலயத்தில் எள்ளிட இடமில்லாதபடி மனிதர்கள்கூடினார்கள். அப்போது தேனுடன்மலர்ந்த கொன்றைப்பூமாலையணிந்த பரமசிவத்தினுடைய ஆலயத்திலிருந்து ரிஷபவாகனத்தின்மேல் அக்கடவுள்தோன்றினார்.

உத்தமனருளினால்வானவூர்தியொன்
றத்தலத்திழிந்ததவ்வந்தணாளனைக்
கைத்தலமிரண்டையும்பிடித்துக்கைகளால்
வித்தகவேற்றினன்விமானத்தேற்றினன்.

இ-ள். பரமசிவம்தோன்றினபோது அவருடைய அருளினால்ஒரு தேவவிமானமானது அந்தவிடத்தி லிழிந்தவுடன் ஞானசொரூபமான ரிஷபவாகனமுள்ள பரமசிவம் அந்தப் பிராமணனுடைய இரண்டுகைகளையும் தம்முடையதிருக்கரங்களாற்பற்றி விமானத்தேற்றினார்—எ-று. (௩௩)

மீனினம்விண்ணிலுமுதிருமேன்மைபோற்
றேனகுகற்பகமலர்கள்சிந்தின
வானகமெங்கணுமதங்கதூரிய
மானதுந்துமிமுழக்காழிபோன்றவே.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்



இ-ள். நக்ஷத்திரங்கள் ஆகாயத்திலிருந்து உதிருகின்றமேன்மை யோலத் தேனுடன்மலர்ந்த கற்பகமலர்கள்சிந்தின. ஆகாயமெங்கு முழவுகளும் சந்தோஷிப்பறைகளுமான தேவதுந்துமிகளினுடையமுழக்கம் கடலொலிபோன்றது—எ-று. (௩௪)

சிற்றிடைப்பங்கினன்விடைமுன்சென்றிடப்
பொற்றிரள்விமானமும்பின்புபோந்தது
கற்றவருற்றவர்கண்ணிற்கண்டனர்
மற்றவர்கண்களைமறைத்துச்சென்றதே.

இ-ள். சிறியஇடையையுடைய பார்வதிபாகனுகிய பரமசிவத்தினுடைய ரிஷபவாகனமுன்செல்லப் பொன்மயமாகிய விமானமும்பின்புசென்றது அதனை ஒதியுணர்ந்தஞானவான்கள் கண்களிற்கண்டார்கள், மற்றவர்கண்களை மறைத்துச்சென்றது—எ-று. (௩௫)

ஏரணிசடையினேறுமுன்செல
வாரணன்விமானமுமடுத்துச்செல்வது
காரணிகண்டனர்கயிலைமுன்செல
மேருவும்பின்வழிமேவல்போன்றதே.

இ-ள். அழகுபொருந்திய சடைமுடியுள்ள பரமசிவத்தினுடைய ரிஷபவாகனமுன்செல்ல அதன்பின் அந்தப்பிராமணனிருக்கும் விமானமுஞ்செல்லுதல் காளகண்டமுடைய பரமசிவம்வீற்றிருக்கும் கயிலைமுன்செல்ல மகமேருவானது அதன்பின்செல்வதுபோன்றது—எ-று.

ரிஷபம்-வெண்மைநிறம், விமானம்-பொன்னிறம், ஆதலால் கயிலையும் மேருவுஞ் செல்வதுபோன்றதென்றார். (௩௬)

வேறு. விண்கிளர்ந்துவிடையும்விமானமுந்
தண்கிளர்ந்தகயிலையிற்சார்ந்தன
கண்கணெஞ்சுகளிப்புறவேபதி
னெண்கணங்களெழுந்தெதிர்கொண்டதே.

இ-ள். ரிஷபவாகனமும் தேவவிமானமும் ஆகாயத்தில்பிரகாசித்துக் குளிர்ச்சிபொருந்திய கயிலையிற்சேர்ந்தன. அதைக்கண்டு கண்களும் மனமுங் களிப்படையும்படிப் பதினெட்டுக்கணங்களுமெழுந் தெதிர்கொண்டன—எ-று.

பதினெண்கணங்களாவன—தேவர்-சித்தர்-அசுரர் - தைத்தியர்-கின்னரர்-கருடர்-நிருதர்-கிம்புருடர்-காந்தருவர்-இயக்கர்-விஞ்சையர்-பூதர்-பைசாசர்-அந்தரர்-முனிவர்-நாகர்-ஆகாயவாசிகள்-போகபூமியர்கள். (௩௭)

முக்கணம்பன்கயிலையின்முன்னியே
மைக்கணுளும்வழிபடமன்னிரு
ணக்கணந்தனிலன்பரிலன்பரா
மெய்க்கணங்களைமேவினன்வேதியன்.

இ-ள். பின்பு பரமசிவம் கயிலையங்கிரியிற்சேர்ந்து மையிட்டிய திருநேத்திரங்களுள்ள பார்வதிதேவியார் உபசரிக்கும்படி வீற்றிருந்தார். அப்பொழுது அந்தப்பிராமணன் அன்பருக்குள்அன்பர்களாகிய சிவகணங்களுடன்சேர்ந்தான்—எ-று. (௩௮)

பரலோகச்சருக்கமுற்றியது.

ஆ-திருவிருத்தம்-௩௨௧.

---

# பாலனுக்குத்திருமுடிவளைத்தசருக்கம்.

சைவவேதியர்குலத்தினிலொருவனத்தலத்திற்
றெய்வநான்மறைப்பொருளதுமுடியவுந்தெளிந்தோ
னைவகைப்படுவேள்வியுமறுவகைத்தொழிலு
மெய்விதிப்படியறிந்தவைபுரிந்திடும்விதியோன்.

இ-ள். அந்த விரிஞ்சைமாநகரிலிருக்கும் சைவப்பிராமணருலத்தில்அவதரித்த ஒருபிராமணன், அவனே தெய்வத்தன்மையுள்ள நான்குவேதப்பொருள்முழுவதும் உணர்ந்தவன், ஐந்துவகைவேள்வியும் அறுவகைத்தொழிலும் உண்மைவிதிப்படி அறிந்து அவைகளைச்செய்யு முறைமையினையுடையவன்—எ-று.

ஐவகைவேள்வியாவன— பிரமயாகம்-தேவயாகம்-பிதிர்யாகம்-முனிவர்யாகம்-பூதயாகம். இவற்றுள் வேதமோதுதல்-பிரமயாகம், ஓமஞ்செய்தல்-தெய்வயாகம், பலிகொடுத்தல் - பூதயாகம், தர்ப்பணமுடித்தல் - பிதிர்யாகம், இரப்போர்க்கு உணவுமுதலியவை கொடுத்தலே - மானுடயாகம். அறுவகைத்தொழிலாவன—ஓ-தல்

ஓதுவித்தல்-யாகஞ்செய்தல்-யாகஞ்செய்வித்தல்-தானம்வாங்குதல்-தானங்கொடுத்தல்-என்பனவாம். (௧)

வேதவங்கமுங்கலைகளும்புராணமும்விரிப்போன்
சாதனங்களுல்வகையுமுள்ளுறும்பியதகவோ
ஆதனங்களுமிரண்டினுமமைந்திடுமறிவோன்
பூதமைம்புலன்கரணமுள்ளடக்கியபொறையோன்.

இ-ள். வேதாங்கம் ஆறும் - ஆறுசாஸ்திரங்களும் - பதினென் புராணங்களும் விவரித்துச்சொல்லுகின்றவன், நால்வகைச்சாதனங்களும் உள்ளத்திலமைந்திருக்குந் தகுதியையுடையவன், எட்டுவகை ஆதனங்களிலும்பொருந்திய அறிவுள்ளவன், ஐம்பூதங்களையும்-பஞ்சேந்திரியங்களையும்-அந்தக்கரணம்நான்கினையும் உள்ளடக்கிய பொறுமையையுடையவன்—எ-று.

ஆறுசாஸ்திரங்கள்—வேதாந்தம்-வைசேஷிகம்-பாட்டம்-பிரபாகரம்-பூருவமீமாஞ்சை-உத்தரமீமாஞ்சை-என்பவை. பதினெண் புராணங்கள்—மச்சியம் கூர்மம்-வராகம்-வாமனம்-பிரமம்- வைணவம்-பாகவதம்-சைவம்-இலிங்கம்-பௌடிகம்-நாரதியம்-காருடம்-பிரமகைவர்த்தம்-காந்தம்-மார்க்கண்டேயம் - ஆக்கினேயம்-பிர்மாண்டம்-பதுமம். இவற்றுள் சைவபுராணம்பத்து, விஷ்ணுபுராணம்நான்கு, பிரமபுராணமிரண்டு, அக்கினிபுராணமொன்று, சூரியபுராணமொன்று. நால்வகைச்சாதனங்களாவன—யோகசாதனம்-கர்மசாதனம்-ஞானசாதனம்-மந்திரசாதனம்-என்பனவாம். எட்டுவகையாதனமாவன—சுவத்திகம் - கோமுகம்-பதுமம்-வீரம்- கேசரி-பத்திரம்-முத்தம்-மயூரம்-சுகம்-என்பவை. இவற்றின்விவரமும் எழுதிற்பெருகும். (௨)

வாக்கியங்களின்வகைகளுமிலக்கணவகையு
நோக்கிமூவகையவத்தையுங்கழித்தநுண்ணுணர்வோன்
பாக்கியந்திருநீறுமஞ்செழுத்துமாப்படைத்தோன்
சாக்கிரத்தினிலதீதமுற்றிடும்பெருந்தகவோன்.

இ-ள். வாக்கியங்களின்வகைகளும் இலக்கணவகையும் விசாரித்து மூன்றுவகை அவஸ்தைகளையுங்கழித்த நுண்ணிய அறிவினையுடையவன், விபூதியும் பஞ்சாக்ஷரமுமே தனக்குப்பாக்கியமாகப்

படைத்தவன், சாக்கிராவஸ்த்தையில் அதீதாதவஸ்த்தைபொருந்திய பெருந்தகைமைப்பாட்டினையுடையவன்—எ-று.

வாக்கியங்களின்வகை—விசேடணம்-விசேடியம் - கர்த்தா-கர்மம்-கிரியை-என்பவை. இலக்கணவகை—எழுத்து-சொல்-பொருள்-யாப்பு-அலங்காரம். மூன்றுவகைஅவஸ்தையாவன—மேலாலவஸ்தை - கீழாலவஸ்தை - மத்தியாலவஸ்தை-என்பவை. (௫

சத்தியப்பொருளெப்படியப்படிதழைத்தோ
னுத்தமக்குணமெத்தனையவையெலாமுடையோன்
சித்திரப்பெயர்முனியெனச்சிவகதைதெளிந்தோ
னத்திரித்தவன்கோத்திரத்தவதரித்தருள்வோன்.

இ-ள். உண்மைப்பொருளெவ்வண்ணமோ அவ்வண்ணமாயிருப்பவன், உத்தமக்குணமெத்தனையோ அத்தனையுமுடையவன், சித்திரனென்னும்பெயருள்ள முனிவர்போலச் சிவகதைகள்தெரிந்தவன், அத்திரிமகாரிஷிகோத்திரத்தில்அவதரித்திருப்பவன்—எ-று.(௬)

வேறு. பயனுரும்பதிபசுபாசம்புகல்பலநூலுந்தெளிவோ
னியலாகும்பெயர்சிவநாதன்றினமிவனோடின்புறுமா
னயனுநந்தினிவடமீனுந்தொழுநலமார்பண்புடையா
டயவாமங்கவடருபாலன்சிவசருமாவென்பவனே.

இ-ள். பயனுள்ள பதிபசுபாசங்களைச்சொல்லுகின்ற ஆகமமுதலிய பலசாஸ்திரங்களையுமுணர்ந்தவன், சிவநாதனென்னுமியற்பெயரையுடையவன், நாள்தோறுமிவனுடன்இன்பமுற்றிருக்குமனைவி நயனநந்தினி அருந்ததியுந்தொழத்தக்க கற்புள்ளவள், அன்புள்ள அவள்பெற்றபுத்திரன் சிவசருமாவெனப் பெயருள்ளவன்—எ-று.

நவமாமைங்கணைமதனேவம்பலநடராசன்சுதனே
வுவமானஞ்சொலவரிதாமென்றினிதுலகோரின்புறவே
தவமேல்வந்திடவயதோரைந்தொடுதழையாநின்றிடுநாள்
பவரோகங்களைசிவநாதன்சிவபதமீதோன்றினனே.

இ-ள். பஞ்சபாணங்களையுடைய புதியமன்மதனோ, அம்பலநடராசன் திருமைந்தராகிய சுப்பிரமண்ணியரோ இவனுக்கு உவமானஞ்சொல்லவரிதாமென்று உலகத்தவர்கள் இன்பமுறும்படி முன்செய்ததபோபலமுங் கூடவளரும்படி அந்தப்புத்திரன் ஐந்து

வயதுடல்வளரும்நாளில் பிறவிப்பிணிகளை நீங்கின சிவநாதனென்னும்பிராமணன் சிவலோகமடைந்தான்—எ-று. (௬)

வேறு. அன்னைமகனோடுருகியாழ்துயருழந்தா
ளொன்னலர்கடாயமுடையோர்கள்பலர்கூடி
யின்னபொருண்மாடுபகிர்வீடுபகிரென்றே
மன்னுசிவசன்மனைவளைத்திடர்விளைத்தார்.

இ-ள். அப்போது அந்தத் தாயும்புத்திரனுமனமுருகி மிகுந்த துயரத்தையடைந்தார்கள். தாயாதிகளாகிய பலபகைவர்கூடி இந்த வீடுகளையும் இந்தமாடுகளையும்பங்கிடென்று அந்தச் சிவசன்மா என்னும் பிராமணப்பிள்ளையை வளைத்துக்கொண்டு துன்பப்படுத்தினார்கள்—எ-று. (௭)

ஞாதியனாமுட்செடியைநஞ்சையழறன்னை
யேதமொடழிப்பதுரமெய்துவதன்முன்னே
யாதலினவற்குரிமையானபொருளெல்லா
நீதியிலர்கைக்கொளநினைத்திவையுரைப்பார்.

இ-ள். ஞாதிகளையும்-முட்செடிகளையும்-விஷத்தையும் - தீயினையும்-அவைகள் பலப்படுவதன்முன்னே அழிக்கவேண்டியதாதலின் அந்தப் பிராமணச்சிறுவன் பெரியவனாவதற்குமுன் அவனுக்குஉரிமையான பொருளையெல்லாம் நீதியில்லாதஞாதிகள் அபகரித்துக்கொள்ள நினைத்து இந்தவார்த்தைசொல்லுகிறார்கள்—எ-று. (௮)

அன்றுமுதலின்றளவுமர்ச்சனைபுரிந்தோ
மின்றுனதுபூசைமுறையெங்கண்முறையன்றே
சென்றுபுரிபூசையதுசெய்யமுடியாதே
லொன்றுபுரிகாணிகளையொற்றியெழுதென்றார்.

இ-ள். உன்தகப்பனிறந்துபோனநாள்முதலின்றுவரைக்கும் நாங்கள்பூசைசெய்தோம், இன்றுஉன்பூசைமுறை எங்கள்பூசைமுறையன்று ஆதலால் நீயின்றுசென்றுபூசைசெய் அதுசெய்ய உன்னால் முடியாவிட்டால் உனக்குச் சொந்தமாயிருக்கிறகாணிகளையெங்களுக்கு ஒற்றியாகஎழுதென்றார்கள்—எ-று. (௯)

அல்லதெனில்விற்றுவிடுவன்னைமடவாணீ
சொல்லவறியாயிதுதுணிந்தபொருளென்று

ரில்லளவுமெய்தி * யுனதாயைவினவென்றார்
நல்லதமரீதுசொலநம்பியுநடந்தான்.

இ-ள். அப்படியல்லாவிட்டால் அந்தக்காணிகளைவிற்றுவிடு,உன் தாய் பெண்பால் நீயோ உத்தரவுசொல்லத்தெரியாதவன், ஆதலால் எதுக்கும் உன்வீட்டுவரைக்கும்போய் உன்தாயைக் கேட்டுக்கொண்டுவாவென்றார்கள். இவ்வாறு அந்தப்பிராமணர்கள்சொல்ல அந்தச் சிறுவனும்நடந்தான்—எ-று.

* உனதுஆயையெனப் பதம்பிரிக்க அவர்களிடத்து இழிவு தோன்ற நல்லதமரென்றார். ௧௦)

தாயமுடையோர்மொழிதருயுடனுரைத்தா
ளுபுமிவைகைக்கொளவியற்றினர்களையா
மாயமெனநொந்துகைவயிற்றிடையில்வைத்தாள்
பாயலில்விழுந்தனள்பதைத்தனள்கலுழ்ந்தாள்.

இ-ள். தாயாதிகள்சொன்னதைத் தாயுடன்சொன்னான், அவள் அப்பாமகனே அவர்களிந்தக் கோயின்முறைப்பூசையை யபகரித்துக்கொள்ள இந்தமாயஞ்செய்தார்களென்றுவருந்தி வயிற்றில்கையைவைத்துக்கொண்டு பாயலில்விழுந்துபதைத்துஅழுதாள்.எ-று.

ஆருமிலைநங்கடுணையாருமிலைநண்போர்
தேரிலுறவோருமிலர்தெய்வபலமின்றே
பாரிலெனைமானுமொருபாவியருமுண்டோ
யாருதவியாவரினியாதுகதியென்றாள்.

இ-ள். நமக்குத் துணையாருமில்லை, நட்பாயிருப்பவர்களும் யாருமில்லை, யோசிக்குமிடத்தில் சுற்றத்தாருமில்லை, தெய்வபலமுமில்லை, பூமியிலென்னையொத்த பாவிகளுமுண்டோ இப்படிக்கொத்தபாவியாகிய எனக்கு ஆருதவியாவர், நமக்கென்னகதியிருக்கின்றதென்றாள்—எ-று. (௧௨)

இன்னலையொழித்திடுவதேழையடியார்கள்
சொன்னதுமுடிப்பதிறைதூயதொழிலென்றே
யன்னையுநினைத்தமலனாலயமுனெய்திச்
சந்நிதியில்வந்துவிழுதாரைவிழநின்றாள்.

இ-ள். ஏழையடியார்கள் துன்பத்தையொழிப்பதும் அவர்கள் நினைத்ததை நிறைவேற்றுவதும் மார்க்கசகாயருடைய தூயதான அருட்செய்கையேயென்று நினைத்து அந்தத்தாயானவள் சுவாமி யினுடைய கோயிலுக்குமுன்போய்ச் சந்நிதியில்வந்து கண்ணீர் பெருகும்படி அழுதுகொண்டுநின்றாள்—எ-று. (கங)

ஏத்தினளிறைஞ்சினளேனேழைமகவுய்யக்
காத்தருளுவீர்பழையகாணியழியாதே
வாய்த்ததுணையாரினிவழித்துணைவரோகண்
பார்த்தருளுவீரிதுபணித்தருளுமென்றாள்.

இ-ள். சுவாமியைத்துதித்துப்பணிந்து சுவாமீ என்னேழைமக னுய்யும்படி காத்தருளவேண்டும் பழையகாணியழியாமல் எங்களு க்கு உம்மையன்றி வாய்த்ததுணையினியாவர் மார்க்கசகாயரோ கிரு பைக்கண்பார்த்தருளும் இதைக் கட்டளையிடுமென்றாள்—எ-று.

கூற்றமெனவேபகைவர்கூடினர்களெங்கும்
வேற்றுமுகமானதினிவேறுதுணைகாணே
னாற்றவரிதென்றுயாரடைக்கலமுமக்கே
மாற்றமினிவேறிலைவழித்துணைமருந்தே.

இ-ள். எமன்போலப் பகைவர்களெங்குங் கூடினர்கள், எங்கும் வேற்றுமுகமாயிருக்கின்றது வேறேதுணையொன்றுங்காண்கிலேன் என்துயரத்தைச்சகிப்பதரிது, சுவாமிக்கே நாங்கள் அடைக்கலம் மா ர்க்கசகாயரோ அடியேன் விண்ணப்பஞ்செய்யவேண்டியது இனி யாதொருவார்த்தையுமில்லை—எ-று. (கரு)

முன்புபெறுபேறெமதுமுந்தினதடைக்காய்
பின்புபெறுபேறவர்கள்பேறலதுவேறே
வென்கணவன்மாய்தலினிளந்தலையறிந்தே
வன்புபுரிகின்றனர்வழித்துணைமருந்தே.

இ-ள். முதன்மையாகிய சுதந்தரப்பங்கும் எங்களுடையதே, மு தல்தாம்பூலமும் எங்களுடையதே, பின்னடையவேண்டியபங்கு அவர்களுடையதேயன்றி வேறேயுண்டோ என்கணவனிறந்தமை யால் நானிளந்தலைக் கைம்பெண்ணென்பதையறிந்து தாயாதியர் கொடுமைசெய்கின்றார்கள் மார்க்கசகாயரோ—எ-று. (கசு)

பிட்டுணவுவிற்குமுதுபேதைதுயர்கண்டோர்
கொட்டினொடுகூடைகொடுகூடலினடந்தா
யிட்டிளையளித்திடுமியற்கையுனதன்றோ
மட்டுவிரிசெஞ்சடைவழித்துணைமருந்தே.

இ-ள். பிட்டாகிய சிற்றுண்டிவிற்கும் ஒருகிழவியினுடைய துயரத்தைக்கண்டு அதைத்தீர்க்கும்பொருட்டு மண்வெட்டியுங் கூடையுமெந்திக்கொண்டு மதுரையில் கூலியாளாகநடந்தகடவுளே கருவுள்ளிருக்கும் உயிர்களுக்கும் ஆகாரங்கொடுத்து ரக்ஷிக்கிறதன்மை உன்னுடையதல்லவோ வாசனைபரந்த செஞ்சடையையுடைய வழித்துணைமருந்தே—எ-று. (௧௭)

சுந்தரனகற்றவொருதூதெனநடந்தாய்
மைந்தருடன்வாணன்மனைவாசலிலிருந்தா
யெந்தையொருவேடனிடுமெச்சிலைநுகர்ந்தா
யந்தநிலைகண்டுனதடைக்கலமதானேம்.

இ-ள். சுந்தரமூர்த்தி தூதாகஅனுப்ப அதனைஇழிவென்று திருவுளத்திற்கொள்ளாமல் பரவைவீட்டினுக்குச்சென்றாய், புத்திரர்களுடன் வாணசுரன்மனையில் காவலாயிருந்தனை, என்னையனே ஒருவேடனிட்ட எச்சிலையுண்டனை, அந்தக்கிருபையைக்கண்டு உன்னடைக்கலம் அடைந்தோம்—எ-று. (௧௮)

என்றிவைமொழிந்துதொழுதில்லமிசையெய்திக்
குன்றுமிருளூடுதுயர்கொண்டுதுயில்கின்றாண்
மன்றுணடமாடியவழித்துணைமருந்தர்
பொன்றரியவேதியர்கள்போலவெதிர்வந்தார்.

இ-ள். என்றிவ்வாறு முறையிட்டுவணங்கி மனையினிடத்திற்சேர்ந்து யாவருந் தத்தந்தொழில்விட்டுறங்கத்தக்க ராத்திரிகாலத்தில் துயரத்துடனித்திரைசெய்கின்றாள். அப்போது சிற்சபையில் நடனஞ்செய்த வழித்துணைமருந்தர் கெடுதற்கரிய ஒழுக்கமுள்ள ஒரு பிராமணன்போல் அவ்ளெதிரில்வந்தருளினார்—எ-று. (௧௯)

வேறு. என்பெருந்தாதைபோலவிருந்தநீரொழிவிலாலே
மன்பதையளிக்குமெங்கள்வழித்துணைமருந்தர்போலே

துன்பமதகற்றவேண்டித்தோன்றினீர்பெயரேதென்று
ளன்புடையணங்கேயுங்கட்கநாதியிலுறவாமென்றார்.

இ-ள். அடியேனுடைய தகப்பனார்போல இருக்கின்றநீர் அழ கினாலே உயிர்களைரக்ஷிக்கும் எங்கள் வழித்துணைமருந்தர்போலே துயரத்தைநீக்கவேண்டித் தோன்றினீர் பெயரென்னவென்றாள், அன்புள்ளமாதே உங்களுக்குநாம் அநாதியே உறவாமென்றார்.—

வழித்துணையிறைவர்நப்பேர்வழிபடுமடியார்க்கெல்லாம்
விழித்துணையாவோஞ்சைவவேதியர்வடிவந்தன்னை
யொழித்துநாமுறையேமந்தவுருவரனுருவமாகும்
பழித்திரண்டாகச்சொல்வார்பரகதிபுகுதாரென்றார்.

இ-ள். மார்க்கசகாயரென்றுசொல்லப்படுவது நம்முடையபெ யர், நம்மைத்துதிக்கும்அடியார்களுக்கெல்லாங் கண்போலத்துணை யாயிருப்போம், மேலும் நாம் ஆதிசைவப்பிராமணவேடத்தை ஒ ழித்திரோம், அந்தவேடஞ் சிவசொரூபமாம் அதைப்பழித்து அ துவேறென்று இரண்டாகப் பேதப்படுத்திச் சொல்லுகிறவர்கள் பரகதியடையார்கள்—எ-று. (உக)

ஒருத்திநான்சிறியன்பாலனுதவியாயொருவரில்லை
பெருத்ததுபகையென்றெண்ணிப் பிணங்கிடேலணங்குபோ
திருத்தகுகுளத்தேநாளைச்சிறுவனைமூழ்கச்செய்தால் [ல்வாய்
வருத்தமற்றிடுவாயென்றுமொழிந்தனர்மறைந்துபோனார்.

இ-ள். சுவாமீ நானேஒருத்தி, என்புத்திரனே சிறியன், எங்களு க்கு உதவியாயொருவருமில்லை, பகை அதிகரித்ததென்றெண்ணித் துன்பங்கொள்ளாதே திருமகளையொத்தவளே மகத்துவமுள்ளநம துதீர்த்தத்திலுன்மகனை நாளைக்குமூழ்கச்செய்தால் வருத்தம்நீங்கு வாயென்றுசொல்லி வழித்துணைமருந்தர் மறைந்துபோனார்.எ-று.

மற்றைநாளெழுந்துகாலைப்பொழுதினின்மகன்றன்னோடே
பெற்றதாய்தமதுவீதியாவணம்பெயர்ந்துநீங்கிக்
கற்றைவார்சடையான்கோயிற்கனககோபுரத்தையெய்திச்
செற்றலர்பலருங்காணத்திருக்குளக்கரையைச்சேர்ந்தாள்.

இ-ள்., மறுநாள்காலையிலெழுந்து மகனுடனே பெற்றதாயான வள் தங்கள்தெருவீதியைக்கடந்து மார்க்கசகாயருடைய பொன்

மயமான கோபுரத்தருகுசேர்ந்து பகைவர்களாகிய ஞாதிகள்பல ருங்காணத் தீர்த்தக்கரையைச்சேர்ந்தாள்—எ-று. (௨௩)

மைந்தனே நம்மையாண்டுவழிவழியடிமைகொண்டு
தந்தைதாய்குரவன்போல்வந்துதவியதலைவன்றாளைப்
புந்தியேலிருத்தியிந்தப்புனலிடைமூழ்கவென்று
ளந்தணர்திலகமன்னான்முழுகினனரனைவாழ்த்தி.

இ-ள். புத்திரனே நம்மையாண்டு சந்ததிபரம்பரையாக அடிமை கொண்டு இப்போது தந்தைதாய் குருப்போலவந்து உதவிசெய்த மார்க்கசகாயர்திருவடிகளை மனதில்தியானித்துக்கொண்டு இந்தத் தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்யென்றாள். பிராமணர்களுக்குத் திலகமொத்த அந்தப்பிள்ளை பரமசிவத்தைத் தியானித்துக்கொண்டு ஸ்நாநஞ்செய்தான்—எ-று. (௨௪)

மருவியேமுழுகுமைந்தன்வலச்செவிநடுவேமாறு
தரவணியரனேயென்றவரவமேமுழங்கிற்றந்தக்
கரணமுமலமுமாயகளைகளைந்திடையிற்புக்க
விருவினைவகையுநீங்கியருச்சனைக்கிறைவனானான்.

இ-ள். திருக்குளக்கரையிற்சேர்ந்து ஸ்நாநஞ்செய்த அந்தப்பி ராமணப்பிள்ளையின் காதினிடத்தில் இடைவிடாமல் அரகரா அர கராஎன்கிற ஓசையேமுழங்கியது, அதனால் அந்தக்கரணம் நான் கும் மும்மலங்களுமாகிய களைகளைக்களைந்து இருவினைவகையும் நீங்கிச் சிவார்ச்சனைக்குரியவனானான்—எ-று. (௨௫)

நெருக்குளத்தவர்கணெஞ்சினினைத்தவையளைத்துநல்குந்
தருக்குளத்திடையிற்றோன்றுந்தழற்கணனருளினாலே
திருக்குளத்திடையின்மூழ்கியெழுந்துதென்கரையிற்சேர்ந்தா
னுருக்குளத்தவத்தினானுஞ்சுகனுமொப்புடைமையுற்றான்.

இ-ள். ஒருவழிப்பட்ட உள்ளமுடையவர்கள் மனதில்நினைத்த வரங்களையெல்லாம் அநுக்கிரகஞ்செய்யும் தீப்பொறியைத்தருவ தான நெற்றியினிடத்தில்தோன்றிய தீக்கண்ணினையுடைய பரமசி வத்தின்திருவருளால் திருக்குளத்தில்முழுகித்தெற்கரையிற்சேர்ந்த பிராமணச்சிறுவன் குறுமையானவடிவமுள்ள அகத்தியனையும் சுக முனிவரையும் ஒப்புச்சொல்லத்தக்கவனானான்—எ-று.

நெருக்கு-உள்ளம்என்றும், தரு-குளத்திடையில்என்றும், உரு-குளத்தவன்என்றும் - பதம்பிரித்துப்பொருள்கொள்க. தருங்குளம்என்பது-தருக்குளமென வலித்தல்விகாரமாயிற்று. குளம்என்பது - நெற்றி. குள்ளம் என்பது - குளம்என இடைக்குறையாய் நின்றது. (உகூ)

வேறு.புரிநூறுவண்டுபுயமாரமுஞ்சிபுனைகோவணம்பொலியவே
திருநீறிலங்கமுதுகூடசைந்துசிகைதாழவங்கையிருநா
லொருநூறுகொண்டமணிமாலைதங்கவொளிவீசவந்துலவினு
னிருநூறுகண்கள்பெறவேண்டுநம்பியெழில்காணவந்தவர்களே.

இ-ள். முப்புரிநூலானது துவண்டு புயத்தினிடத்தில்பொருந்தவும், முஞ்சிப்புல்நாணுங்கோவணமும் அரையில்விளங்கவும், நெற்றியில்விபூதிபிரகாசிக்கவும், சிகையானது முதுகினிடத்தில்தொங்கியசையவும், அழகியகையினிடத்தில் நூற்றெட்டுருத்திராக்ஷம்பொருந்திய செபமாலையிருக்கவும், தன்மேனிப் பிரகாசம்வீசவும்வந்துலவினான். அப்போது அந்தச்சிறுவனுடையசௌந்தரியத்தைப் பார்ப்பதற்கு வந்தவர்களுக்கு இருநூறுநேத்திரங்கள் வேண்டும்.

வேறு.விழுப்பமானதுகண்டுகண்டனைவரும்வியந்தா
ரழுக்குநெஞ்சினேரவர்களுமதிசயமானு
ரொழுக்கமாகவேபணிந்தரன்கோயில்புக்குரவோன்
செழிக்குநான்மறைத்தபனமண்டபந்தனைச்செறிந்தான்.

இ-ள். அந்தமேன்மையைக்கண்டு யாவரும் அற்புதமடைந்தார்கள். பொறாமையானமனமுள்ள ஞாதிகளும் அதிசயமடைந்தார்கள். அந்தப்பிராமணப்பிள்ளை ஒழுக்கத்துடன்பணிந்து சிவாலயத்திற்சென்று செழிப்புள்ள நான்குவேதமுறைப்படிஅமைந்த தபனமண்டபத்திற்சேர்ந்தான் —எ-று. (உஅ)

தூயபொற்கலசத்துடன்பலமலர்தூபங்
கோயிலிற்பரிசாரகரவன்கையிற்கொடுத்தா
ராயிரக்கதிரண்ணறன்பூசையுமற்றும்
வாயிலிற்புரிபூசையுமியற்றியுள்வந்தான்.

இ-ள். பரிசுத்தமுள்ள பொற்கலசத்துடன் பலமலர்களுந் தூபங்களும் அவ்வாலயத்திலிருக்கும் பரிசாரகர்கள்கொடுக்கவாங்கி

ஆயிரங்கிரணமுள்ள சூரியபூசையு மற்றப்பூசையும் துவாரவாயிற் படியிற்செய்யும் பூசையுஞ்செய்து உள்ளேசென்றான்.எ-று.(௨௯)

சந்தியென்பவையிரண்டையுமுடித்திடுசைவ
னைந்துசுத்திகளியற்றியர்க்கியமிரண்டமைத்துச்
சுந்தரப்பெருங்கலசமொன்றெடுத்துநீர்சொரியக
குந்திநின்றனனுயர்ந்ததுதிருமுடிக்கொழுந்து.

இ-ள். வைதிகம்-சைவம்-இரண்டுக்குமுரிய சந்தியென்பவைக ளைமுடித்துக்கொண்ட ஆதிசைவப்பிராமணன் பஞ்சசுத்திகள்செ ய்து இரண்டருக்கியமுமமைத்துச் சுந்தரமுள்ள ஒருபெரியகலச மெடுத்துத் திருமஞ்சனஞ்செய்யத் தாழ்ந்துநின்றனன் சுவாமியி னுடைய திருமுடிக்கொழுந்தானது உயர்ந்திருந்தது—எ-று.

அஞ்சுசுத்தியாவது—பூதசுத்தி - தானசுத்தி - திரவியசுத்தி - மந் திரசுத்தி - லிங்கசுத்தி. அருக்கியமிரண்டாவது—சாமானியார்க்கி யம் - விசேஷார்க்கியம். (௩௦)

இருகரத்திலுமிவர்முடிதொடவரிதென்றே
கருதியெய்த்துநொந்தினியென்கொல்செயலெனக்கவன்றான்
பரகதிக்குவந்தருள்புரிபதவிசகாயன்
மரகதக்கொடியிடத்திலுன்றிருமுடிவளைந்தான்.

இ-ள். நம்முடைய இரண்டுகைகளால் இவருடையதிருமுடியை த்தொடுவது நமக்கு அரிதென்றுகருதி மனமிளைத்துவருந்தி இனி யாதுசெய்வதென்று துயரமடைந்தான். அப்போது பரகதிக்குவந் தருள்செய்த மரகதவல்லியம்மையை யிடப்பாகத்திலுடைய மார் க்கசகாயராகிய பரமசிவம் திருமுடியைவளைத்தார்—எ-று. (௩௧)

அலைவளைந்திடும்புவியிடத்துடனுயிரனைத்துந்
தலைவளைந்தனவளைந்தனவிமையவர்தருவுஞ்
சிலைவளைந்திடுஞ்செயலெனத்திசைதிசைசெறிந்த
மலைவளைந்தனவழித்துணையவர்முடிவளைக்க.

இ-ள். இவ்வாறு மார்க்கசகாயர் திருமுடிவளைந்தவளவில் சமுத் திரஞ்சூழ்ந்தபூலோகத்திலிருக்குமுடனுயிர்களெல்லாம் தலைவளைந் தன, தேவருலகத்திலிருக்கும் கற்பகவிருக்ஷங்களுந்தலைவளைந்தன,

மகமேருவளைந்ததன்மைபோல திக்குகள்கோணம்பொருந்திய மலைகள்வளைந்தன—எ-று. (௩௨)

என்புநெக்குநெக்குருகவென்னிதயத்திலிருப்பான்
மன்பதைக்கெலாமுயிருமாயுணர்வுமாய்வளர்ப்பா
னன்பருக்கெலாநினைத்திடும்வரத்தையுமளிப்பான்
வன்பருக்கெலாங்கொடியவன்றிருமுடிவளைத்தான்.

இ-ள். அன்பினால் எலும்பும் நெக்குவிட்டுருகும்படி யென்னுள்ளத்திலிருப்பவரும், ஆன்மகோடிகளுக்கெல்லாம் உயிரும் அறிவுமாயிருந்து ரக்ஷிப்பவரும், அன்பருக்கு நினைத்திடும்வரங்களையெல்லாம் அருள்செய்கின்றவரும், வன்பருக்கெல்லாங் கொடியவருமான மார்க்கசகாயர் திருமுடிவளைத்தார்—எ-று. (௩௩)

கங்கைமாநதிகுமுகுமென்றொலித்திடக்கடல்போற்
றிங்களானதுகவிழ்ந்துசிற்றமுதினைச்சிதற
வங்கைவார்சிலைநாரிபோற்றாழ்ந்திடவரவ
மங்கையாளுடனுறைபவன்றிருமுடிவளைத்தான்.

இ-ள். கங்காநதியானது சமுத்திரம்போலக் குமுகுமென்றொலிக்கவும், முடியில் சந்திரனானது கவிழ்ந்து துளித்துளியாக அமுதைத்துளிக்கவும், திருமுடியிலணிந்திருக்கும் நாகங்கள் அழகிய திருக்கரத்திலிருக்கும் பெரியவில்லிற்பூட்டிய வாசுகியாகிய நாண்போல்தொங்கவும், பார்வதிதேவியாருடன்வாழும் மார்க்கசகாயர் திருமுடிவளைத்தார்—எ-று. (௩௪)

ஆட்டினன்புனலாதனமூர்த்திமானடைவே
நாட்டினன்கலைசாத்தினனவமணிக்கலன்கள்
பூட்டினனானமுஞ்சந்தமுஞ்சாத்தினன்போதுஞ்
சூட்டினனமுதேந்தினன்காட்டினன்றூபம்.

இ-ள். பரமசிவம் திருமுடிவளைந்தவுடன் திருமஞ்சனஞ்செய்து அதன்பின்பு கிரமமாக ஆதனம்-மூர்த்தி-சிவம்-என்னும் இம்மூன்றையுந்தாபனஞ்செய்து பரிவட்டஞ்சாத்தி நவரத்தினாபரணமுந் தரித்துக் கஸ்தூரியுஞ் சந்தனமுஞ்சாத்தித் திருப்பள்ளித்தாமமுஞ் சூட்டித் திருவமுதுநிவேதித்துத் தூபாராதனையுஞ்செய்தான்.எ-று.

கோதுதீபமும்பலவுபசாரமுங்கொடுத்தான்
முதைதாளறவெறிந்தவன்பூசையுந்தந்தான்
பேதைநாயினுங்கடையனேன்பூசையும்பிழையுந்
தீதுநீபொறுத்தருளெனவணங்கினன்சிறுவன்.

இ-ள். தூண்டுகின்ற தீபமும் மற்றுமுள்ளவுபசாரமும்பணிமா றிப் பிதாவின்தாளைத் தடிந்தவராகிய சண்டேசநாயனார்பூசையுஞ் செய்து அறிவில்லாதவனும் நாயினுங்கடைப்பட்டவனுமாகிய அ டியேனுடைய குற்றங்களைச் சுவாமிகள்பொறுத் தப்பூசையையே ற்றுக்கொள்ளவேண்டுமென்று பணிந்தான்—எ-று. (௩௪)

வேறு. வாயாதிகன்மனமாதிகண்மாயாதிகண்மண்ணீர்
தீயாதிகளொளியாதிகளுடையார்தெரிவரியா
யாயாதியமகவாகியுமரிதாம்வடிவுடையாய்
தாயாதிகணலியாதருடலைவாசரணென்முன்.

இ-ள். வாக்குமுதலான கன்மேந்திரியங்களைந்தும், மனமுதலா ன அந்தக்கரணம்நான்கும், மாயாமலமுதலான மும்மலங்களும், பி ரிதிவி-அப்பு-தேயுமுதலான பஞ்சபூதங்களும், கண்முதலான ஐம் பொறிகளுஞ் சடமென்றுணராமலிருப்பவர்களாகிய அஞ்ஞானி கள் அறிதற்கரியகடவுளே, தாய்முதலான மக்களாகியும் யாவர்க் குந்தெரிதற்கரிய சோதிசொரூபமான அருள்வடிவமுள்ள கர்த்த னே, தாயாதிகளடியேனை வருத்தாதவண்ணம் கிருபைசெய்தருள வேண்டும் அடியேன் உன்னடைக்கலமென்று துதிசெய்தான்.எ-று.

கன்மேந்திரியம்ஐந்தாவன—வாக்கு-பாதம்-பாணி-பாயுரு-உபத் தம்-என்பவை. இவற்றின்செய்கை—வசனம்-கமனம்-தானம்-விச ர்க்கம்-ஆநந்தம்-என்பவை. அந்தக்கரணம் நான்காவன—மனம்-புத்தி-ஆங்காரம்-சித்தம்-என்பவை. இவற்றின்செய்கை—ஒருபொ ருளைநாடுதல் - அதனைநிச்சயித்தல்- அதனைக்கொண்டெழுதல் - தீர் மானித்தல்-என்பவை. மும்மலமாவன—மாயை-ஆணவம்-கன்மம்.

பிரியாவிடைபிரியாவிடைபிரியாவிடையுடையாய்
கரியானதினுரியாகியகலைமேவிடுதலைவா
வரியார்தொழவரியாயெனவாராமையுரைத்தே
பரிவாலன்மனைசென்றேகினைபலரோடுமகிழ்ந்தான்.

இ-ள். ஒருக்காலும்நீங்காத ரிஷபவாகனத்தையுடையகடவுளே, யானையினுடையதோலாகிய போர்வையை மேலேபோர்த்துக்கொண்டிருக்குமுதல்வனே, விஷ்ணுவுந்தொழுதற்கரிய அய்யனே, அடியேனுக்கு எக்காலமுந் தேவரீரைவிட்டுப் பிரியாதவிடை பிரசாதித்தருளவேண்டுமென்று ஆராமையை விண்ணப்பஞ்செய்து பரிவுடன் தன்மனைக்குச்சென்று சுற்றத்தாருடன் வாழ்ந்துகொண்டிருந்தான்—எ-று. (௩௮)

வேறு. வாணியாளுநாவுடையோனென்றுவியந்தமறையோனைப்
பேணிஞாதியவர்வணங்கிப்பணிந்தார்செல்வம்பெரிதுற்றார்
வேணியாளர்தலைவளைந்தாரென்றாலந்தவேதியற்குக்
காணியாளர்தலைவளைந்தவுரையும்வியக்குங்கட்டுரையோ.

இ-ள். சரசுவதிவாழும் நாவினையுடைய பிரமதேவனேயிவனென்று யாவருஞ்சந்தோஷித்த அந்தச்சிவப்பிராமணனை ஞாதிகள்யாவரும்விரும்பிப்பணிந்து மிகுந்தசெல்வத்தையடைந்தார்கள். சடாமுடியுள்ள பரமசிவம் திருமுடிவளைந்தாரென்றால் அந்தப்பிராமணனுக்குக் காணியாளர் தலைவளைந்தாரென்னுஞ்சொல்லும் வியக்கத்தக்ககட்டுரையோ—எ-று. (௩௯)

இந்தமாக்கதைபடித்தவர்செவிகளிலேற்றோர்
கந்தவேளெனக்கழைசிலைவேளெனக்கலையிற்
சந்தனாசலமுனியெனவுறைவரித்தலத்தி
னைந்துமாமுகன்பதவியிற்சிவனுடனணைவர்.

இ-ள். மகத்துவமுள்ள இந்தச்சரித்திரத்தைப் படித்தவர்களும் காதிற்கேட்டவர்களும் வீரத்திலும் அழகிலுஞ் சுப்பிரமணியர் போலவும், மன்மதன்போலவும், கல்வியில் சந்தனவிருக்ஷங்கள் சூழ்ந்த பொதிகைமலையிலிருக்கும் அகஸ்தியர்போலவும் வாழ்வார்கள். இந்தத்தலத்தில் திருக்கோவில்கொண்டுவீற்றிருக்கும் ஐந்து திருமுகமுள்ள பரமசிவத்தினுடைய பதவியில் அவருடன்கலப்பார்கள்—எ-று. (௪௦)

வேறு.மாறாத்தோறும்வருபுயன்மன்னுக
வீறாகிலைச்செங்கோல்செலக்காக

நாதனாகமநாடொறுமோங்குக
வேதம்வாழ்கவிரிஞ்சைவிளங்கவே.

இ-ள். மாதங்கள்தோறும் மழைபொழிவதாக அரசனானவன் குற்றமில்லாமல் செங்கோல்செலுத்தக்கடவனாக. பரமசிவத்தின் ஆகமநெறி நாள்தோறும்வாழ்வதாக வேதங்கள்வாழ்வனவாக விரிஞ்சைமாநகரீவாழ்வதாக—எ-று. (௪௧)

பாலனுக்குத்திருமுடிவளர்ந்தசருக்கமுற்றியது.

ஆக சருக்கம்-௮-பாயிரமுள்பட

திருவிருத்தம் - [illegible]௦.

---

## திருவிரிஞ்சைப்புராணம்

முற்றுப்பெற்றது.

# புத்தகவிளம்பரம்.

## பதிப்பித்தபுத்தகங்கள்.

| | |
|---|---|
| பெரியபுராணம்-க-க்கு-புத்தகம்-உ-கிரயம் | ரூபா - ௩ |
| திருக்கழுக்குன்றப்புராணமூலமுமுரையும்-புத்தகம்-க-க்கு- | ரூபா - க |
| திருவிரிஞ்சைப்புராணமூலமுமுரையும்-புத்தகம்-க-க்கு- | அணா - அ |
| மேற்படிபிள்ளைத்தமிழ்புத்தகம்-க-க்கு- | அணா - உ |
| இராமாயணத்தில் - அயோத்தியாகாண்டமூலம்புத்தகம்-க-க்கு | அணா-கஉ |
| மேற்படி-ஆரணியகாண்டமூலம்புத்தகம்-க-க்கு- | அணா-கஉ |

## பதிப்பித்துக்கொண்டுவரும்புத்தகங்கள்.

பழனித்தலபுராணமூலமுமுரையும்
கம்பராமாயணத்தில்உயுத்தகாண்டமூலம்
திருவாய்மொழிக்குபிரதிபதம்
திருவிளையாடற்புராணமூலமுமுரையும்

## பதிப்பிக்கப்படும் புத்தகங்கள்.

பாகவதமூலம்
பெரியபுராணமூலமுமுரையும்
பாகவதவசனம்
திருக்காளத்திதலபுராணமூலமுமுரையும்
சிதம்பரதலபுராணமூலமுமுரையும்
ஸ்ரீமஹாபாரதவசனம்
கம்பராமாயணத்தில்-பாலகாண்டமூலம்
மேற்படி-கிஷ்கிந்தாகாண்டமூலம்
மேற்படி-சுந்தரகாண்டமூலம்

மேற்கண்டபுத்தகங்கள் ம - ா - ா - ஸ்ரீ - வித்வான் - கா - சபாபதி முதலியாரவர்களாலும் திரிசிரபுரம்-வி-கோவிந்தபிள்ளையவர்களாலும் பார்வையிடப்பட்டது. வேண்டியவர்கள் சென்னை பெத்துநாயக்கன்பேட்டை சிரங்கப்பட்டணம் சுப்பராயமுதலியார்வீதியில்-உகூ-வது—கதவிலக்கமுள்ளவீட்டில்-புக்கத்தார் - கந்தசாமிமுதலியாரிடத்தில்பெற்றுக்கொள்ளலாம். வெளிதேசத்தார் தபால்சிலவுஅனுப்புவதுடன் தபால்முத்திரைக்கு-ரூபா-க-க்கு-க-அணா அதிகமாய் மாற்புவட்டம் அனுப்பவேண்டியது.

மகாமகோபாத்யாய, டாக்டர்
வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.